RAJA & CO SOLICITORS
We provide following Legal Services:
Conveyancing: Buying and Selling Houses, Flats & Business
- Criminal Cases
- Civil Litigation
- Family
- Immigration

TOOTING
10 Upper Tooting Road, Tooting Bec, London SW17 7PG
Tel: 020 8772 4900

COLLIERS WOOD
2A Robinson Road, Colliers Wood, SW17 9DJ
Tel: 020 8543 4974

We hold 'Legal Aid Franchise' in Immigration, Crime & Family

BILINGUAL FORTNIGHTLY

ஒரு பேப்பர்

ORU PAPER

FREE

PAPER - 07 ◆ ISSUE - 137 ◆ 10 FRIDAY DECEMBER 2010

SKYWAYS
Travel & Transpoort
338 Kilburn High Road, London, NW6 2QN
(2 Min walk from Kilburn Jubilee line station)
natashatravel@hotmail.com
Discounted rates to Worldwide Destinations
National Express, Eurostar, Budget Airlines
INDIA VISA SERVICES £15*
* From filled on pc only, £20.00 for hand written
Tel: 020 7328 1178 Fax: 020 7328 0021
Our staff speak Hindi, Gujarati and Enlgish
Subject to T's & C's

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM

மாமனிதர்
சிவநாயகம் ஐயா
1930 - 2010

நீங்கள் கருத்தரித்துக் கொள்வதில் பிரச்சினை உள்ளதா?

கருத்தரிக்க உதவுவதில் 20 வருட அனுபவம் உள்ள தமிழ்பேசும் வைத்திய வல்லுனருடன் உரையாடுங்கள்.

சினைமுட்டை பகிர்வதனையும் (Egg Sharing) அல்லது சினை தானம் செய்வதனையும் (Egg Donation) நாங்கள் ஊக்குவிக்கிறோம். முட்டை பகிரும் திட்டத்தில் முட்டை தானம் செய்வோருக்கு இலவச கருத்தரிப்பு சிகிச்சை அளிக்கப்படும். முட்டை தானம் செய்யும் திட்டத்தில் தானம் செய்பவருக்கு அவரது முயற்சிக்கு ஏற்ப நிதி ஈடு செய்யப்படும்.

மேலும் விபரங்களுக்கு தமிழில் தொடர்புகொள்ள உடன் அழையுங்கள்

HSFC
HARLEY STREET FERTILITY CLINIC
Director: Dr Geetha Venkat MD, FRCOG
43 Devonshire Street, London, W1G 7AL
Phone: +44 (0)20 7436 6838 Mail : info@hsfc.org.uk | Web:www.hsfc.org.uk

Ersan & Co
SOLICITORS

Ersans has a wealth of experience in providing specialist help and advice for Personal Injury claims. We offer a free assessment of your claim and a "No Win No Fee" package to ensure that no deductions are made from any compensation to which you may be entitled.

"We will make sure that you will receive 100% of your compensation and our service will not cost you a penny"

தனியாருக்கு ஏற்படும் காயங்களுக்கு நட்டஈடு பெறுவதற்கு உதவிசெய்வதில், 'எர்சன்ஸ்' (Ersans) சிறந்த அநுபவம் உடையவர்கள். உங்களுடைய விண்ணப்பத்தை இலவசமாகப் பரிசீலனை செய்து, 'வெற்றியில்லையேல் கட்டணம் இல்லை' என்ற அடிப்படையில் எவ்விதக் கழிவும் இன்றி உங்களுக்குரிய நட்டஈட்டுத் தொகை கிடைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளோம்.

உங்களுடைய நட்டஈட்டுத்தொகை 100 சதவீதம் உங்களுக்குக் கிடைக்கவும், எமது சேவைக்காக உங்களுக்கு எவ்வித செலவும் இல்லாதிருக்கவும் உறுதிசெய்வோம்.

ERSAN & CO SOLICITORS

7 Willoughby Road, Turnpike Lane, London N8 0HR
Tel: 0208 342 7070
Fax: 0208 342 7071 Mobile: 07816 646345
E-mail: info@ersans.co.uk

PRINCE JEWELLERY
22CT Gold & Diamond Jewellery
At Houslow in Best foods
Gift Item: Our speciality | Jewellery saving scheme | Money Transfer
Call us on
020 8814 9779
for all your enquiries

பரபரப்பான பங்கு சந்தையில் ஈடுபட்டு பணக்காரர் ஆக விரும்புகிறீர்களா?
அல்லது 65 வயதிலும் ஓய்வெடுக்காமல் கஷ்டப்படப்போகின்றீர்களா?
தொடர்புகளுக்கு
குமார் : 020 8546 3694

ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

VINCENT SOLICITORS

✓ மார்ச் 2010க்கு முன்னர் அகதி அந்தஸ்து விண்ணப்பம் கோரி நிராகரிக்கப்பட்டோருக்கு ஒரு வருடத்துக்கு மேலாக எதுவித முடிவும் கிடைக்காவிடில்

1. நிரந்தர வதிவிட உரிமை (Permanent Residency)
2. Sept 2010 புதிய தீர்ப்பின்படி வேலை செய்வதற்கான உரிமை ஒரு மாதத்தில் பெற்றுத்தரப்படும்.

✓ பிரித்தானியா, இலங்கை, பாஸ்போட் விணப்பம் மற்றும் Travel Document விண்ணப்பம்.
✓ PSW, மாணவர் விசா நீடித்தல் மற்றும் விசா நிராகரிப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்தல்.
✓ கைது செய்யப்பட்டு தடுப்பு முகாம்களில் உள்ளவர்கள் தொடர்பில் உயர்நீதிமன்ற விண்ணப்பம் மற்றும் தடுத்து நிறுத்துதல்
✓ Change of Course, College or University செய்து தரப்படும்
✓ பிரித்தானியச் சட்டத்தின் கீழ் திருமணம் செய்வதற்கு அனுமதி பெற்றுத் தரப்படும்.
✓ பலவருடங்களாக உங்கள் விண்ணப்பம் பல்வேறு காரணங்களால் சரியான முறையில் அனுமதிக்கப்படவில்லை என்பதை நாம் நன்கு அறிவோம்.
✓ ஆகவே நன்கு அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகள் குழுவினர் தமிழ்பேசும் மக்களுக்கான இலவச ஆலோசனை சேவை வழங்கி வருகின்றனர்.

020 8574 0666

11-13 Southall Road, Southall, UB1 1SU (ஹிமாலயா சினிமா எதிரே)

இலவச ஆலோசனைக்கு அழையுங்கள் 07870763570

குறிப்பு : போலி வாக்குறுதிகளை நம்பி ஏமாற வேண்டாம்.

FREE 3 YEARS WARRNTY & BARCODE PRINTER

GYPS Pest Control Services

லண்டன் மாநகரில் முதல் முதலாக தமிழர்களால் தமிழர்களுக்காக தொடங்கப்பட்ட ஒரே நிறுவனம்



எலி
சுண்டெலி
மூட்டைப்பூச்சி
கரப்பான்
எறும்பு
மற்றும் பல பூச்சிகள்

இவை அனைத்தையும் அழித்து உங்களுக்கு நிரந்தர பாதுகாப்பும் நிம்மதியான நித்திரையும் தருவதே எங்கள் சேவை.

உணவகங்கள், கடைகள், மற்றும் தொழிற்சாலைகளுக்கு Monthly or Quarterly Pest control vist மிகவும் மலிவான விலையில் ஆனால் மிகுந்த தரத்துடன் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு

07983 589 993
07723 467 012

ஒரு குறிப்பிட்ட அல்லது நீண்டகாலமான தோல்வியாதிகளால் அவதியுறுகின்றீர்களா?

பின்வரும் தோல் வியாதிகளிற்கு மூலிகை வைத்தியத்தின் மூலம் எம்மிடம் உங்களுக்கான சிகிச்சை உண்டு.

உங்களின் அனைத்து பிரச்சினைகளுக்கும் இங்கே தீர்வு உண்டு.
we may have herbal solutions for your Skin Problem

Eczema, Vitiligo, Psoriasis, Allergy, Itching, Blemishes, Acne, Pimples, Boils, Urticaria, Discolouration, Melasma etc.

உங்கள் தாம்பத்திய வாழ்க்கையில் சிக்கல்களா? காலத்தை வீணடிக்காமல் உடனே தொடர்புகொள்ளுங்கள்.

இன்றே எங்கள் சிறப்பான வைத்தியர்களுடன் தொடர்புகொள்ளுங்கள்.
(தமிழ் பெண் வைத்திய நிபுணரிடமும் தொடர்புகொள்ளலாம்)

herbalAid
10 Park Avenue, Southall, Middx UB1 3AQ
herbalaid@hotmail.co.uk

Tel : 02088430330 Mobile : 07546651898

M&K
MALIKS & KHAN
SOLICITORS

265 Dunstable Road Luton LU4 8BS
mandksolcitors@lawyer.com
Tel 01582 732503
Fax 01582 732533
www.mandksolicitors.com

IMMIGRATION

All cases including Asylum, Human rights, Nationality, Detention, Deportation, Bail and Appeals to IAC and High Court

PERSONAL INJURY

All cases including Road Traffic Accident, Accident at work and public places. We give 100% compensation **+ £300.00 Cash back** on successful completion of case subj to terms and conditions if you instruct us directly.

CONVEYANCING

Residential Freehold Purchase £350+VAT; Sale £299+VAT; Residential and Commercial property, Transfer, Assignment and extension of lease,

FAMILY LAW

Divorce, Child Contact Orders, Eviction etc.

Our staff can speak Tamil, Malayalam, Hindhi, Urdu and Pahari.

Accredited member of Law society in Immigration

பூராயம்

மகிந்தவுக்கு நன்றி

முள்ளிவாய்க்கால் சம்பவங்களுக்கு பிறகு முடங்கிக் கிடந்த புலம்பெயர் தமிழ் மக்களை துயிலெழுப்பிய தற்காக மகிந்த ராஜபக்சவுக்கு எங்கடை நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். அடிக்கடி நீங்கள் புலம்பெயர் நாடுகளுக்கு உங்கள் பட்டாளத்துடன் வரவேண்டும் என அன்பாக அழைக்கிறோம். அடுத்த முறை வரைக்கே உங்கடை நோனா வையும் கூட்டிக் கொண்டு வாங்கோ.

- தில்லை

சுகி சிவத்தை தாக்கியுள்ளீர்கள்

ஹரோ சித்தி விநாயகர் ஆலய கும்பாபிசேக படங்களை பிரசுரித் தமைக்கு நன்றி. சுகி சிவத்தை பலமாக தாக்கியெழுதியுள்ளதை வாசிக்க கஸ்ரமாக இருந்தது. தமிழ் இளசுகளின் படங்களை அட்டை யில் பிரசுரிப்பது தொடர்பாக அக்கறைப்படாதீர்கள், தொடர்ந்து பிரசுரியுங்கள்.

- த. செல்வரத்தினம்

சாத்திரி என்னை மன்னிக்கவும் !

ஒரு பேப்பரில் பிராஜேஸ்வரி என்பவரைப் பற்றி பயோ டேற்றா வந்த போது, அதனை எழுதிய சாத்திரி மீதும் ஒரு பேப்பர் மீதும் எனக்கு மிகுந்த கோபம் ஏற்பட்டது. ஒரு பேப்பர் காரர் பெண்களுக்கு எதிரானவர்களோ என சந்தேகப்பட்டேன். ஆனால் சிறிலங்கா அராசங்கத்தின் எடுபிடிதான் இந்த பிராஜேஸ்வரி என அண்மையில் அறிந்து கொண்டேன். பெண்களை மானபங்கப்படுத்தி கொலை செய்த சிறிலங்கா இராணுவத்துடன் நெருக்கமான தொடர்பை இந்த மனுசி பேணுகிறது என்றால் இது என்ன ஜென்மமோ தெரியவில்லை. பிசாசு ஆகத்தான் இருக்கும்.

- வனிதா

தயவு செய்து அவர்களை கேவலப்படுத்தாதீர்கள்!

இங்கு பசியில் அழும் குழந்தைக்கு ஒரு நேர பால் வாங்கி தர விரும்பாத நீங்கள்- பட்டினியில் மயங்கும் முதியோருக்கு ஒரு நேர கஞ்சி ஊற்ற விரும்பாத நீங்கள் தேசியம்! சுயநிர்ணயம்! சுயாட்சி! என்றெல்லாம் கூறி எங்களை உங்கள் நலனுக்கான பகடைக் காய்களாக்க முயற்சிக் காதீர்கள்.

- வாத திவாகரன்

அறிக்கை விடுவதற்குத்தானா நா.க. அரசு

நாடு கடந்த அரசாங்கம் என அமைக் கப்பட்டு அமைச்சர்கள் பிரதானிகள் எல்லாம் நியமிக்கப்பட்டாலும் எதுவும் நடப்பதாகத் தெரியவில்லை. அறிக்கைகள், பகிரங்கக் கடிதம், ஆய்வுகள், மறு ஆய்வுகள் என்பதை தவிர எதுவும் உருப்படியாக நடப்பதாகத் தெரியவில்லை. போர்க் குற்றங்கள் பற்றி நடவடிக்கைகள் மேற் கொள்வதற்காக டெல் மொறிஸ் என்று ஒரு அமைச்சரும் நியமிக்கப்பட்டிருக் கிறார். மகிந்த இலண்டனுக்கு வந்த போது, இவர் ஹொலிடே போய் விட்டாரா? அல்லது குளிரில் உறைந்து போனாரா? என்ன நடவடிக்கை எடுத்தார் என்பதனை மக்களுக்கு அறியத் தர வேண்டும்.

- மனோகரன்

விக்கிரமபாகுவும் நையப்புடைக்கப் பட்டுள்ளார்!

மாவீரர் தினத்திற்கு வந்து பேசிய விக்கிரமபாகு நாடு திரும்பியபோது கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து தாக்கப்பட்டிருக்கிறாராம். என்ன நடக்கும் எண்டு ஒண்டும் விளங்காமலோ இந்தாள் வந்தது. நல்ல மனுசன் எண்டாலும் ஒரு விளக்கம் கெட்ட ஆளாக இருக்கிறார்.

- மைலோ

கருணாவின் புதிய ஞானம்

இன்று கருணா இடம்பெயர்ந்து வாழும் மக்கள் தேவையற்று லண்டன் சென்ற ஜனாதிபதிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்து இலங்கையில் அமைதியாக வாழும் தமிழ் மக்களின். நிம்மதிக்கு இடையூறு விளைவிப்பதாக கூறுகின்றார். உண்மையில் எண்பதுகளில் தான் கண்டவற்றை சொல்லுகிறார் போலும். அப்போது மேற்கு நாடுகள் அமைதித் தீர்வுக்கு முயற்சித்த வேளையில் இந்தியா தான் தன் சுயநல நோக்கத்திற்காகவும், தனது செல்வாக்கு இலங்கையில் இருக்க வேண்டுமென்பதற்காகவும் ஆயுதங்களை அள்ளி வீசியும் போராட்ட பயிற்சி வழங்கியும் பல இயக்கங்கள் ஊக்குவித்தது. இப்போ கருணா அரசின் பங்காளியாகிவிட்டார். தமிழரின் உரிமை கிளற்சி அவருக்கு குந்தகமாகத்தான் இருக்கும்.

- தாஸ்

சாதி, சாதி, சாதி!

சாதி இது தமிழ் மக்கள் இரத்தங்களில் கலந்து அவர்களை பிடித்தாட்டும் ஒரு வியாதி. எனக்குத் தெரிந்த ஒரு ஐயா இருந்தார். அவர் மிகவும் சாந்தமானவர். அவரைப் பார்த்து அவர் மிதித்த புல் கூட சாகாதென்பார்கள். அப்படியானவர் ஒரு கோயிலின் தர்மகர்த்தாவாக இருந்தார். தமிழர் கூட்டணியின் செல்வாக்கு உள்ள நேரத்தில் அவர் தர்மகர்த்தாவாக உள்ள கோயிலின் கதவுகளை சாதி குறைந்த மக்களுக்காக திறந்துவிடும் ஒரு சூழல் உருவானது. உடனே எங்களால் மதிக்கப்பட்ட அந்த பெரிய மனிதன் தன் தர்மகர்த்தா பதவியையே துறந்து விட்டார். இதுதான் எங்கள் இரத்தத்தில் ஊறிய சாதி வியாதி.

- குமரன்

தமிழ் அதை தமில் ஆக்காதீர்

உங்களது 'பத்திரிகைத் தமிழ்' தமிழர்களுக்கும் தமிழ் மொழிக்குச் செய்யும் ஒரு மாபெரும் துரோகம். புலத்தில் இருந்து வெளிவரும் உங்கள் பத்திரிகை புலத்தில் வாழும் இளைஞர்களுக்கு ஒரு முன்மாதிரியாக விளங்க வேண்டியது அவசியமானதாகும். வட்டார வழக்கும் கொச்சைத் தமிழும் தேவையானபோது உபயோகிக்கப்பட வேண்டியவைதான். ஆனால் முன்பொரு காலத்தில் மணிப்பிரவாள நடை என்று தமிழையும் சமஸ்கிருதத்தையும் கலந்து பேசியது போன்று ஆங்கிலம், கொச்சைத் தமிழ், வட்டாரத் தமிழ் எல்லாவற்றையும் கலந்து புது மொழியை உருவாக்கி 'மெல்லத்தமிழ் இனிச் சாகும்' என்ற நிலைக்குத் தள்ளி விடாதீர்கள்.

- க.புவிநாதன்

போடய்யா வலையிலை

முன்பு உங்களது பத்திரிகையை இணையதளத்தில் வாசிக்கக் கூடியதாக இருந்தது. அந்த வசதியை இப்போது நீக்கிவிட்டீர்கள். இணைய தளத்தில் வருமானால், இலண்டனுக்கு வெளியிலிருப்பவர்கள், வெளி நாடுகளில் இருப்பவர்கள், இதழ்களைத் தவறவிட்டவர்கள் ஆகியோருக்கு உங்கள் பத்திரிகையை வாசிப்பதற்கு இயலுமானதாக இருக்கும். செய்வீர்களா?

- வதனி

> ஒரு பேப்பர் தொடர்பான உங்களுடைய கருத்துக்களைத் தற்பொழுது தொலைபேசி வாயிலாகவும் பதிவு செய்து கொள்ள முடியும்.
>
> பூராயம் பகுதிக்கான கடிதங்களைத் தொலைபேசியில் பதிவு செய்வதற்கான இலக்கம் 020 7043 4314.
>
> ஆ—ர்

உள்ளே எலியே (வெளியே)

ஒவ்வொரு இனத்திலும் ஐந்தாம் படை என ஒன்றாவது இருக்கும், சில இனங்களில் நூற்றுக்கணக்கில் இருக்கும். தமிழினத்தில் எத்தனை இருக்கிறது என்று உங்களுக்கு தெரிந்திருக்கும். இல்லாவிட்டால் அதில் ஒன்றின் கதையை எழுதுகிறேன். மரத்தை தறிக்கிற கோடாலிக் காம்புகள் போல் தமது இனத்தை சிதைப்பதே இவர்களின் ஒரே நோக்கமாக இருக்கும்.

கடந்த வியாழக்கிழமை லண்டனில் போர்க் குற்றவாளி மகிந்தவுக்கு எதிரான போராட்டம் நடந்ததை அனைவரும் அறிவீர்கள். இந்தப் போர் குற்றவாளிகளுக்கு எதிராக குளிரிலும் பனியிலும் தமிழ் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அவர்களது போராட்டத்திற்கு பயந்து வெளியில் திரிய அஞ்சிய மகிந்த சிறிலங்கா தூதரகத்திற்குள் ஒளிந்து கொண்டான். பேசுவதற்கு வேறு மேடை ஒன்றும் கிடைக்காததால், தூதரகத்திற்குள் ஒரு தேனீர் (அல்லது வேறேதாவது திராவகம்) விருந்தளித்துள்ளான். இந்த விருந்துக்கு அழைக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் சிங்களவர்கள். ஐந்தாம் படையைச் சேர்ந்த சில தமிழர்களும் அழைக்கப்பட்டார்கள். (அழைக்கப்பட்டார்களோ அல்லது நாண்டு கொண்டு போய்ச் சேர்ந்தார்களோ தெரியாது.)

இந்த ஐந்தாம் படைக் காரர்கள் யார் என்பதை ஊகித்தறிய முடியும் என்றாலும், தூதரகத்திலுள்ள சிங்கள ஐந்தாம் படையிலிருந்து சிலரது விபரங்கள் கிடைத்தன, நேசன் திருநேசன், தம்பிராசா ஜெயபாலன், ரறின் கொன்ஸ்ரன்ரைன், ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், விக்ரர் செருபிம், நடராசா சச்சிதானந்தம் ஆகியோரது பெயர்களை அவர்கள் தந்திருந்தனர். இவர்கள் மகிந்தவின் விசுவாசிகள் என்றாலும் பலத்த சோதனைக்குட் படுத்தப்பட்ட பின்னரே இவர்கள் உள்ளே அனுமதிக்கபட்டார்கள். உண்மையில் இவர்களை மகிந்த விசுவாசிகள் என ஏற்றுக் கொள்ள முடியாது, ஏனெனில் யார் எவர் தமிழனுக்கு எதிரியோ அவர்களுக்கெல்லாம் இவர்கள் விசுவாசிகள். அண்மையில் முன்னாள் றோ உளவாளியான சந்திரனை அழைத்து வந்து கூட்டம் போட்டது தான் இந்தக் கூட்டம்.

தூதரகத்தில் நடந்த நிகழ்ச்சிகள் எல்லாம் சிங்கள மொழியில் நடக்க, இந்தக் கும்பல் ஒன்றுமே புரியாமல் முழித்துக் கொண்டிருந்தது. மகிந்த உரையாற்றும் போது இவர்களில் தம்பிராசா என்பவர் எழுந்து 'இங்கிலிஸ் பிளீஸ்' என்று கேட்டாராம். ஆதனால் ஆத்திரமுற்ற சிங்களவர்கள் 'அடோ அப்பி ஒக்கம சிங்களயோ, தமுசட்ட தேரன்னத்தம் எலியட்ட பழயங்' (அடே நாங்கள் சிங்களவர்கள். உனக்கு விளங்காவிட்டால வெளியே போடா) எனக் கூச்சலிட ஆரம்பித்தார்களாம். வெளியே போனால் இவர்களை 'வரவேற்க' தமிழர்கள் காத்துக் கொண்டிருந்ததால் வெளியிலும் போக முடியாமல் ஆளை ஆள் பார்த்துக் கொண்டிருந்தார்களாம். ஒன்றும் விளங்காமல் முழித்துக் கொண்டிருந்த இதுகளில் ஒரு பெரிசு, அங்கிருந்த சிங்களப் பெண்ணின் மார்புப் பகுதியை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்ததாம். இதைக் கண்ட அந்தப் பெண் அருகிலிருந்த இளைஞனிடம் ஏதோ சொல்லவும் அவன் இவரை முறைத்துப் பார்க்க, பயத்தில் கண்ணை மூடிக்க கொண்ட பெரிசு அப்படியே நித்திரையாகி விட்டதாம்.

மகிந்த பேசி முடிந்ததும் அவருக்கு கிட்டச் சென்ற ராஜேஸ்வரியும், கொன்ஸ்ரன்ரைனும் யாழ் பல்கலைக்கழக உபவேந்தராக ரத்தினஜீவன் கூழ் என்பவரை நியமிக்குமாறு இரஞ்சிக் கேட்டனராம். அதற்கு 'பலமு' (பார்ப்போம்) என மகிந்த பதிலளித்தாராம். இதைச் சரக்காக வைத்து கூலுக்கு போட்டியாக உள்ள வசந்தி அரசரத்தினம், சண்முகலிங்கம் ஆகியோருக்கு எதிராக அவதூறுகளை கட்டவிழ்த்து விட்டுள்து இந்தக் கும்பல்.

'மகா ஆச்சார்ய மகிந்த மாத்தயாவுக்கு மூன்று மொழியும் தெரியும் அப்பிடியிருக்க ஏன் இவர் இப்படிச் செய்தார்' என்று குழம்பிப் போன தம்பிராசா அம்சா நானாவிடம் கேட்க, அட அதுவா இங்கை ரெலிபுரொம்ப்ரர் ஃபசிலிட்டி இல்லை என்று அவர் விளக்கமளித்தாராம்.

ஐந்தாம் படையின் செயலைக் கேள்விப்பட்ட பெரியவர் ஒருவர் 'எவ்வளவு அவமானப்பட்டாலும் நக்கிறதை மட்டும் இதுகள் விடவில்லை' என்று கருத்து வெளியிட்டார். கூடவே, நக்கிற நாய்க்கு செக்கென்ன சிவலிங்கம் என்ன என்று கூறிவிட்டு அவர் ஆறுதலடைந்தார்.

இன்னமும் வரும்...

- மதமுலன்ன லங்கா லீக்ஸ்

ஒரு பேப்பர்
ORU PAPER

FRIDAY, DECEMBER 10, 2010, ISSUE 137

மீண்டும் ஏமாற்றுகிறது கூட்டமைப்பு!

வடக்கு-கிழக்கில் அதிகமான நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்டவர்கள் என்ற வகையில் அம்மக்களின் பிரதிநிதிகளாக நடந்து கொள்ள வேண்டிய கடப்பாடு தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு இருக்கிறது. ஆனால் அவர்களது அண்மைய நடவடிக்கைகளை நோக்குமிடத்து, அவ்வாறு நடந்து கொள்ளாமல், பிற சக்த்திகளின் இழுப்பிற்கு ஏற்ப காரியமாற்றுவதாகத் தெரிகிறது.

சிறிலங்கா பாராளுமன்றத் தேர்தலில், ஒற்றுமையை வலியுறுத்தி, தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை என்ற தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கையினை தமது கொள்கைகளாக முன்வைத்ததன் மூலம், கூட்டமைப்பினால் மற்றைய அரசு சார்புத் தமிழ்க் கட்சிகளை வெற்றி கொள்ள முடிந்தது. தேர்தல் முடிந்ததுமே, இக்கொள்கைகளை பற்றி எதுவும் பேசக் கூடாது என்ற கடுமையான உத்தரவினை அதன் உறுப்பினர்களுக்கு தலைமைப் பீடம் பிறப்பித்துள்ளது.

இந்திய அரசின் உதவியுடன், சிறிலங்கா அரசுடன் பேசி அரசியல் தீர்வினை பெற்றுக் கொள்ள முடியும் எனவும், அதற்கு சிறிலங்கா அரசாங்கம் உடன்படாத பட்சத்தில் அமைதி வழிப் போராட்டங்களில் ஈடுபடப் போவதாகவும் கூட்டமைப்பின் தலைவர்கள் அறிவித்தார்கள். இன்று வரை, இந்திய அமைச்சர்கள் கொழும்புக்கு வந்தால் சந்திப்பது, மகிந்த இராஜபக்சவின் அழைப்புக்காக காத்திருப்பது என்பதனைத் தவிர வேறு உருப்படியான காரியம் எதனையும் அவர்கள் மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

சிறிலங்காவின் போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச சமூகம் அக்கறை கொண்டு சில முன்னெடுப்புகளை மேற் கொண்டு வருகையில், கூட்டமைப்பினர் இவ்விடயத்தில் எதுவித கருத்துகளும் வெளியிட மறுத்து வருகிறார்கள். அண்மையில் சிறிலங்கா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை எதிர்த்து உரையாற்றிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வாக்களிப்பில் கலந்து கொள்வதை தவிர்த்துக் கொண்டார்கள். இது சிறிலங்கா அரசாங்கத்திற்கு காட்டும் நல்லெண்ண சமிக்கை என்று வேறு சமாதானம் சொல்லி வருகிறார்கள்.

ஆட்சியில் உள்ள அரசாங்கத்தை நம்பிச் செயற்படுவதும், பின்னர் ஏமாற்றப்பட்டதாக கூறி, அடுத்த தேர்தலில் வீராப்பு பேசுவதும் கூட்டமைப்பின் முன்னைய அவதாரங்களான தமிழரசு கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் தந்திரமாக இருந்துவந்தது. கூட்டமைப்பும் அதே உத்தியைப் பயன்படுத்தி மக்களை ஏமாற்றி வருகிறது.

ஒரு பேப்பர்

வணக்கம்!

ஐயா என எங்களால் அழைக்கப்பட்ட மூத்த பத்திரிகையாளர் திரு. சுப்பிரமணியம் சிவநாயகம் கடந்த வாரம் (நொவெம்பர் 29 திங்கட்கிழமை) காலம் ஆகினார் என்பதனை அறிந்திருப்பீர்கள். அவரது நிழலில் வளர்ந்தவர்கள் என்ற வகையில் அவரது இழப்பின் துயரினை நாம் உணருகிறோம். இறுதி நாட்களில் கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டிருந்த அவருக்கு மரணம் வலிகளிலிருந்து விடுதலையைக் கொடுத்திருக்கிறது. ஆனால் எமக்கு ஆலோசனை வழங்க, அறிவுரை சொல்ல வேறு யார் இருக்கிறார்கள்?

*Hot Spring பத்திரிகை வெளிவந்த காலத்தில் அவரது அறிமுகம் எமக்கு கிடைத்தது. அவருடன் இணைந்து பணிபுரியும் அரிய வாய்ப்பும் கிடைத்தது. அந்த அனுபவத்திலிருந்து உருவானதே **ஒரு பேப்பர்**. **ஒரு பேப்பர்** ரை வெளியிட விரும்பியபோது, அவரினது உதவியைக் கேட்டோம், அவர் ஒத்துக் கொண்டமையே எமக்கு கிடைத்த முதல் வெற்றியாக இருந்தது. ஆரம்ப இதழ்களில் ஆங்கிலத்தில் ஆசிரியர் தலையங்கத்தை எழுதினார், எமக்கு ஆலோசகராகவும் இருந்தார். பல்வேறு சந்தர்ப்பங்களில் அவரது ஆலோசனையை பெறவேண்டியிருந்தது. கொழும்பிற்கு சென்ற பின்னரும் அவருடன் தொடர்பு கொண்டு ஆலோசனையைப் பெற்றோம். அவர்தான் எங்களுக்கு துணிச்சலாக கருத்துகளை வெளியிடுவதற்கு கற்றுக் கொடுத்தார்.*

இந்த இதழை அவருக்கு சமர்ப்பணம் செய்வதில் நாம் ஆறுதலடைகிறோம்.

மாவீரர் நாள் தொடர்பான பல கவிதைகளும் வேறு ஆக்கங்களும் எம்மை வந்தடைந்துள்ளது. உரிய நேரத்தில் அவற்றை அனுப்பாமையால் மாவீரர் சிறப்பிதழில் அவற்றை பிரசுரிக்க முடியவில்லை என்பதனை அறியத் தருகிறோம்.

வருட இறுதியை நெருங்கி விட்டோம், அடுத்த ஆண்டு எப்படியிருக்கும் என உறுதியாகத் தெரியவில்லை, பொருளாதாரப் பிரச்சனைகளை சமாளிப்பதில் சிரமமிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றினை எதிர் கொண்டு பத்திரிகையை வெளியிடுவதானால், வர்த்தகர்களின் ஆதரவு எமக்கு தொடர்ந்தும் தேவைப்படுகிறது.

*எமக்கு விளம்பரங்களை வழங்கி **ஒரு பேப்பர்** வெளிவருவதற்கு உதவியளிக்கும் அனைத்து வர்த்தக உள்ளங்களுக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*

அடுத்த பேப்பரிலை சந்திப்பம்

***ஒரு பேப்பர்** காரன்கள்+காரிகள்*

New Evidence Reinforces Need for Investigation of Wartime Atrocities

HUMAN RIGHTS WATCH

New evidence links the Sri Lankan army's 53 Division to the alleged summary execution of prisoners on May 18, 2009, during the final hours of the 26-year armed conflict in Sri Lanka, Human Rights Watch said today. Human Rights Watch repeated its call for the United Nations to undertake a full investigation into wartime abuses by both government forces and the rebel Liberation Tigers of Tamil Eelam (LTTE).

Human Rights Watch has obtained a longer version of a video broadcast on November 30, 2010, by British Channel 4, and photographs of the same incident from other sources. The videos and photos show what appear to be the summary execution of prisoners by government troops. At least a dozen dead bodies are visible.

"This horrific new evidence demonstrates graphically that the Sri Lankan army engaged in summary executions of prisoners during the final days of fighting in May 2009," said Brad Adams, Asia director at Human Rights Watch. "The government's failure to investigate these serious war crimes in the face of overwhelming evidence shows the need for an independent, international investigation."

In August 2009 Channel 4 broadcast excerpts from a video showing what appears to be Sri Lankan government soldiers executing several undressed, blindfolded, and handcuffed men believed to be captured LTTE members.

The Channel 4 broadcast on November 30 showed excerpts from a longer, five-minute video, which shows more dead bodies, including those of two unclothed young women.

One of the dead bodies in the video and photographs is of a woman named Isaippiriya, a 27-year-old reporter for the LTTE. Human Rights Watch has received independent confirmation from multiple sources, including family members, identifying one of the dead women in the photographs and video as Isaippiriya.

The Channel 4 broadcast on November 30 showed excerpts from a longer, five-minute video, which shows more dead bodies, including those of two unclothed young women.

One source, "Kavetha" (not her real name), submitted a written statement to Human Rights Watch in January 2010 stating, "On the morning of the 15th [of May, 2009], I saw a girl who reads the news on the Tamil Eelam National Television. She was an actor, a poem writer and a news reader. That was the last time I saw her, on the 15th. The next time I saw her was on the Internet [when I was] sitting at home, a photo of her dead body in an unimaginably horrible state."

After examining the photographs and the second Channel 4 video, "Kavetha" confirmed to Human Rights Watch that one of the dead women was Isaippiriya. "The undressed clothes are even the same as the ones she wore on May 15," she told Human Rights Watch.

Confirmation that Isaippiriya is among the executed people in the video contradicts the Sri Lankan government's account of her death. A June 21, 2009 post on the Sri Lankan Ministry of Defence website lists a Lt. Col. Issei Piriya of the LTTE Communications/Publicity Wing as one of 31 "[i]dentified LTTE leaders who were killed on 18 May 2009 by 53 Division" during "the Last Battle." Isaippiriya's body can be seen lying near three dead men who were bound and blindfolded. Isaippiriya's arms appear to be behind her back but it is unclear whether she was bound.

The 53 Division of the Sri Lankan Army was one of three divisions directly involved in the final battle against the LTTE at the Nanthi Kadal lagoon, close to the northeast coastline. The division, under the command of Maj. Gen. Kamal Gunaratne, participated in some of the heaviest fighting of the final months of the conflict.

The Sri Lankan government denies that its forces committed any violations of the laws of war during the final stages of armed conflict. Soon after the broadcast of the video by Channel 4 in August 2009, the Sri Lankan government announced that four hand-picked local investigators, two of whom were government officials, had concluded that the video was "fake." But the government failed to provide details to support such a finding. The authenticity of the video was strongly supported by independent expert analysis commissioned by the United Nations expert on extrajudicial executions.

The Sri Lankan government immediately responded to the broadcast of the second video, saying without substantiation that it "categorically denies that the Channel 4 News TV video is authentic."

In June 2010, UN Secretary-General Ban Ki-moon established a panel of three experts to provide him with advice on next steps for accountability for laws-of-war violations in Sri Lanka. The panel's report is expected in January 2011.

"Each time new evidence emerges of a wartime atrocity, the government's kneejerk reaction is to claim that it's all part of some bizarre plot against it," said Adams. "How many more photos and videos need to emerge before the government recognizes that it can't hide the truth forever?"

டில்லித் திருடர்களின் திருகுதாளங்கள் தொடர்கின்றன...

திகதி 28-11-2010 :- இலங்கைப் பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று முன்தினம் புதுடில்லி திரும்புகையில் செய்தியாளர்களுக்கு பேட்டியளிக்கையில் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு காலக்கெடு எதுவும் நிர்ணயம் செய்ய முடியாது என்று வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா தெரிவித்தார்.

திகதி 07-12-2010:- இலங்கை இனப்பிரச்சனை தீர்வு தொடர்பில் இந்தியா எந்தவித அழுத்தங்களையும் கொடுக்காது.

திகதி 07-12-2010:-'தமிழர் பிரச்சனைக்கான தீர்வு குறித்து பேசுமாறு இலங்கைக்கு வலியுறுத்தினேன்' கருணாநிதிக்கு வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா கடிதம்.

இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான டில்லியின் திருகுதாளங்கள் முள்ளிவாய்க்கால் இனக்கொலையுடன் முடியவில்லை இன்றும் தொடர்கின்றன.

இப்போது டில்லித் திருடர்களின் முக்கிய பணி தமிழர்களை அவர்கள் சொந்த நிலங்களில் இருந்து விரட்டி அடித்து அங்கு சிங்களவர்களைக் குடியேற்றுவது.

இதனால் இனி எந்த ஒரு காலத்திலும் தமிழர்கள் ஒரு உரிமைப் போராட்டத்தை தொடக்குவதை நிரந்தரமாகத் தடுப்பது டில்லித் திருடர்களின் நோக்கம். டில்லித் திருடர்களின் கொள்கைப்படி தமிழன் சூத்திரன். அவன் ஆளப்பட வேண்டியவன். அவன் ஆளக்கூடாது. டில்லித் திருடர்கள் தாம் இலங்கையில் தமிழர்களுக்கு 50,000 வீடுகள் கட்டிக் கொடுப்பதாக பிதற்றுகிறார்கள்.

இவர்கள் எத்தனை இலட்சம் வீடுகளை அழித்தார்கள் என்று சொல்வதில்லை. இந்த 50,000 வீடுகளில் எத்தன ஆயிரம் சிங்களவர்கள் குடியமர்த்தப் படுவார்கள் என்று சொல்ல மாட்டாரக்ள்.

இந்திய உளவுத் துறையில் கண்மூடித்தனத்தை அம்பலப் படுத்துகிறது Wikileaks.

இலங்கையில் பாக்கிஸ்த்தானிய தீவிரவாதிகள் ஊடுருவியுள்ளதென்றும் அவை இந்தியாவிற்கு எதிராகச் செயற்படும் என்றும் பத்து ஆண்டுகளுக்கு முன்பே விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அண்டன பாலசிங்கம் தெரிவித்திருந்தார். ஆனால் இந்திய அரசு இதை விட்டுவைத்தது. பாக்கிஸ்த்தானும் சீனாவும் இலங்கையுடன் நல்ல நெருக்கத்தை பேணுவதை இந்திய நிர்வாகத்தின் தென் மண்டலத்தினர் (South Block) விரும்பியிருந்தனர். இந்த பாக்கிஸ்த்தானிய சீன நெருக்கம் தமிழர்களின் தேசிய போராட்டத்தை அடக்க பெரிதும் உதவும் என்பதால் அவர்கள் இதை அனுமதித்திருந்தனர்.

தென் மண்டலத்தில் (South Block) உள்ள பார்ப்பனரகளின் கொள்கை தமிழன் என்பவன் சூத்திரன் அவன் ஆளப்பட வேண்டியவன். இதற்காக இவர்கள் இந்தியாவின் பிராந்திய நலன்களையும் பலியிடத் தயங்கவில்லை. இலங்கையைப் பொறுத்தவரை இந்திய வெளியுறவுக் கொள்கை மகன் செத்தாலும் பரவாயில்லை மருமகள் தாலி அறட்டும் என்பதுதான்.

பாகிஸ்தானின் லஷ்கர் இ தொய்பா அமைப்பின் 200க்கும் அதிகமான தீவிரவாதிகள் இலங்கையில் பதுங்கி இருப்பதாக அமெரிக்க புலனாய்வுதுறை 2010 September இல் எச்சரித்திருந்தது. இது தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கு அமெரிக்கா அனுப்பியுள்ள எச்சரிக்கை தகவலில் லக்சர் இ தொய்பா அமைப்பு இந்தியாவுக்குள் நுழைவதற்கு இலங்கையை பயன்படுத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இலங்கையில் பயிற்சி பெற்றதாக கூறப்பட்ட அந்த அமைப்பின் போராளி ஒருவர் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள இலங்கை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல, ஏற்கனவே இங்கு வெளிநாட்டு தீவிரவாதிகள் அமைப்பு ஒன்றும் இல்லை என பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்திருந்திருந்ததை மேற்கோள் காட்டியுள்ளார்.

இவ்வாறான எச்சரிக்கை அறிக்கை ஒன்றும் தமக்கு கிடைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விக்கீலீக் இப்போது வெளியிட்டுள்ள தகவலில் அமெரிக்க அரச திணைக்களம் 19-06-2009இல் வெளியிட்டுள்ள குறிப்பில் பாகிஸ்தானின் லஷ்கர் இ தொய்பா அமைப்பு இலங்கையில் தளம் அமைத்து செயற்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தகவலில் பாகிஸ்தானின் லஷ்கர் இ தொய்பா அமைப்பு இலங்கை இந்தியா நேபாளம் ஆகிய இடங்களில் அபாயகரமான முறையில் வளர்ந்து வருவதாகவும் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஷபீக் கபா என்னும் பாகிஸ்தானின் லஷ்கர் இ தொய்பா அமைப்புத் தலைவர் தென் இந்தியாவில் இரு குழுக்களை அமைக்க முயல்கிறார் என்றும் விக்கிலீக் தெரிவிக்கிறது. இலங்கையில் தளம் அமைத்ததை தொடர்ந்து தமிழ்நாட்டிலும் கேரளாவிலும் தமக்கு களம் அமைக்க பாகிஸ்தானின் லஷ்கர் இ தொய்பா அமைப்பு முயல்வதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அண்மையில் இலங்கைக்கு இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ் எம் கிருஷ்ணா பயணம் மேற்கொண்டபோது ஒரு பாக்கிஸ்தானிய உயர் பீடமே இந்தியாவிற்க்கு போட்டியாக இலங்கை வந்தது.

சீனாவுடன் இணைந்து எப்படி இலங்கையில் இந்திய ஆதிக்கத்தை ஒழிக்க இலங்கைக்கு உதவலாம் என்பதே அவர்களின் நோக்கம். இலங்கையில் சீனாவின் திட்டங்களுக்கான சீமேந்தை சீனா பாக்கிஸ்த்தானில்தான் கொள்வனவு செய்கிறது.

இது பாக்கிஸ்தானின் நலிவடைந்திருக்கும் பொருளாதாரத்தையும் பலப்படுத்தும். பாக்கிஸ்தானும் தன்பங்கிற்கு இலங்கைக்கு இரு நூறு மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான இலகு கடனை இலங்கைக்கு வழங்குகிறது. இது பாக்கிஸ்தானின் இலங்கைக்கான ஏற்றுமதியை வளர்க்கும்.

- வேல்தர்மா

மாவீரரே உங்கள்
கைகள்
உயரட்டும்
ஈழம் அதில்
இயங்கட்டும்

ஒரு பேப்பர்

OPINION

India Seeking a Permanent Seat in the UN Security Council? No....Way!

By Periasamy Kanthavel

In Hinduism and Indian mythology Krishna is the eighth avatar or reincarnation of the God Vishnu. The Bhagavad-gita are simply God Krishna's helpful hints for humans; " How are we supposed to act? How does He recommend we live? What are the guidelines for human life? What things should we avoid? Why are some people so difficult to get along with? What's the ultimate goal of life?" Great!

But our concern now is Mr. S.M. Krishna, External Affairs Minister, Government of India, South Block, New Delhi. After postponing his carefully planned visit to Sri Lanka, he finally visited Sri Lanka and Eelam, well planned and prepared, and with lots of options. What an anti-climax, his trip turned out to be! Poor chap he even used Foreign Secretary Smt. Nirupama Rao, as a tentacle.

Quote

The **"Resettlement is a hoodwink in Vanni", said retired Senior Professor S.K. Sitrampalam of the University of Jaffna, expressing the strong sentiments of Eezham Tamils. " Army has occupied the Tamil lands and people have strong doubts whether India would be of any help in Tamils getting a political solution", the civil society representatives told the visiting Indian diplomat.** (http://pflt.org/nothing-truth)

The USA educated Mr. Krishna, with long experience and well noted for his openness to ideas and people, didn't even have the guts to meet the TNA- MPs, who are considered as mere poodles of the government of India.

He was the Governor of Maharastra during the period 2004 to 2008 and made External Affairs Minister on 22 May 2009, just four days after the successful completion of the India sponsored genocide of Eelam Vanni Tamils.

On 24th May, 2009, he got a very timely and important 'do or die' letter.

Quote (Press Release)

Whom does Government of India represent? - Kannabiran

The PUCL National President, K.G.Kannabiran, a very respected legal luminary in India, wrote to the new External Affairs Minister of India, S.M.Krishna saying the role of the Ministry of External Affairs in dealing with the Sri Lankan had been disastrous, so far. "In recent times India's foreign policy has come under severe criticism for two main reasons. One, though hailed as the largest democracy in the world and a regional superpower, India has been acting in favour of autocratic and dictatorial forces in the neighbouring countries of Pakistan, Nepal, Bangadesh, Myanmar and Sri Lanka. Two, policy is being arbitrarily laid down by biased bureaucratic elements not borne out by sound political judgement". Further;

".... Fearing action, GoSL has launched a counter move, circulating a self- generated resolution with the endorsement of 12 countries including India in the 'distinguished' company of China and Pakistan!"

Please visit People's Union For Civil Liberties (PUCL) website at<www.pucl.org>

The Indian nasty and foul game of acting in favour of potential or proven autocratic or dictatorial forces and policies laid by nasty vengeance carrying bureaucrats have proved to be devastative to the entire country. The letter, with a copy to Dr. Manmohan Singh, Prime Minister of India, also strongly suggested that the government of India immediately initiated a nation wide discussion on the stand to take vis-a'-vis the serious allegations of war crimes and crimes against humanity levelled against the Sri Lanka government.

UK India Relation Dangerous.

Historically, the Indians were the largest number of personnels fought for the English Empire. In the present times, the UK government is committed to a special relationship with India, one that reflects deep and historic ties and recognises India's economic growth and strategic importance. In the world of Public Relation driven politics, media plays a very crucial role in supporting state's efforts to silence the dissent voices and in most cases the media is acting as front line warriors.

Tamils had enough experience on the PR war on their freedom struggle. A similar media campaign against Tamil Eelam struggle of Srilanka cost not only 140,000 innocent Tamil lives but portrayed the Tigers of Tamil Eelam as terrorists, which was later rightly criticized by the Permanent people's tribunal held in Ireland. But by the time world realized the need for such a demand, thousands of innocent lives was lost. Tamils like any other resistance ethnic community has suffered enough by the media fascism lead by The Hindu and its Editor N.Ram. And the entire media is now silent when continuety of genocide is silently on the making in the post war Eelam by the Singala occupying forces.

So in the opinion of the writer India has come back to the UK on the 'save our soul ' mode. What a crime! What a pity!

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:
பிரித்தானியா
அ. இரவி - மணி - அகிலன்
மாதவன்
கனடா
தயா - அரவிந்தன் - சிந்து
பிரான்ஸ்
சிறி
ஜேர்மனி
சபேசன்
சுவிஸ்
சயந்தன்
பொறுப்பாசிரியர்
- கோபி -
மக்கள் தொடர்பு
சாரதா
விளம்பரம்
சோபனா
அச்சு
தர்சினி (கனடா) பானு
வடிவமைப்பு
மயூரன் - விஜி
முகப்பு வடிவமைப்பு
seven zero graphics
விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - மாயா
தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்
நிதி – நிர்வாகம்
பானு
வழங்கல்
உதயகுமார்-சிவா-பிரகாஸ்

உங்கள் தொடர்புகட்கு:
தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
கனடா 416 613 2850
தொலைநகல் (Fax)
லண்டன் 020 7043 4312
கனடா 416 438 7855
ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:
பணிமனை முகவரி
ORU PAPER
G11 LOMBARD HOUSE
2 PURLEY WAY
CROYDON, CR0 3JP
மின்னஞ்சல்:
info@orupaper.com
இணையம்:
www.orupaper.com

'Oru Paper' is a bi-lingual paper published from London by Orupaper Ltd. on the 1st and 3rd Fridays of each month. The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.

தாவும் புலிக்கு ஒரு நாய் எந்த மூலை

சற்று மாறுதலுக்காக

எழுதுவது: **சேயோன்**

நீண்ட நாட்களுக்குப் பிறகு சிறிதளவு நிறைவு தருகிற ஒரு நாளை பனி பொழிந்த வியாழன் நாள் (02-12-2010) பின்னேரம் கண்டேன். கன்றுக்குட்டி துள்ளி வருகிற மகிழ்வு நாள் அது. அன்று மாலை நான்கு மணியளவில் பல்லாயிரத்தை மேவிய ஈழத் தமிழர் லண்டன் நகரின் மத்தியில் கூடினோம். சிங்கள இனவெறியன், தமிழ் இனப் படுகொலைகாரன் மகிந்தாவின் மூஞ்சியில் குத்துவதற்காக, முகத்தில் காறித் துப்புவதற்காக, ஓங்கி ஓர் உதை விடுவதற்காக, அவனது சிங்கள ஆணவத்தை காலில் போட்டு மிதிப்பதற்காக, அவனது நாசகாரச் செயலை உலகிற்கு அம்பலப்படுத்தவதற்காக, சிங்கள இனவெறியை துவம்சம் செய்வதற்காக எமது தேசியக் கொடியான புலிக் கொடியுடன் அங்கு நாம் திரண்டோம்.

வீதியின் மருங்கில் பனிப்பொழிவு பாறையாக இறுகி உள்ளது ஆனால் பல லட்சம் மக்களை இழந்த உணர்வு கொண்ட ஓர்மம் செறிந்த ஈழத் தமிழரை இந்த இயற்கையால் என்ன செய்து விடமுடியும்? அவர்கள் ஆயத்தமானார்கள் இனவெறியனை ஓங்கி உதைப்பதற்கு காறித்துப்புவதற்கு இன்னும் செய்யக்கூடிய அத்தனைக்கும். பனிப் பொழிவின் மத்தியில் பல்லாயிரமானோர் எவ்வாறு திரள்வர்? எது அவர்களை வரப்பண்ணியது?

பேருந்தில் என் இருக்கையின் அருகில் இருந்த மலையகத் தமிழர் ஒருவர் “நாம் இப்பொழுது தலை நிமிர்ந்து வாழ்வது நமது தேசியத் தலைவர் பிரபாகரனின் எழுச்சியின் பிறகே. முன்னர் 'கள்ளத் தோணி' என்று தம்மை இகழ்ந்தவர்கள் பிறகு 'பறத் தமிழா' என்று தூஷித்தார்கள். நாம் ஒன்றும் பேசாமல் இருந்தோம். குங்குமம் இடாமல் தான் தமிழ்ப் பெண்கள் திரிந்தார்கள் எங்கள் பண்பாடு எதனையும் காட்ட முடியாமல் தான் வாழ்ந்தோம். ஆனால் ஒரு காலம் வந்தது. கள்ளத் தோணி போய் பறத்தமிழா போய் 'கொட்டியா' என்ற சொல் வந்தது.

ஆனால் அச்சொல் சும்மா வரவில்லை மிடுக்குடன் வந்தது தமிழர் மீதான சிங்களத்தின் பயத்துடன் பணிவுடன் மரியாதையுடன் வந்தது. கள்ளத் தோணியென்ற போதும் பறத் தமிழா என்ற போதும் கூனிக் குறுகி அவமானப்பட்டு அடிவாங்கி நொந்து நின்ற நாம் கொட்டியா என்ற போது தலை உயர்த்தி நெஞ்சு நிமிர்த்தி நின்றோம். இவற்றுடனும் ஓர்மத்துடனும் வீறாப்புடனும் வெற்றியுடனும் நின்றோம்.” என்றார்.

பேருந்தில் அவரை ஏற்றியது எது என்று எனக்குப் புரிந்தது. பல்லாயிரக் கணக்கில் லண்டன் நகர் மத்தியில் ஈழத் தமிழரை திரள வைத்தது எது என்பதும் அவர் வார்த்தையில் எனக்குப் புரிந்தது. ஐம்பது வயதுக்கு மேற்பட்ட அவர் போன்றோரும் திரள்கிறார்கள். பதினைந்து வயதுக்குட்பட்ட பாலகர்களும் திரள்கிறார்கள். ஒருமித்த ஓர் உணர்வு தான் அவர்களை அவ்வாறு திரள வைத்தது.

'வெள்ளம் போல் தமிழர் கூட்டம்
வீரம் கொள் கூட்டம் அன்னார்
உள்ளத்தால் ஒருவரே மற்று
உடலினால் பலராய்க் காண்பார்'

என்ற பாரதிதாசனின் பாடல் வரிகளை அப் பின்னேரத்தின் பனிப் பொழிவு எனக்குத் தந்தது. ஊசி குத்தும் குளிரல்ல அது அதற்கு மேலே. நாலைந்து அடுக்குகளில் ஆடை அணிந்தும் காலினால் குளிர் உடலில் ஏறுகிறது. தலையினாலும் உடலில் இறங்குகிறது. ஆனால் உணர்வு எனும் நெருப்பு எழுந்து உடலைச் சூடாக்குகின்றது. பல்லாயிரக்கணக்கான தமிழர்களும் அவ் உணர்வில் ஆட்படுகின்றனர்.

பனி கீழிறங்கிக் கொண்டிருந்தது வீதி விளக்கின் மஞ்சள் ஒளியில் பஞ்சு பஞ்சாகப் பனி இறங்குகையில் ஒன்று என்னை சிலிர்ப்பூட்டியது. உயரே எழுந்து நிமிர்ந்து நிற்கிற புலிக் கொடி, அதுவே என்னை எழுச்சி கொள்ள வைத்தது எங்களை இணைத்தது. புலிக் கொடி எல்லோர் மீதும் நிழலாக கவிந்து இருந்தது. ஓர் உணர்வுப் போர்வையாகப் போர்த்திக் கிடந்தது. ஒரு மந்திரச் சொல் போல எல்லோர் மீதும் படர்ந்து சென்றது.

ஒன்றை நான் அக்கணத்தில் உணர்ந்தேன். எல்லோருக்குள்ளும் நெருப்பு எரிகிறதென்றால் அதை முளாசி எரியப் பண்ணுகிற விசிறி எது? பற்றிப்படர்ந்து பரவி அது எரிகிறதென்றால் அதன் காரணம் யாது? 'பிரபாகரன்' என்ற மந்திரச் கயிறு ஒன்று என்றால் மற்றையது புலிச்சின்னம். நாம் தமிழர் என்று நம்மை நிமிர்த்துவது இவை இரண்டுமே உலகில் தமிழர்களுக்கான அடையாளமும் இவையே.

ஒன்றை இப்பொழுது நாம் உறுதிப்படுத்தியே ஆக வேண்டும் நேற்றும் இன்றும் இனி என்றும் எம் தலைவர் பிரபாகரன் தான். எமது வழிகாட்டியும் அவரே தான். அவ்வாறு எம் அடையாளச்சின்னமும் புலியே தான். எத்தனை ஆயிரம் வீர மறவர் களத்தில் வீழ்ந்து இப் புலிக் கொடியை ஏற்றினர். எதற்காக ஏற்றினர்? தமிழரை தலைநிமிரச் செய்ய என்ற ஒன்றினைத் தவிர வேறு எதற்காக?

அந்த வியாழன் நாள் பின்னேரம் அதைத் துல்லியமாக உணர்ந்தேன். சிங்கள இன வெறியனுக்கு எதிராக அத்தனை தமிழர்களையும் அங்கு கூட்டியது அத்தனை தமிழர்களையும் அங்கு உசுப்பியது புலிக்கொடி ஒன்று தான்.

தமிழ்த் தேசியத்தில் அக்கறை கொண்டு தமிழீழ விடுதலைப் போர் சரியான ஒன்று என உணர்வோர். இந்த இடத்தில் நிதானமாக யோசிக்க வேண்டும் தமிழீழ விடுதலைப் போரை முன்னெடுக்க எத்தனை விடுதலை அமைப்புக்கள் தோன்றின. அத்தனையும் தமக்கான தலைமையுடனும் தமக்கான இலச்சினையுடனும் தான் வந்தன. ஆனால் இறுதி வரை நின்றது எது? வென்றது எது? அத்தனை தமிழர்களையும் ஒன்று திரட்டியது எது ?

விட்டுக் கொடுக்காத உறுதியான வீரன் எம் தலைவன் ஆனான் அது ஒன்று. மற்றது கோழைத் தமிழர்களிடம் கூட வீரமான படிமமாக படிந்து இருப்பது விடுதலைப் புலிச் சின்னம். அவற்றை கவனத்தில் எடுக்காது அடுத்த காலடி எடுத்து வைக்க முடியாது ஈற்றில் என் சொற்கள் இவைதாம். பிரபாகரன் புலி இரண்டுமே எம் இன அடையாளம்.

'வெறிகொள் தமிழர் புலிப்படை அவர்
வெல்வர் என்பது வெளிப்படை'

அன்பே தீர்வு!

பல வருடங்களுக்கு முன் அமெரிக்காவில் உள்ள ஜான் ஹாப்கின்ஸ் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவர் மாணவர் குழு ஒன்றை ஏற்படுத்தி அந்தக் குழுவிடம் வித்தியாசமான ஒரு ஆராய்ச்சிப் பணியை ஒப்படைத்திருந்தார். 'பின் தங்கிய குடிசைப் பகுதி ஒன்றிற்குச் செல்லுங்கள். 12 வயது முதல் 16 வயது வரை உள்ள 200 சிறுவர்களைத் தேர்ந்தெடுங்கள். அவர்களைப் பற்றிய முழு விவரங்களைச் சேகரியுங்கள். பின் அவர்களுடைய எதிர்காலம் எப்படி இருக்கும் என்று உங்கள் அனுமானத்தைச் சொல்லுங்கள்' என்று அவர்களிடம் சொன்னார்.

அந்த மாணவர்கள் குழு மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ள குடிசைப் பகுதியைத் தேர்ந்தெடுத்து அங்கு சென்றது. அந்த மாணவர்கள் அங்குள்ள 12 முதல் 16 வயதுடைய ஒவ்வொரு இளம் வயதினரிடமும் நீண்ட நேரம் பேசினார்கள், கேள்விகள் கேட்டார்கள். தாங்கள் பேச்சின் மூலம் அறிந்து கொண்டதையும், பேசாமலேயே கவனித்து அறிந்து கொண்டதையும் வைத்து அந்த ஆராய்ச்சி மாணவர்கள் ஒரு முடிவுக்கு வந்தார்கள். 'இந்த சிறுவர்களில் 90 சதவீதம் பேர் எதிர்காலத்தில் சிறிது சமயமாவது சிறைச்சாலையில் கழிப்பார்கள்'.

அந்த முடிவுக்கு அவர்கள் வரக் காரணமாக இருந்தது அந்த சிறுவர்களின் மனப் போக்கில் அவர்கள் கண்ட சில தீய பண்புகள், தீய ஆர்வங்கள், சமூகப் பொறுப்பற்ற தன்மை போன்றவற்றைக் கண்டது தான்.

அந்த மாணவர் குழு சமர்ப்பித்த தகவல்களையும், அந்த தகவல்களை அடிப்படையாக வைத்து அவர்கள் வந்த முடிவையும் பத்திரமாகப் பாதுகாத்த அந்த பேராசிரியர் பல வருடங்கள் கழித்து அந்த குடிசைப் பகுதியில் உள்ள சிறுவர்கள் பெரியவர்களாக ஆன பின்னர் மீண்டும் வேறொரு மாணவர் குழுவை அதே பகுதிக்கு அனுப்பினார். 'இந்த 200 பேரும் தற்போது எப்படி இருக்கிறார்கள், அதில் எத்தனை பேர் முந்தைய குழு எண்ணியது போல் சிறைக்குச் சென்றிருக்கிறார்கள் என்பதை அறிந்து வாருங்கள்' அந்த வேலை இரண்டாவதாகப் போன குழுவிற்கு சுலபமானதாக இருக்கவில்லை. அந்த 200 பேரில் சிலர் இடம் பெயர்ந்திருந்தார்கள். சிலர் இறந்திருந்தார்கள். இடம் பெயர்ந்தவர்களில் சிலரது தற்போதைய விலாசம் கிடைக்கவில்லை. ஆனாலும் இரண்டாவது மாணவர் குழுவின் விடா முயற்சியால் 200 பேரில் 180 பேரை தொடர்பு கொள்ள முடிந்தது. அவர்களில் நான்கு பேர் மட்டுமே சிறைக்குச் சென்றிருந்தார்கள்.

பேராசிரியருக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்ட மாணவர் குழுவிற்கும் அந்தத் தகவல் பெருத்த ஆச்சரியத்தை அளித்தது. அன்றைய அனுமானம் இன்றைக்கும் அறிவு சார்ந்ததாகவே இருந்தது. குற்றம் புரியத்தேவையான மனோநிலைகளிலும், சூழ்நிலைகளிலும் தான் அன்று அந்த சிறுவர்கள் வாழ்ந்து வந்தார்கள். அப்படியானால் இப்படி இந்த 176 பேரும் சிறைக்குச் செல்லாமல் இருக்கக் காரணம் என்ன என்ற மிகப் பெரிய கேள்வி எழுந்தது.

மீண்டும் சென்று சிறைக்குச் செல்லாமல் நல்ல முறையில் வாழ்ந்து கொண்டிருந்த அந்த 176 நபர்களிடமும் அவர்கள் பேட்டி எடுத்தார்கள். அவர்கள் போகவிருந்த அழிவுப்பாதையில் இருந்து அவர்களைக் காத்தது என்ன என்ற கேள்வியைப் பிரதானமாக வைத்தார்கள். அவர்களில் பெரும்பாலானோர் ஒரு பதிலையே சொன்னார்கள். 'எங்கள் பள்ளிக்கு ஒரு புதிய ஆசிரியை வந்தார்....' உடனே பெரும்பாலானோர் சொன்ன அந்த ஆசிரியையைத் தேடி ஆராய்ச்சியாளர்கள் சென்றனர். அந்த ஆசிரியை தற்போது ஆசிரியைப் பணியில் இருந்து ஓய்வு பெற்றிருந்தார். அவரிடம் அவர்கள் சரமாரியாகக் கேள்வி கேட்டார்கள். 'உங்களுடைய அந்தப் பள்ளி மாணவர்களில் பெரும்பாலானோர் உங்களை இன்றும் நினைவு வைத்திருக்கிறார்கள். அதன் காரணம் என்ன?' அவர்கள் உங்களுடைய தாக்கத்தால் நிறையவே மாறி இருக்கிறார்கள். நீங்கள் அவர்களுக்கு கல்வி புகட்டிய முறை என்ன?' அந்த முதிய ஆசிரியைக்கு குறிப்பிடும்படியாக எதையும் சொல்லத் தெரியவில்லை. ஒரு நீண்ட பதிலை எதிர்பார்த்துச் சென்றவர்களுக்கு ஒரே ஏமாற்றம். அந்த ஆசிரியை பழைய நாட்களின் நினைவுகளில் மூழ்கினார். அவர் மிகவும் கனிவுடன் சொன்னார். 'அந்தக் குழந்தைகளை நான் நிறையவே நேசித்தேன்......'

பெரிய பெரிய சித்தாந்தங்களையும், வித்தியாசமான கல்வி நுணுக்கங்களையும் எதிர்பார்த்து வந்தவர்கள் அந்த தகவலில் மெய்சிலிர்த்துப் போனார்கள். எல்லா சீர்திருத்தங்களுக்கும் அன்பே மூலாதாரம். அன்பினால் மட்டுமே முழுமையான, உண்மையான மாற்றங்களைக் கொண்டு வருவது சாத்தியம். சட்டங்களாலும், கண்டிப்புகளாலும், தண்டனைகளாலும் எந்த மிகப்பெரிய மாற்றத்தையும் உலகில் கொண்டு வரமுடிந்ததில்லை. இது வரலாறு நமக்கு உணர்த்தும் பாடம்.

உளமார, உண்மையாக அந்த ஆசிரியை அந்த சிறுவர்களை நேசித்தார். குற்றங்கள் மலிந்த சூழலில் வளர்ந்த அந்த சிறுவர்களின் வரண்ட இதயங்களில் அந்த ஆசிரியையின் மாசற்ற அன்பு ஈரத்தை ஏற்படுத்தி நற்குணங்களை விதைத்திருக்க வேண்டும். அதை அவரே உணர்ந்திருக்கா விட்டாலும் அந்த அற்புதம் அந்த சிறுவர்களின் வாழ்க்கையில் நிகழ்ந்திருக்கிறது. அவர்களது வாழ்க்கையினை நல்ல பாதைக்கு திருப்பி விட்டிருக்கிறது. இந்த நிகழ்வு சிந்தனைக்குரியது.

இது வீட்டிலும், ஊரிலும், சமூகத்திலும், நாட்டிலும் அனைவராலும் உணரப்பட வேண்டிய ஒன்று. குறை கூறுவதிலும், விமரிசனம் செய்வதிலும் பெருமை இல்லை. சட்டங்களைக் கடுமையாக்குவதிலும், கண்டிப்பை அமலாக்குவதிலும் வலிமை இல்லை. அன்போடு அணுகுவதிலேயே பெருமையும் வலிமையும் இருக்கின்றது. மாற்றம் எங்கு வர வேண்டும் என்று நினைத்தாலும் அங்கு அன்பு செலுத்துவதில் இருந்து ஆரம்பியுங்கள். அந்த அன்பு சுயநலம் இல்லாததாக இருக்கும் பட்சத்தில், அந்த அன்பு குறுகியதாக இல்லாத பட்சத்தில் அற்புதங்கள் நிகழ்த்த வல்லது. எல்லாவற்றுக்கும் அன்பே மருந்து. இந்த பிரச்னைகளுக்கு அன்பே தீர்வு.

- *என். கணேசன்*

இலங்கை அரசியலில் இலண்டன் அதிர்வுகள்

அரசியல் அலசல்

இதயச்சந்திரன்

மகிந்தரின் இலண்டன் பயணத்தால் ஏற்பட்ட பின்னடைவுகளைச் சரிசெய்ய சிங்களத்தரப்பு சில நகர்வுகளை மேற்கொள்கிறது

தப்பி வந்த சிங்கத்திற்கு, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பலமான வரவேற்பு.சீற்றமடைந்துள்ள மகிந்தரை சாந்தப்படுத்துவதற்கு, விமல் வீரவன்ச, ஆறுமுகம் தொண்டமான் போன்றோர் பெரும் முயற்சிகளை மேற்கொண்டனர்.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக சிங்கள சங்கம் ஏற்பாடு செய்த நிகழ்வினை, பல்கலைக்கழக ஒன்றியம் ஏற்பாடு செய்த நிகழ்வினை, பல்கலைக்கழக ஒன்றியம் செய்தது போன்ற பரப்புரைகளை கட்டவிழ்த்து விட்ட சிங்கள தேசியவாதிகள், இதில் சம்பந்தப்படாத பிரித்தானிய அரசின் மீதும் கண்டனக் கணைகளை தொடுத்துள்ளது.

அரசின் விருந்தாளியாக மகிந்தர் இங்கு வரவில்லையென்கிற விடயத்தை பேராசான் ஜீ.எல். பீரிசும் பயங்கரவாதக் கலாநிதி றொகான் குணரெட்ணாவும் மறந்துவிட்டார்கள் போல் தெரிகிறது.

மகிந்தருக்கு ஏற்பட்ட அவமானத்தில் பங்கு கொள்ள, ஐ.தே.கட்சித் தலைவராகும் கனவிலிருக்கும் சஜித் பிரேமதாசவும், ஜே.வி.பியின் பேச்சாளர் விஜித ஹெரத்தும் போட்டி போட்டு அறிக்கை விட்ட சம்பவங்களையும் காணக்கூடியதாகவுள்ளது.

அரசியல் எதிரியாக மகிந்த அரசு இருந்தாலும் பௌத்த சிங்களப் பேரினவாதி ஒருவருக்கு இன்னல் நேரும் பொது, மகாவம்சக் சங்கெடுத்து ஊதுவதில், இவர்கள் எவரும் சளைத்தவர்கள் அல்ல என்பதை இது சுட்டிக்காட்டுகிறது.

'கவலைப்படாதே சகோதரா' என்கிற பாடலைப் பாடியவாறு, பிரபா கணேசனும், ஆறுமகம் தொண்டமானும், மகிந்தரைச் சாதகப்படுத்தி, தமிழ் மக்கள் மீதான இனவெறித் தாக்குதலை நிறுத்தி விட்டதாகப் பெருமிதமடைவதாக கொழும்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

அதேவேளை பௌத்த சிங்களப் பேரினவாதம், தனது கோபாவேசத்தை, கிறிஸ்தவ தேவாலயங்கள் மீது காட்டிவிடும் என்கிற அச்சத்தில், மகிந்தரைக் காப்பாற்ற முன்வந்தார் மல்கம் ரஞ்சித் அடிகளார்.

வத்திக்கான் திருச்சபையினால், கார்டினலாக உயர்வுபெற்ற மல்கம் ரஞ்சித் அடிகளாருக்கு, பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் கௌரவமளிப்பு விழா ஒன்று நடைபெற்றது.

இந் நிகழ்வில் ஊரையாற்றிய மல்கம் ரஞ்சித் அடிகளார், வெளிநாட்டிலுள்ள இலங்கையின் புகழுக்கு மாசு கற்பிக்கும் நடவடிக்கைகளை கண்டிக்க வெண்டுமெனவும், இதன் மூலம் தமிழர்கள் எதையும் பெறமுடியாதெனக் குறிப்பிட்டதோடு, மீண்டும் தமிழ்மக்களின் அழிவிற்கே இந்நடவடிக்கைகள் இட்டுச் செல்லுமென எச்சரித்திருந்தார்.

வெளிநாடுகளில் இருந்துகொண்டு நாட்டைத் துண்டாடும் சதி முயற்சிக்கு, சில கத்தோலிக்க குருமார் துணைபோவதாக கவலையடையும் மல்கம் அடிகளார் உலகத் தமிழர் பேரவையின் (GLOBLE TAMIL FORUM) தலைவர் அருட்திரு இம்மானுவல் அடிகளாரை மறைமுகமாகச் சாடியுள்ளதாகவே கருத இடமுண்டு.

அதேவேளை மகிந்தரின் அரசியல் ஆலோசகராகவும், வெளிநாட்டுப் புலனாய்வுப் பிரிவின் அறிவுரையாளராகவும் விளங்கும் பேராசிரியர். றொஹான் குணரட்ண, உலகத்தமிழ்ப் பேரவையை அழிப்பதே. மிகமக்கியமானதென அண்மையில் சுட்டிக்காட்டிய விடயம் கவனிக்கத் தக்கது.

ஜி.ரி.எவ் இன் தலைவர் இம்மானுவல் அடிகளாரின் உயிருக்கு, ஆபத்து விளைவிக்கக் கூடிய வகையில், குணரெட்ணாவின் அறிக்கை இருப்பதாக பல ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

இவை தவிர எதிர்க்கட்சிகளை முடக்குவதற்கு இலண்டனில் பெற்ற அவமானத்தைப் பயன்படுத்த மகிந்த அரசு திட்டமிடுகிறது.

இதன் ஓர் அங்கமாக, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர். கரு ஜெயசூரியா மீது, நாடாளுமன்றில் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வரும் முன்னேற்பாடுகளைக் காணலாம்.

சண்டே ஐலன்ட் பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலில், போர்க்குற்றம், புலம்பெயர் போன்ற சொல்லாடல்களைப் பயன்படுத்தியதால். இவர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றினை முன்வைப்பதாக அரச தரப்பு கூறுகின்றது.

பத்திரிகை தலையங்கத்தில் இச் சொற்களை, அதன் ஆசிரியர் குழு பயன்படுத்தியதால் தனக்கும் அதற்கும் சம்பந்தமில்லை என்பதெ கரு.ஜெயசூரியாவின் வாதம்.

இலண்டனில் மகிந்தருக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களை, நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத்ஜெயவர்த்தனா ஒழுங்குசெய்ததாக குற்றம் சுமத்தி, அவர்மீது தாக்குதலும் மெற்கொள்ளப்பட்டது.

எவ்வாறு போராட்டங்களை ஒழுங்கு செய்வது என ஜயலத் ஜெயவர்த்தனா, புலம்பெயர் தமிழ் மக்களுக்கு வகுப்பு எடுத்துள்ளார் என்பது போலிருக்கிறது சிங்களத்தின் கதை.

இவைதவிர இலண்டன் மாவீரர் தின நிகழ்வில் உரையாற்றிய புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமாகபாகு கருணாரெட்னா அவர்களின் மீது, கட்டுநாயக்கா சர்வதெச விமான நிலையத்தில், மகிந்தாவின் அடியாட்களால் தாக்குதல் ஒன்று மெற்கொள்ளப்பட்டுள்ளது.

அரசுக்கெதிரான சிங்கள இனவாதிகளையும், இடதுசாரிகளையும் தொடர்ச்சியாகக் குறிவைக்கும் மகிந்த சகோதரர்களின் நிகழ்ச்சி நிரலின் பின்புலம் என்ன என்பது குறித்து நோக்க வேண்டும்.

தோல்விகளை வெற்றியாக மாற்றுவதில் சிங்களப் பேரினவாதம் எப்போதும் பின்நிற்பதில்லை.

எதிர்க்கட்சிகளின் மீதான பழிவாங்கல்களினூடாக எதனை நிலை நிறுத்த முற்படுகிறது அரசு ?

அதாவது, அண்மையில் நிறைறேற்றப்பட்ட 2011 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டமானது, மக்களின் மீது மேலதிக வரிச்சுமையை திணிப்பதில், அதற்கெதிரான போராட்டங்களை எதிர்க்கட்சிகளே முன்னெடுக்கப் போகின்றன.

சிங்கத்திற்கேற்பட்ட தலைகுனிவிற்கு, இவர்களே காரணமென்று ஒரு மாயவலையை உருவாக்கி, அவர்களை இயங்க விடாமல் தடுப்பதே அரசின் நோக்கம்.

ஆகவே விடுதலைப்புலிகளுக்கு எதிரான போராட்டம், தற்போது எதிர்க்கட்சிகளுக்கு எதிரான போராட்டமாக விரிவடைந்து, பேரினவாதத்தின் குவிமையம், தாமாக மட்டுமே இருக்க வேண்டுமென நிறுவ ஆரம்பித்துள்ளது மகிந்த அரசு.

'கவலைப்படாதே சகோதரா' என்கிற பாடலைப் பாடியவாறு, பிரபா கணேசனும், ஆறுமகம் தொண்டமானும், மகிந்தரைச் சாதகப்படுத்தி, தமிழ்மக்கள் மீதான இனவெறித் தாக்குதலை நிறுத்தி விட்டதாகப் பெருமிதமடைவதாக கொழும்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

பேரினவாதத்தின் உடமையாளர் யார் என்கிற போட்டியில், அதிகாரத்திலிருக்கும் மகிந்தரே வெற்றி பெறுவாரென்பதை, இரணிலும் சஜித் பிரேமதாசாவும் புரிந்து கொள்ள வேண்டும்.

யாழ்நகர் ஆர்ப்பாட்டம் என்கிற போர்வையில் மகிந்தருக்கு ஆலவட்டம் பிடிக்க முற்படும் சுதந்திரக்கட்சி அமைப்பாளர் அங்கஜன் போன்றோரின் நடவடிக்கைகள் குறித்து, பேரினவாதத் தலைமைகள் உள்ளுர சிரித்துக்கொள்ளும் என்பதுதான் உண்மை.

அதைவிட இலண்டனில் வசிக்கும் பெண்ணியக் கதையாளர் ஒருவர் சிங்களத்தால் படுகொலை செய்யப்பட்ட இசைப்பிரியாவிற்காகப் போராடாமல், ஜெயலத் ஜெயவர்த்தனாவிற்கு ஆப்பு வைப்பதிலேயே குறியாக இருக்கின்றனர்.

சிங்கள் தானைத்தலைவன் மகிந்தாவிற்கு ஆதரவாக, பதவி மோகம் கொண்ட சில தமிழ்த் தலைவர்களும், பேரினவாதிகளும் ஒன்றிணைந்து முட்டுக்கொடுத்தாலும், புலம்பெயர் மக்களின் போராட்டங்களைச் சிதைக்க முடியாதென்பதை, தொடரவிறுக்கும் புதிய நகர்வுகள் புலப்படுத்தும்.

எழுவோம் நாம்

சுதந்திர தாகங்கள் தணிந்து போவதில்லை--என்றும்
தேசிய எழுச்சிகள் தொய்வு காண்பதில்லை.
எம் மண்ணின் வாசம் முகர்ந்த எம் நாசிகள்,
எம் காற்றின் மென்மை இழைந்த எம் தேகங்கள்,
எம் நீரின் சுவை படிந்த எம் நா செதில்கள்,
உயிர் இறப்பினும் இவ்வுணர்வுகள் மடியுமோ ?

எம் உரிமைகள் கேட்டதற்கு ஓங்கி அடித்தவர்கள்
இன்று ஒற்றுமை பேசி ஓலம் விடுகின்றனர்,
எம் நிலத்தை கேட்டதற்கு நெஞ்சில் மிதித்தவர்கள்
இன்று எம் இனத்தை மாற்ற எம்முன்
புலம்பெயர்கின்றனர்.

எம் உயிர்கள் உன் போரில் அழிந்திருக்கலாம்,
எம் உணர்வுகள் குண்டில் சிதைந்திருக்கலாம்,
எம் உடமைகள் ஆக்கிரமிப்பில் மறைந்திருக்கலாம்,
எம் போராட்டம் குருதியில் உறைந்திருக்கிறது,
மீண்டும் எழுவோம், உரக்க உரைப்போம்,
உன் உணர்வுகள் உணர, எம் உரிமையை
கோருவோம், சமத்துவம் இல்லையெனில்,
இனி சமரசம் இல்லை, அதை நீ
உணரவில்லையெனில் , இனி ஒற்றுமை இல்லை

– வெங்கட்

வெறிகொள்
தமிழர்
புலிப்படை
அவர்
வெல்வர்
என்பது
வெளிப்படை

ஒரு பேப்பர்
ORU PAPER

www.gold-factory.co.uk.

GOLD FACTORY

Importers & Manufatures of 22ct Gold jewellery

Visit us for the latest designs and best prices in 22ct gold and Diamond Jewellery

- 22ct gold jewellery sold at the best prices WE BUY GOLD for CASH
- We LOAN cash against GOLD for small interest rates
- All types of jewellery made and repairing.
- Importers and exporters of gold and diamond jewellery.
- No VAT for overseas visitors

பழைய தங்கம் நியாயமான விலைக்கு
வாங்கப்படும் பழைய தங்கத்திற்க்கு
புதிய தங்கம் கொடுக்கப்படும்

உடனடியாகப் பணம் தேவையா?
சிறிது வட்டியுடன் உங்கள் நகைக்கு ஈடாகப்
பணம் கொடுக்கப்படும்.

நகைகள் யாவும் திருத்தி அமைத்துக்
கொடுக்கப்படும். அதிஷ்டக் கற்களை நியாய
விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

Please come to us for all your jewellery requirement

Gold Factory Limited

149, The Broadway, SOUTHHALL, UB1 LP
Also at 294 Farnham Road, SLOUGH, SL1 4XL
Tel : 01753 536 800

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்: **TEL: 020 8813 8979**

இராஜபக்ச பரிவாரங்களின் வருகையும் கற்றுக் கொண்ட பாடங்களும்

கோபி
ஒரு பேப்பர்

மகிந்த இராஜபக்சவின் லண்டன் வருகையும் அதனையொட்டிய செய்திகளுமே, கடந்த வாரம் உலகப் பரப்பெங்கிலும் உள்ள தமிழர்களால் பேசப்பட்ட முக்கிய விடயமாக இருந்தது. இதனை லண்டனில் உள்ள முன்னணி ஊடகங்களும் பேசின என்பது எதிர்பார்ப்புகளுடன் கூடிய திருப்பமாக அமைந்துள்ளது. காலனித்துவஎசமானர்களின்கவனத்தைஈர்த்ததாலோ என்னவோ, வழமைக்கு மாறாக இந்திய ஊடகங்களும் இவ்விடயத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து செய்தி வெளியிட்டன.

ஒரு கனவானாக, ஒக்ஸ்போர்ட் யூனியனில் உரையாற்றவே மகிந்த வந்திருந்தாக குறிப்பிடப்பட்டபோதிலும், அவர் இத்தனை தடைகளையும் எதிர்பார்த்தபடி வருவதற்கான காரணம்தான் என்ன? இது தொடர்பில் வெவ்வேறு கருத்துகள் தெரிவிக்கப்படுகின்றன. 'முடிந்தால் என்னைப் பிடி' என புலம்பெயர் தமிழர்களுக்கு சவால் விடுவதற்குதான் அவர் லண்டன் வந்ததாக தமிழ் ஊடகங்கள் சில கருத்து வெளியிட்டன. இது லண்டன் தமிழர்களை உசுப்பி விடுகின்ற தகவலாக இருந்தாலும், இராஜபக்சவின் குணாதிசயங்களை பார்க்குமிடத்து, அவ்வாறானதொரு நகர்வினை அவர் எடுத்திருந்தால் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. ஆனால் அதைவிட முக்கியமான ஒரு செய்தியுடன் அவர் லண்டனுக்கு வந்தார். அதனை வெளியிடமுடியாமல் திரும்பிச் சென்றார் என்பதிலிருந்து அவரது பயணம் தோல்வியில் முடிவடைந்திருக்கிறது எனபதனை உறுதியாகக் குறிப்பிடலாம்.

மகிந்த உரையாற்றுவதை ஒருதலைப்பட்சமாக நிறுத்திய ஒக்ஸ்போர்ட் யூனியன், அது தொடர்பாக வெளியிட்ட அறிவித்தலில் அவரை அழைத்ததற்கான காரணங்களை தெளிவுபடுத்தியிருந்தது. அதில் தாம் மகிந்த இராஜபக்சவின் நிலைபாட்டிற்காகவோ அல்லது அவரது அரசியல் கொள்கைகளுக்காகவோ அல்லது அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்காவோ அவரை உரையாற்ற அழைக்கவில்லை எனவும், ஐந்து வருடங்களாக சிறிலங்காவின் அதிபராக உள்ள அவரிடமிருந்து அப்பிராந்தியத்தின் அரசியல் நிலவரம் தொடர்பான கருத்துகளை அறியவே அழைத்திருந்தாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. சமகாலத்தில் வேறு நாட்டுத் தலைவர்களும் உரையாற்ற அழைக்கப்பட்டுள்ளார்கள் என்பதிலிருந்து இதுவொன்றும் சிறப்பான அழைப்பு அல்ல எனத் தெரிய வருகிறது. மகிந்த உரையாற்றுவதற்கு அழைக்கப்பட்டதற்கு அடுத்த நாள் மாலைதீவின் ஜனாதிபதி உரையாற்ற அழைக்கப்பட்டிருந்தார்.

மேற்குலகின் கொள்கைகளை, அவற்றின் சிறிலங்கா தொடர்பான நிலைப்பாட்டினை விமர்சித்து வரும் மகிந்த, மேற்குநாடுகளுக்கு வந்து தன்னிலை விளக்கத்தை அளிக்க வேண்டிய தேவை அவருக்கு இல்லை என்றே சிறிலங்கா தரப்பால் முன்னர் பரப்புரை செய்யப்பட்டது. பூகோளத்தின் தென்மண்டல நாடுகளின் (கூடுதலாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள்) ஆதரவுடன் தாம் ஆட்சி செய்ய விரும்புவதாகவும் மகிந்தவும் அவருக்கு ஒத்தூதும் தயான் ஜயதிலக போன்றவர்களும் அடிக்கடி கூறி வருகிறார்கள். இந்நிலையில் மகிந்தவின் வருகைக்கான நோக்கம்தான் என்ன?

அதனை புரிந்து கொள்வதற்கு சிறிலங்காவின் இன்றைய பொருளாதார நிலையை நாம் நோக்க வேண்டியிருக்கிறது. சிறிலங்கா ஏதோ அபிவிருத்தியடைந்த நாடுகள் வரிசைக்கு சென்றுவிட்டதாக, அங்கு புதிதாகப் போடப்படும் Tarmac பாதைகளை பார்த்து கூறுபவர்களை தவிர்த்து விட்டு, உண்மையான நிலவரத்தினை பார்ப்போம்.

கடந்த மாதம் சிறிலங்கா அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட பாதீட்டை (வரவு செலவுத் திட்டம்) உற்று நோக்கினால், அது சர்வதேச நாணய நிதியத்தின் கட்டுப்பாடுகளினை ஏற்றுக் கொண்டு தயாரிக்கப்பட்டது என்பதனை அறிந்துகொள்ளலாம். கோதுமைக்கான மானியத்தை நிறுத்துமாறு சர்வதேச நாணய நிதியம் வற்புறுத்தினால், கோதுமை பயங்கரவாதிகளின் உணவு அதை உண்ணாமல் குரக்கன் உணவுகளை (பாணை விடுத்து ஹலப்ப) சாப்பிடுமாறு சிங்கள மக்களை ஏமாற்றலாம். ஆனால் நிதித்துறை விடயத்தினை கவனித்து வருபவர்களை மகிந்த சகோதரர்கள் இலகுவில் ஏமாற்ற முடியாது.

சிறிலங்காவின் பாதீடு பற்றி கருத்து வெளியிட்ட அமெரிக்காவிலிருந்து வெளிவரும் Wall Street Journal, வெளிநாட்டு முதலீடுகளை கவரும் வண்ணம் அது தயாரிக்கப்பட்டுள்ள போதிலும் அதன் நம்பகத்தன்மை பற்றி ஐயப்பாடானது எனத் குறிப்பிட்டுள்ளது. பாதீட்டில் நிதித்துறையில் சீர்திருந்தங்களை அமுல்படுத்துவது பற்றி தெரிவிக்கப்பட்டுள்து. ஆனால் வெறும் அறிவிப்புகளைக் காட்டிலும், அவற்றினை அமுல்படுத்துவது முக்கியமானது என அப்பத்திரிகை கருத்து வெளியிட்டுள்ளது. சிறிலங்காவில் முதலீடு செய்வதையிட்டு வெளிநாட்டு நிறுவனங்கள் இன்னமும் நம்பிக்கை கொள்ளவில்லை என்பதனையே இது வெளிப்படுத்துகிறது.

மறுபுறத்தில் வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிப்பதற்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளுமாறு சர்வதேச நாணய நிதியம் வற்புறுத்தி வருகிறது. மேற்கு நாடுகளின் ஆதிக்கத்திலிருக்கும் இந்நிதியம், சிறிலங்கா அரசாங்கம் கேட்டதற்கு அதிகமான தொகையினை கடனாக, வழங்கியது என்பதனை இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும். வர்த்தக வங்கிகளைக் காட்டிலும் அதிக வட்டிக்கு கடன் வழங்கும் சீனா வினால் இவ்விதமான கட்டுப்பாடுகள் எதனையும் விதிக்க முடியவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

ஒக்ஸ்போர்ட் யூனியனின் அழைப்பை பயன்படுத்தி, மேற்கு நாடுகளிலுள்ள முதலீட்டாளர்களின் நம்பிக்கையினைப் பெறுவதற்கான பரப்புரையினை முன்னெடுக்க சிறிலங்கா திட்டமிட்டிருந்தது. இவ்வாறான பரப்புரைகளுக்காக பெல் பொற்றின்ஞர் (Bell Potinger) என்ற நிறுவனத்தை வருடாந்த மூன்று மில்லியன் பவுண்ஸ் பணம் கொடுத்து சிறிலங்கா அமர்த்தியுள்ளது. இந்நிறுவனத்தின உதவியுடனேயே ஒக்ஸ்போர்ட் யூனியன் உரைக்கான அழைப்பினை மகிந்த பெற்றுக் கொண்டார். தனது பொருளாதார திட்டங்களை வெளியிட்டு வெளிநாட்டு முதலீடுகளை கவர்வதற்கு ஒக்ஸ்போர்ட் யூனியன் போன்ற பிரசித்தமான அவை பயன்படும் என்ற ஆலோசனை மேற்படி நிறுவனத்தால் வழங்கப்பட்டிருக்கலாம் என நம்ப இடமுண்டு.

மகிந்த லண்டனுக்கு வருவதற்கு முன்னதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்தார். இவ்விணக்கப்பாட்டினை எட்டுவதற்கு என்ன உறுதிமொழிகள் வழங்கப்பட்டன என்பதை அறிய முடியாவிட்டாலும், த.தே.கூ பாதீட்டினை எதிர்த்து வாக்களிக்காமல் அரசுக்கு நல்லெண்ணத்தை காட்டியதன் மூலம் மகிந்தவிற்கு இணைவாக அது நடந்து கொண்டது. ஒக்ஸ்போர்ட் உரையின்போது, தமிழ் மக்களின் பிரச்சனைக்கான அரசியற் தீர்வு பற்றி கேள்வி எழுப்பப்பட்டிருப்பின், அதற்கு த.தே.கூ. இன் 'நல்லெண்ண நடவடிக்கை' துணைக்கழைக்கப்பட்டு அரசியல் தீர்வு விடயத்தில் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தப்படவுள்ளது எனப் பதிலளிக்கப்பட்டிருக்கும்.

மகிந்தவின் உரை ஒருதலைப்பட்சமாக நிறுத்தப்பட்டதை தொடர்ந்து சிறிலங்கா தரப்பில் வெளியிடப்பட்ட அறிக்கையை பெல் பொற்றின்ஞர் நிறுவனமே தயாரித்திருந்தது. அவ்வறிக்கையில் ஒக்ஸ்போர்ட் யூனியன் தமக்கு உரையாற்ற சந்தர்ப்பம் மறுக்கப்பட்டதையிட்டு வருத்தப்பட்டாலும், லண்டனிலுள்ள வேறு அரங்கத்தின் ஊடாக மகிந்த தனது கருத்தினை வெளியிடவிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறான ஒரு வாய்ப்பினை மகிந்தவிற்கு பெல்பொற்றின்ஞரால் பெற்றுக் கொடுக்க முடியவில்லை. இதுவே லண்டனில் மகிந்தவிற்கு கிடைத்த இராசதந்திர ரீதியான தோல்வியாக அமைந்தது.

மேற்கு நாடுகள் சிறிலங்கா அரசை தோல்வியடைந்த நாடுகளின் பட்டியலில் சேர்த்துக் கொள்ளாவிட்டாலும், அங்கு நடைபெறும் ஜனநாயக விரோத நடவடிக்கைகளை அவை ஏற்றுக் கொள்ளவில்லை. இவ்விடயத்தில் மேம்பாட்டினை ஏற்படுத்தாமல் அவற்றின் உதவியை சிறிலங்கா பெற்றுக் கொள்ள முடியாது. வர்த்தகத்திற்கு தேவையான உறுதித்தன்மை காணப்பட்டால் அதுவே போதுமானது என இந்திய, சீன, யப்பான் அரசுகள் போல் மேற்கு நாடுகள் செயற்படப் போவதில்லை. அதற்குரிய பாரிய சந்தை வாய்ப்புகள் எதுவும் சிறிலங்காவில் இல்லை என்பதும் இதற்கான காரணமாகவிருக்கும். ஒரு புறம் மேற்கு நாடுகளுக்கு இணைவாக செயற்பட முடியாமலும், மறுபுறம் அதன் முதலீடுகளினை வேண்டி நிற்கும் கையறு நிலையில் சிறிலங்கா அரசு உள்ளது.

சிறிலங்காவில் நடைபெற்ற இனவழிப்பு நடவடிக்கைகள் போர்க்குற்றங்கள் என்ற அளவில் மேற்குநாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன. விக்கிலீக்ஸ் இணையத்தளம் வெளியிட்ட அமெரிக்க வெளியுறவுத் துறையின் உள்ளக அறிக்கைகள் இதனை வெளிப்படுத்தியுள்ளன. சர்வதேச மன்னிப்புச் சபை, மனிதவுரிமை கண்காணிப்பகம், சர்வதேச முரண்பாடுகளுக்கான மையம் என்பன போர்க்குற்றங்களை விசாரிக்க சர்வதேச விசாரணையை வலியுறுத்தி வருகின்றன. பிரித்தானியாவில் இயங்கும் முன்னணி ஊடகங்களும் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி வருகின்றன. இவ்வாறான ஒரு வாய்ப்பான சூழ்நிலையை தமிழர்கள் தவறவிடாமல் பயன்படுத்திக் கொள்வதே புலம்பெயர் தமிழ் மக்களின் முக்கிய பணியாக அமைந்துள்ளது.

கடந்த வாரம் மகிந்தவிற்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் பிரித்தானியாவில் வசிக்கும் தமிழர்கள் தன்னெழுச்சியுடன் கலந்து கொண்டமையை எவ்விதத்திலும் குறைத்து மதிப்பிட முடியாது. லண்டனில் காணப்பட்ட மோசமான காலநிலையையும் பொருட்படுத்தாது வயது வேறுபாடின்றி மக்கள் இப் போராட்டங்களில் கலந்து கொண்டனர். குறிப்பாக இளையவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது. இவ்வகையான கவனயீர்ப்புப் போராட்டங்களை தொடர்ச்சியாகவும் புலம்பெயர் தேசங்கள் அனைத்திலும் செய்ய வேண்டியதன் அவசியத்தை இங்கு சுட்டிக் காட்டுதல் அவசியமானது.

பேனா பிடித்த போராளி ஐயா

சுகி
(ஒரு பேப்பர்)

மிக விலாசமான அறை ஒன்றின் இரு மருங்கிலும் மிக நீண்ட பெரிய புத்தக அடுக்கில் ஒழுங்காக அடுக்கப்பட்ட புத்தகங்கள், பழைய பத்திரிகை குறிப்புகள் அடங்கிய கோப்புகள். இவற்றின் மத்தியில் இருந்த மேசையில் தட்.தட்..தட்.. என தட்டச்சு இயந்திரத்தை இயக்கிக் கொண்டிருப்பார் சிவநாயகம் ஐயா. யாழ்பாணத்தில், நான் படித்துக் கொண்டிருந்த காலத்தில் எனது தந்தையார் "Saturday Review" பத்திரிகையை கிரமமாக வாங்குவதால் அவரைப் பற்றி கேள்விப்பட்டிருந்தேன்.

இங்கு அவர் "Hot Spring" என்ற சஞ்சிகையை நடத்துவதாகவும் அதனை வடிவமைப்புச் செய்வதற்கு (layout design) தொண்டர்கள் தேவைப்படுகிறார்கள் என அறிந்து, அவருடன் பணி செய்யும் ஆவலில் அப்பத்திரிகைக் குழுவில் இணைந்து கொண்டேன். அது ஒன்றும் பெரிய குழு கிடையாது. பத்திரிகையின் ஆசிரியர் ஐயா, வடிவமைப்பு பார்த்திபன் (ஒரு பேப்பர், உதவியாக நான், விநியோகம் மற்றும் நிர்வாக அலுவல்களைக் கவனிக்க பாலா அண்ணா, கணக்கு வழக்குப் பார்க்க முருகானந்தன் அண்ணா, எழுத்துப் பிழை சரி பார்க்க சில ஆர்வலர்கள் என சிறிய ஆனால் ஆர்வமான குழு அது.

ஐயா மிகவும் இயல்பாக, நீண்ட நாட்கள் பழகியவர் போல அளவளாவுவார். எனது பதினெட்டு மாத மகனையும் கொண்டு போய் வேலை செய்வதால், அலுவலக கணனி பகுதிக்கு வரும் நேரம் எல்லாம் அவனைக் கதை கேட்டுச் செல்வார். குழந்தைகள் மீது அவருக்கு விருப்பம், பின்பு அவருக்கு பேரன் பிறந்த போது பேரனைப் பற்றிச் சொல்லி மகிழ்வார். அவரின் குடும்பத்தில் மிகவும் அன்பும், பாசமும் வைத்திருந்தார்.

அவருடன் பணியாற்றிய நாட்கள் மிகவும் மகிழ்ச்சியானவை. நானும், பார்த்திபனும் அவரிடம் ஏதாவது ஒரு விடயத்தைப் பற்றிக் கேட்டால், மிகவும் ஆர்வமாக, ஆழமாக அதற்குரிய புத்தகங்கள், சான்றுகளோடு ஒரு விரிவுரையாளன் போல் அழகாக விளங்கப் படுத்துவார். ஏதோ ஒரு பெண்பிள்ளையும், சின்னப் பெடியனும் கேட்கிறார்கள் நான் சொல்வது இவர்களுக்கு எங்கே விளங்கப் போகிறது என்றில்லாமல் அடுத்த சந்ததிக்கும் தனது சிந்தனைகள், அரசியல் விளக்கங்கள் போய்ச் சேர வேண்டும் என்பதில் மிகவும் ஆர்வமாக இருந்தார்.

வரவேற்பறையில் அழகுக்காக புத்தங்கள் அடுக்கி வைத்து, அதில் என்ன இருக்கிறது என்பதே தெரியாமல் பலர் இருக்கையில், சில அரிய நூல்களையும், அரசியலில் முக்கியமான பத்திரிகைக் குறிப்புகளின் தொகுப்பு என ஏராளமான புத்தங்களைச் சேர்த்து வைத்திருந்ததோடு எதில் என்ன இருக்கின்றது என்று உடனே எடுக்கும் நேர்த்தி அவரிடமிருந்தது. அத்தோடு அவர் இங்கிலாந்தை விட்டு கொழும்புக்குப் போகும் போது தான் சேர்த்து வைத்த புத்தகங்கள், அடுத்த தலைமுறைக்கு போய்ச் சேர வேண்டும் என்ற ஏக்கம் அவரிடம் இருந்தது. இறுதியில் இடவசதியைக் கருத்தில் கொண்டு ரூட்டிங் முத்துமாரி அம்மன் கோயில் உரிமையாளரிடம் அவற்றைக் கையளித்ததாக கேள்விப்பட்டேன்

அறுபது வயது வந்தவுடனே பொது வேலைகளில் இருந்து விலகுவதும், இன்னும் சிலர் திருமணத்திற்கு பிறகு பொது வேலைகளிலிருந்து ஒதுங்கிக் கொள்ளும் காலத்தில் 70, 75 வயதிலும் ஒரு கரும வீரன் போன்று தனது கடமையை செய்வதில் மிகவும் கவனமாக இருந்தார். அவர் எடுக்கும் மருந்துகளின் தொகையையும், இன்சுலினையும் பார்த்தால் கவலையாக இருக்கும் இத்தனை வருத்தங்கள் இருந்தாலும் காலையில் அறையில் இருந்து வரும் போது நேர்த்தியாக வெளிக்கிட்டு, ஒரு அலுவகத்தில் வேலை செய்யும் உணர்வு வெளிப்படும் வகையில் நடந்து கொள்வார்.

"Hotspring" சஞ்சிகையின் Layout இல் இருந்து அதில் வரும் படங்களைத் தெரிவு செய்தல், எழுத்துருவாக்கம், படவிளக்கம், என்று ஒவ்வொரு விடயத்திலும் அது நூறு விகிதம் சரியாக வர வேண்டும் என்பதில் அவர் கவனமாக இருப்பார்.

ஐயாவின் பேச்சிலும், எழுத்துக்களிலும் எப்பொழுதும் sense of humour வெளிப்படும், அவரிடம் தட்டச்சு இயந்திரத்தை விட்டுவிட்டு கணனிக்கு வாருங்கள் என்றால் "you can't teach new trick[to an old donkey" என்று சிரிப்போடு சொல்வார்.

தமிழ் ஈழம் தான் தமிழரின் ஒரே தீர்வு என்பதில் உறுதியாக இருந்தவர் ஐயா. தேசியத் தலைவர் மீது மிகவும் மதிப்பும், மரியாதையும் வைத்திருந்தவர். அவர் எழுதிய ஆசிரியர் தலையங்களில் அது தெளிவாகத் தெரிகின்றது. அவை இப்போது வாசித்தாலும் பொருந்துவனவாகவே உள்ளன.

உதாரணமாக 1995 யில் யாழ் கைப்பற்றப்பட்டதன் பின் எழுதிய "Living under army terror" (July 99) என்பது இப்போதைய நிலைக்கும் பொருந்துகிறது. அதே போல அவர் எழுதிய "Nothing is ever settled, until it's settled right", "The role of the Tamil expatriates", "When will the world speak" என்ற தலைப்புகளுடனான கட்டுரைகளைக் குறிப்பிடலாம்.

"Madame President, your mask is slipping!" என்று சந்திரிகாவுக்கு எழுதியது இப்போ மகித்தாவுக்கும் பொருந்துகிறது!. அவர் இறுதியில் " War has ceased to be an option. If they are wise enough, the Sinhalese people too should know that there in no- God given law that an island shall support just a single state, nor does the united nations impose limits on the size of nation states for eligibility to membership. If living together in peace is so hard, nations, like people could be better off living separately" (Nov 99) இல் எழுதியிருந்தார்.

அவர் மிகவும் எள்ளல் தொனியில், மிகவும் நாசூக்காக விடயத்தைச் சொல்லக் கூடியவர். சில நேரம் அவரின் எள்ளல் தொனி முதலுக்கே மோசமாக வந்ததும் உண்டு. 1983 இல் ஜனாதிபதி ஜயவர்த்தனா காலத்தில் துவிச்சக்கர வண்டிகளை விடுதலைப் புலிகள் பாவிக்கிறார்கள் என்று காரணங் காட்டி அதை யாழ்பாண நகர எல்லைக்குள் தடை செய்ய வேண்டும் என இராணுவத் தரப்பினால் பரிந்துரை செய்யப்பட்டது. Saturday Review இல் இதுபற்றி கருத்து வெளியிடுகையில், "Banning bicycles because some "terrorists" use them is like banning sex because some people take to adultery. Amen" என்று எழுதினார். சிறிலங்கா அரசு துவிச்சக்கர வண்டியை தடை செய்யாமல், Saturday review வை தடை செய்தது.

வழமை போல தமிழர் மத்தியில் பத்திரிகை துறையில் இருக்கும் பொருளாதார நெருக்கடிக்கு "Hotspring" ம் விதிவிலக்கு இல்லாத படியால் அது தொடர்ந்து வெளிவர முடியாமல் 2000ம் ஆண்டு நின்றுவிட்டது. அவரால் எழுதப்பட்ட "Sri Lanka: witness to history"," The pen and the gun" என்ற புத்தகங்கள் இளைய தலைமுறையினரால் இலங்கையைப் பற்றி அறிந்து கொள்ளவதற்கு மிகவும் பிரயோசனமான நூல்கள்.

இன்றைய ஒரு பேப்பர் ரின் தோற்றத்திற்கும், அதன் உருவாக்கத்திற்கும் வழிகாட்டி அவரே. கம்பன் வீட்டு கட்டுத் தறியும் கவிபாடும் என்பது போல் ஒரு பேப்பர் ரும் அவரின் பாசறையில் பிறந்த குழந்தையே, இன்று தத்தி, தவழ்ந்து, நடை போடுகிறது. அவர் போராட்டத்திற்கு வெளியே நின்றாலும், ஒரு பேனா பிடித்த போராளி போன்றே அவரின் வாழ்க்கையும், சிந்தனையும் எழுத்துகளும் இருந்தன. அத்தகைய மாமனிதருக்கு ஈழத் தமிழர்கள் என்றென்றும் கடமைப்பட்டுள்ளனர்.

சிறகு வளர்ந்த குரல்களுடன் பறந்தவன்



இளங்கோ
(காலத்தில்)

1. நீண்ட காலமாய் கவிழ்ந்திருந்த குளிர்காலம் மெல்ல மெல்ல விலக, குழந்தமைக்காலக் குதூகலத்தோடு சனங்கள் தெருக்களில் பெருந்திரளாய் நடமாடிக் கொண்டிருந்தார்கள். இவன் ஏழாவது மாடியிலிருந்து ரொறொண்டோவின் முக்கிய தெருக்கள் சந்திக்கும் டன்டாஸ் ஸ்குயரைப் பார்த்தபோது ஏதோ எறும்புக்கள் நிரை நிரையாக மறைவிடத்தை விட்டு வெளியே வருவது போல மனிதர்கள் மிகச் சிறிதாகத் தென்பட்டார்கள்.

இப்படியொரு மனித எறும்பாக மாறி தானும் பெரும் திரளுக்குள் கலக்காது, தூரத்திலிருந்து எல்லாவற்றையும் விலத்திப் பார்த்துக் கொண்டிருப்பதுதான் அனைத்துப் பிரச்சினைகளும் காரணமென்ற நினைப்பு மேலிட, சலித்துக் கொண்டு மீண்டும் தான் வேலை செய்து கொண்டிருந்த உணவகத்தின் அடுப்பங்கரைக்குள் இவன் நுழைந்தான்.

ஒருபத்துநிமிட சிறிய இடைவேளைக்குள், அடுப்படியில் வந்து குவிந்த சாப்பாட்டுக் கோப்பைகளைப் பார்க்கும் போது திகைப்பாக இருந்தது. இனி இக் கோப்பை களை தேய்த்து நீரில் அலம்பி dish washerற்குள் போட்டெடுத்துத் துடைத்து வைக்கும் வரை ஓர் இயந் திரமாகவே மாற வேண்டியிருக்கும். தொலைவிலிருந்து அவதானித்தபோது டன்டாஸ் ஸ்குயரில் சனங்கள் தெரிந்ததைப் போல, தானும் இந்தக் கோப்பைகளைக் கழுவிக் கழுவி பெரும்பாரத்தை இழுத்துத் தவிக்கும் ஓர் எறும்பு போல ஆகிக் கொண்டிருக்கின்றேனோ என்ற நினைப்பு இவனுக்குள் பரவத் தொடங்கியது.

இப்படித் தீவிரமாய் யோசிப்பதுதான் இவனுக்கு பெரும் சித்திரவதையாக நாளடைவில் மாறியிருந்தது. தனது சிந்தனைகள் அங்குமிங்குமாய் அலைவுற்று ஒரு பெரும் வலையில் சிக்கித் திணறுவதைத் தவிர்க்கும்பொருட்டு, இவன் கழுவுகின்ற கோப்பைகளோடு உரையாடத் தொடங்கி விடுவான். ஆனால் அங்கு கோப்பைகளோடு நிகழும் உரையாடல்கள் கூட இந்தக் கோப்பையில் என்ன சாப்பாடு தயாரிக்கப்பட்டுப் பரிமாறப்பட்டிருக்கும்? அதைச் சாப்பிட வந்தவர் யாராயிருப்பார்? தனித்துச் சாப்பிட வந்தவரா அல்லது வேறு யாரோடும் சேர்ந்து சாப்பிட வந்தவரா? என்று கேள்விகள் இவனது மூளைக் குள் பல இலையான்களைப் போல பறக்கத் தொடங்கி விடும். ச்சீய்..தூ... என்று நினைவின் இலையான்களைத் துரத்தத் தொடங்கினாலும் அவ்வளவு எளிதில் அவனை விட்டு இலையான்கள் தூர விலகியோடுவதில்லை. ஓர் இலையானை அடித்துக் கொல்ல அது இன்னும் நூறு முட்டைகளை இட்டு விட்டுச் சாவது போல, ஒரு தீர்க்க முடியா வியாதியாய் இவ்வாறான எண்ணங்கள் அவனுக்குள் சடைத்துக் கிளைவிடத் தொடங்கிவிடும்..

2. கனடாவிற்கு வந்தபோது அவனுக்கு எல்லாமே ஆச்சரியமாயிருந்தது. மார்கழியில் பொழிந்து கொண்டிருந்த கனடாப் பனி மட்டுமில்லை, பின்பு அது நிலத்தில் திரட்சியான வெண்முகில்கள் வந்திறங் கியது மாதிரி பலநாட்களாய் உறைந்து கிடப்பது வரை எல்லாமே புதிய அனுபவமாய் இருந்தது.

படிக்கப் போயிருந்த பள்ளிக்கூடம் கூட வியப்பைத் தனக்குள் புதைத்து வைத்திருந்தது. ஆசிரியர்கள் வகுப்பிற்குள் வரும்போது எழும்பி நிற்கத் தேவை யில்லை என்பதிலிருந்து எழுதும் மேசையில் பிருஷ்டத் தைப் பதித்து, கால்களை அந்தரத்தில் தொங்க வைத்துக் கொண்டே வாத்திமாரோடு கேள்விகளைக் கேட்கலாம் என்பதுவரை எல்லாமே புது அனுபவமாகத் தான் இருந்தது. பள்ளிக்கூடத்தில் இவன் கணிதப் பாடங்களுக்கு மிகவும் விரும்பிச் செல்வான். வகுப்பிலும் இவன் கணிதம் நன்றாகச் செய்பவர்களில் ஒருவன் என்கிற மதிப்பும் இருந்தது. இதற்கான வரலாறு பெரிதொன்று மில்லை, மற்றப் பாடங்களுக்கு ஆங்கில மொழி அத்தியாவசியத் தேவையாக இருந்த கணித்ததில் எண்களோடு மட்டுமே ஒளித்துப் பிடித்து விளையாட மட்டுமே வேண்டியிருந்தது.

ஈழத்தில் இவனுக்கு சிவசம்பு என்றொரு கணித வாத்தி வாய்த்திருந்தார். மனுசனின் மனோநிலை கனடா காலநிலை போலத்தான் இருக்கும். எப்போது நல்ல நிலையில் இருப்பார் எப்போது கொதிக்கின்ற எண்ணெய்யாக இருப்பார் என்று எவரும் எளிதாக அறிந்து விட முடியாது. அதுவும் வீட்டிலிருந்து வெளிக்கிடும் போது அவரின் மனைவியோடு பிணக்குப்பட்டு வந்திருந்தால், அன்று வகுப்பில் கொப்பிகள் விளாங்காய்க்கு எறிகின்ற கல்லுகள் மாதிரி வகுப்புக்கு வெளியே பறக்கத் தொடங்கிவிடும்.

ஒவ்வொரு நாளும் யாரோ ஒருவர் இப்படி பலிக்கடாவாக வேண்டும். பிறகு வகுப்புக்கு வெளியே வேள்விக்குத் தயாராய் நிற்கிற ஆடு மாதிரி வகுப்பு முடிகிறவரை தலைகுனிந்து அவமானத்துடன் நிற்க வேண்டும். சிவசம்பு வாத்தியின்ரை இந்த அக்கிரமத்தாலேயே பல பெடியங்களுக்கு கணித பாடம் தொடங்கப் போகின்றது என்றாலே - கனடாத் தமிழ்க் கடைகளில் உறைப்பு மிகுந்த கொத்து ரொட்டியைத் தின்றபின் வயிற்றுக்கு வரும் உபத்திரம் போல- கலக்கமாயிருக்கும்.

இவனது வகுப்பில் தமிழ்ப் பெட்டையொருத்தி இருந்தாள். சும்மாவே அழகுதான், ஆனால் அது போதாதென்று ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கலரில் அலங்காரம் செய்து கொண்டு வருவாள். ஒருநாள் சிவப்பு வர்ணத்தில் ஆடைகள் அணிந்து வருகின்றாள் என்றால் கழுத்தில் போட்டிருக்கும் செயின், கால்/கை விரல் நகங்கள், ஏன் சிலவேளைகளில் தலைமயிர் கூட அணிந்திருக்கும் ஆடைகளின் வர்ணத்திற்கு ஏற்ப மாறியிருக்கும்.

உணவு இடைவெளிகளில் டொமினோ, பிளக் ஜக் என்று காசு வைத்துச் சூதாடும் பெடியங்கள் சிலர் கூட, அவள் இன்றைக்கு என்ன கலரில் வருவாள் என்பதை வைத்து சூதாடும் அளவிற்கு அவளின் அழகும் அலங்காரமும் பாடசாலை வட்டாரத்தில் புகழ் பெற்றிருந்தது. இப்படி எல்லாவற்றையும் பார்த்துப் பார்த்து நேர்த்தியாகச் செய்யும் அவளுக்கு பிடிக்காத ஒரு விடயமிருந்தது, அது கணிதம்.

இந்த ஒரு விடயத்தால்தான் இவனோடு அவள் முதன் முதலில் பழகத் தொடங்கினாள். அவ்வப்போது தரப்படும் வீட்டு வேலைகள், அசைன்மென்ட்கள், குயிஸ்களில் கொஞ்சம் நல்ல புள்ளிகள் பெற்றுவிட்டால் பிறகு இறுதிப் பரீட்சை அவ்வளவு செய்யாவிட்டாலும் கவலைப்படத் தேவையில்லை. சிலவேளைகளில் சில கணக்குகளை இவன் விளங்கப்படுத்தும் போது அவள் எங்கையாவது வேடிக்கை பார்த்தோ அல்லது போட்டிருக்கும் அலங்காரத்தைச் சரி செய்தோ கொண்டி ருப்பாள்.

இதைப் பார்த்து இவனுக்கு எரிச்சல் வந்து. 'இப்படி அலங்காரம் போடுகின்ற நேரத்தில் கொஞ்ச நேரத்தையாவது கணக்குப் படிக்க பயன்படுத்தினால் நன்றாகச் செய்யலாமே' எனக் கூறுவான். 'இவ்வளவு சிரத்தையாக அலங்காரம் செய்வதால் உன்னைப் போன்ற பெடியங்கள் எல்லாம் திரும்பித் திரும்பிப் பார்க்கின்றீர்கள், கணக்கு நன்றாகச் செய்தால் யார் என்னைக் கவனிக்கப் போகின்றீர்கள்?' என்று லொஜிக்காய் கேட்டு இவனை மடக்குவாள். உண்மை தான்.

வகுப்புக்கு வந்து Doriots பையை உடைத்து அதிலிருந்து சிப்ஸை ஒவ்வொன்றாய் வாய்க்குள் எடுத்துப் போடும்போது அவள் உதடுகளினதும் சிப்ஸினதும் கடும் சிவப்பு வர்ணம் இவனை வேறெந்த உலகிற்கோ அழைத்துப் போவதை இவனால் மறைக்க முடியாதுதான்.

இவர்களுக்கு கணிதம் படிப்பித்த ஆசிரியர் இரஷ்யப் பின்புலத்தைக் கொண்டவர். ஒஸ்ரோஸ்விஸ்கி என்ற பெயரை உச்சரிப்பதற்குள் வாய்க்குச் சுளுக்கு வந்துவிடும், ஆனால் அவரின் பெயரிலுள்ள 'விஸ்கி' போல மிகவும் கனிவான மனுசன். மேலும் இவன் பாடம் நடக்கும் போது பாடத்தைக் கவனிக்காது எதையாவது செய்து கொண்டிருந்தால் கூட, ஒஸ்ரோஸ்விஸ்கி வாத்தி ஊரில் இவனுக்கு வாத்திமார் செய்வதுபோல,அவனை வகுப்பில் எழும்பி நிற்கச் சொல்லியோ, வகுப்பை விட்டு வெளியே போகச் சொல்லவோ - முக்கியமாக - பிரம்பை எடுத்து அடிக்கவோ மாட்டார்.

(தொடரும்)

நாங்கள் இருக்கிறோம் அஞ்சாதீர்!

உங்கள் வர்த்தகத்தில்....

- கடனுக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
- Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
- வியாபாரத்தை பலப்படுத்த...
- TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...

Experienced Expertise
only a phone call away

One-off specific instructions are welcome, You can keep your own accountants, but we can provide specialist help to tackle problems with Inland Revenue and Customs & Excise.

We are specialists in solving Tax Investigations, Negotiations & Settlements.

- Tax Solutions
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation

- Chartered Accountants & Registered Autitors
- Accountancy / Audit / Business Startup & Consultancy
- Solicitors Rules Audit

- IT Solutions Supply
- Install, Advice / Train & Support
- IRIS, SAGE, MYOB, DELL
- **up to 40% discount** on retail prices

- Licensed Insolvency Practice, Liquidation and for all insolvency advice.

For **FREE** initial consultations, contact:
David Beckwith, Sabia Sahota or **Ananthan Arnold**

BBK Partnership
Chartered Accountants & Business Strategic Solutions
1 Beauchamp Court, Victors Way, Barnet, Herts EN5 5TZ
Telephone: **020 8216 2520** Fax: **020 8216 2521**
Web: www.bbkca.com

"அரசு" சார்பில்லாத உதவி நிறுவனங்கள்...!



ஞானசுந்தரம் மனோகரன்
இனியொருவில்

வரலாறு முழுவதும் ஒரு சிறுபான்மையினரை பிரதிநிதிப்படுத்தும் அரசாங்கங்கள் தமது அதிகாரத்தையும், இலாபங்களையும், வசதிகளையும் பாதுகாத்துக் கொள்ளுவதற்கு அடக்குமுறை அர்ச இயந்திரத்தையும், சமூக நிறுவனங்களையும் எப்போதும் சார்ந்து வந்துள்ளன.

கடந்த காலங்களில் குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளில் ஆளும் அரசாங்கங்கள் சுரண்டப்படும் மக்களை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு உள்நாட்டு, வெளிநாட்டு மதவாத அமைப்புக்களுக்கு நிதி அளித்து ஆதரித்து வந்துள்ளன.

இந்தியாவில் அதிக பணத்தைப் பெறும் அரசு சாரர் நிறுவனமாகக் கருத்தப்படுவது விஸ்வ இந்து பரிசத் என்ற இந்து மத வெறி அமைப்பு.

2000 ஆம் ஆண்டின் பின்னான புதிய மூன்று தசாப்தாங்களும், அதாவது 2030 வரையான காலப் பகுதி வரைக்கும் மக்கள் போராட்டங்களுக்கான காலப்பகுதி என அமெரிக்க உளவுத் துறை ஆராய்ச்சி மையம் கூட ஒத்துக் கொள்கிறது. இந்தக் காலப் பகுதியில் இப் போராட்டங்களை எதிர்கொள்வதற்கான முதன்மையான தந்திரோபாயங்களில் ஒன்றாக அரசு சாரா தன்னார்வ நிறுவனங்கள் உருவாக்கப்படுகின்றன.

30 ஆயிரம் அப்பாவிகள் வரை போபால் நச்சுவாயுக் கசிவில் கொல்லப்பட்ட பின்னர் இந்திய அமரிக்க அரசுகளுக்கு எதிராக மக்கள் போராட்ட சக்திகளின் பின்னால் அணிதிரள ஆரம்பித்தனர். இவர்களின் போராட்டங்களைப் பொறுப்பெடுத்துக் கொண்ட தன்னார்வ நிறுவனங்கள் சிறிய அளவிலான போராட்டங்களை ஆங்காங்கே நடத்தி மக்களின் உணர்வுகளைத் தணித்தன. இறுதியில் போபால் வாயுக் கசிவிற்குப் பொறுப்பானவர்கள் யாரும் தண்டிக்கப்படவில்லை என்பதோடு மக்களும் உரிய நட்ட ஈட்டைப் பெற்றுக்கொள்ளவில்லை. ஆரம்பத்தில் அங்கிருந்த தன்னார்வ நிறுவனங்கள் அனைத்தும் அரசியலில் தலையிடுவது தமது கடமையல்ல எனக் கூறிப் பின்வாங்கி விட்டனர்.

ஏன் இன்று இலங்கையில் உள்ள அந்நியநிதி உதவியால் செயற்படும் அரசு சாராத அமைப்புகள் எனப்படுவன மறைமுகமாக துயரம் விளைவிக்கும் அமைப்பு வடிவங்கள் தான். அவை பெரும் முற்போக்கான அமைப்புகள் போலநடிக்கும், ஆனால் இருக்கும் சமூக நிலைக்கு எதிரான சக்திகளை கலைக்க செயற்படும் இந்த வகை அமைப்புக்கள் உலகம் முழுக்க குறிப்பாக பின்தங்கிய நாடுகளில் பெருமளவு அதிகரித்துள்ளன. இன்று நாம் அனைத்து போராட்ட சக்திகளிலும், அனைத்து பாதிக்கப்பட்ட பகுதிகள் மத்தியிலும் அவற்றை நாம் எதிர் கொள்வதால் அவற்றின் பாத்திரத்தை புரிந்து கொள்வது மிக மிக அவசியமாகின்றது.

ஜேர்மனிய அரசின் பணத்தில் இயங்கும் ஒரு அமைப்பு மட்டும்தான் இலங்கை அரசிற்கு எதிராக பேசிவருகின்றது. இலங்கை அரசின் ஊழல் குறித்துப் பேசுகின்ற அளவிற்கு அதன் போர்க் குற்றங்கள், பேரினவாத அரசியல் ஆகியன குறித்துப் பேசுவதில்லை.

சமூக உணர்வுள்ள பல படித்த இளையோர் இவ்வமைப்புக்களை நோக்கி உள்வாங்கப்படுகின்றனர். அவர்கள் போராடுவதற்குப் பதில் சமூக சேவை என்ற பெயரில் இவ்வமைப்புக்களோடு இணைந்து கொள்கின்றனர். மக்கள் சார்ந்த எதிர்ப்பியக்கங்கள் குறித்துச் சிந்திக்க கல்வியறிவுடைய யாரும் முன்வருவதில்லை. அவர்களெல்லாம் இவ்வமைப்புக்களில் இணைந்து தமது தனிப்பட்ட வாழ்க்கையை ஐந்து நட்சத்திர விடுதிகளிலும் ஆடம்பர உலக நகரங்களிடும் செலவிடும் நிலைக்கு வந்துவிடுகின்றனர்.

பல அமைப்புக்கள் பல குறிப்பான பிரச்சினைகளில் மக்களை நேர்மையாக திரட்டுகின்றன. ஆனால் இந்த அரசுசார்பில்லாத என்று சொல்கின்ற அரசுசார்ந்த அமைப்புகள் எம் மக்களின் உரிமைக்கான போராட்ட சக்திகளை போராட்டதிலிருந்து சுய உதவிப் பொருளாதார நடவடிக்கைக்கு திசை திருப்ப உணர்வு பூர்வமாச் செயல்படுகின்றன. பின் அதிகார அரசாங்கத்தின் தரகர்களின் கட்டுப்பாட்டில் உள்ள ஊடகங்கள் மூலம் பரவலாக இவர்களுக்காக பிரச்சாரம் செய்யப் படுகின்றன. இன்று வடக்கு கிழக்கில் பாதிப்புக்கு உட்பட்ட மக்களுக்கும் ஏன் மனித குலத்துக்குமே பெரிய சேவை செய்வதாக தனிநபர்கள் புகழாரம் சூட்டப்படுகின்றனர். இவை அடிமட்டத்தில் சமூகக்கூறில் இது என்ன உண்மையான விளைவை ஏற்படுத்துகின்றது என்பதை பொருத்தம் இல்லாத வகையில் ஊதிப் பெருப்பித்துக்காட்டுகின்றனர்.

மேற்கு நாடுகள் அறிமுகப்படுத்திய இந்த அடக்குமுறை கருத்தியலை, இன்று ஒடுக்கும் அரசுகள் நேரடியாகவே உள்வாங்கிக் கொண்டு செயற்படுத்துகின்றன. குறிப்பாக இலங்கையில் இது மிகத் தீவிரமாகவே நடைபெறுகிறது.

தன்னார்வ நிறுவனங்கள் குறித்து புகழ் பெற்ற நூலை எழுதிய சசங்க குணத்திலக என்பவர் இன்று மகிந்த ராஜபக்சவின் ஆலோசகர். இவரின் ஆலோசனையின் பேரில் புலம் பெயர் நாடுகளில் வாழும் அரசியல் வியாபாரிகளும், முன்னை நாள் புலிகளின் ஆதரவாளர்களும் இலங்கை அரசின் தன்னார்வ நிறுவனங்களின் நிகழ்ச்சி நிரலுக்குள் உள்வாங்கப் படுகின்றனர். இவர்களுக்கு இலங்கை அரசின் பெருந்தொகைப் பணமும் சலுகைகளும் கிடைக்கும் அதே வேளை புலம் பெயர் நாடுகளிலும் பணம் திரட்டிக்கொள்கின்றனர்.

தேசம் நெட் ஆசிரியர்களில் ஒருவரும் மகிந்த அரசின் ஆசி பெற்றவருமான கொன்ஸ்டன்டைன் (Littte Aid) மற்றும் முன்னைநாள் சர்வ தேசியக் குற்றவாளி கே.பி (Nerdo) ஆகியோர் நிறுவியிருக்கும் தன்னார்வ நிறுவனங்கள் இவற்றிற்கு நல்ல உதாரணங்கள்.

தன்னார்வு நிறுவனங்களில் வேலை செய்பவர்கள் பலர் நேர்மையானவர்களாகவும், உண்மையான சமூக சேவகர்களாகவும் இருக்கலாம். ஆனால் இந்த நிறுவனங்கள் வேறு நோக்கத்திற்காகவும் வேலை செய்கின்றன என்பதை இவர்கள் உணர்வார்களா?

போரினால் பாதிக்கப்பட்ட போராளிகள் குடும்பம், பொதுமக்கள், மேலும் அனைத்து பாதிக்கப்பட்ட பகுதிகளிலுமுள்ள உண்மையான அக்கறை கொண்ட மக்கள் போன்றோர்களிலிருந்து அறிவு ஜீவிகள் கொண்ட ஒரு பெரிய கூட்டம் இவ்வாறு உருவாக்கப் படுகின்றது. இவர்கள் மூலம் இந்த நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு திட்டவட்டமான நன்மைகளை அளிக்கும் சில உண்மையான வளர்ச்சிப்பணிகளில் சில ஆக்கபூர்வமான வேலைகளில் ஈடுபடுகின்றனர் என்பதை நம்புமாறு செய்யப்படுகின்றது.

இயல்பாகவே பாதிக்கப்பட்ட மக்களின் பால் அக்கறைகொண்ட இந்த அறிவுஜீவிகளின் பிரிவுகள் எம் மக்களின் உரிமையின்பால் அக்கறை கண்டு புரட்சிகர நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடிய ஆற்றல்மிக்க சக்திகள், முன்னால் போராளிகள், பொறுப்பாளர்கள் போன்றவர்கள் எல்லோரையும் இந்தப்பிரிவினர்கள் திட்டமிட்ட முறையில் இந்த நிறுவனங்களில் உள்வாங்குகின்றனர்.

இந்த தன்னார்வு நிறுவனங்களில் வேலை செய்பவர்கள் பலர் நேர்மையானவர்களாகவும், உண்மையான சமூக சேவகர்களாகவும் இருக்கலாம். ஆனால் இந்த நிறுவனங்கள் வேறு நோக்கத்திற்காகவும் வேலை செய்கின்றன என்பதை இவர்கள் உணர்வார்களா என்பதுதான் முக்கிய கேள்வியாக உள்ளது. இந்த தன்னார்வு நிறுவனங்கள் ஆர்வம் மிக்க போராளிகள், புரட்சியாளர்கள், சமூக ஆவலர்கள் போன்றவர்களை அமைதிப் படுத்துவது மட்டுமல்லாமல், அவர்களுடைய இயல்பான சமூக உணர்வுகளையும், அடிமட்ட மக்கள் மேல் கொண்ட இயல்பான உணர்வையும் இவர்கள் சூழல் வெப்பமடைதல், பூமியை ஆபத்தில் இருந்து காப்பாற்றுதல், அடிமட்ட மக்கள் பற்றிய ஆய்வுகள், கட்டுரைகள், ஆன்மீகம், மன அமைதி என்ற குறுகிய வட்டத்திற்கான திட்டங்களை தீட்டி அவர்களை செயலிழக்க வைக்கின்றார்கள். இதற்காகவே இந்த அரசு சார்பு இல்லாத என்று சொல்கின்ற அரசு சார்பு நிறுவனங்கள் திட்டமிட்டு வேலை செய்கின்றன.

எல்லாவற்றிற்கும் மேலாக இந்த நிறுவனங்களிலிருந்து அவர்கள் ஏராளமான நிதிகளை பெறுவதால் அதன் நலன்களோடு மட்டுமே பிணைக்கப்பட்டுள்ளனர். அவர்களுடைய பணிகள் உடனடியுதவிபோலிருந்தாலும் நீண்ட காலத்துக்கு பல வழிகளில் சீர்குலைவை ஏற்படுத்தும் என்பதை பார்க்க வேண்டும். அதாவது:

1) போராட்டத்தை தவிர்ப்பதை அவர்கள் மிகவும் முக்கியமாகப் பார்க்கின்றார்கள். மருத்துவமனைகள், பாடசாலைகள், தொழில் பயிற்சி கூடங்கள், நுண்கடன் திட்டங்கள், சிறு உற்பத்தி மையங்கள் போன்றவற்றை நடத்தும் வளர்ச்சிப் பணிகளில் அதிக கவனம் செலுத்துகின்றார்கள். அதாவது அரசாங்கத்தால் வேண்டப்படும் அனைத்து வேலைகளையும் இந்த நிறுவனங்கள் செய்கின்றன.

அநீதிக்கு எதிராக மக்களை வழிநடத்தும் ஆற்றல் வாய்ந்த உள்ளூர் செயல் வீரர்களும், புலம் பெயர் நாட்டு ஆவலர்களும் இந்த திட்டங்களாலும், வளர்ச்சித் திட்டங்களாலும் ஈர்க்கப் படுகின்றனர். அதற்கு சம்பளமும் கொடுக்கப் படுகின்றது. இந்த வகையில் அவர்களது போராட்ட குணம் அழிக்கப்படுகின்றது.

அவர்களது அடிப்படையான உரிமைப் பிரச்சனையின் முயற்சி திசை திருப்பப்படுகின்றது. இந்த சிறந்த பண்பு கொண்ட மனிதர்கள் இவ்வாறு மந்தப்படுவதால் மக்கள் மத்தியில் எம்மக்களின் உரிமைக்கான போராட்டத்தின் விழிப்புணர்வை ஏற்படுத்துவது கடினமான செயலாக மாறிவிடுகின்றது. இதை இப்போது புலம் பெயர் நாடுகளில் அதிகம் பார்க்கலாம்.

2) இந்த நிறுவனங்களின் வளர்ச்சி நடவடிக்கைகள் உலகநாடுகளின் வியாபாரத்துக்கு உதவியாக உள்ளன. இவர்களது முதலீடுகளாலும், சிறு வியாபாரங்களாலும் அழிவினால் வறுமையான, நலிந்த மக்கள் மத்தியில் சிறு உற்பத்தி மற்றும் கடன் பொருளாதாரம் சிறுசிறு பகுதிகளில் அறிமுகப்படுத்தப் படுகின்றன. மேலும் இவ் நிறுவனங்கள் உலக வங்கி அல்லது அரசுடன் சேர்ந்து அவர்களின் திட்டங்களை நேரடியாக நடைமுறைப் படுத்துகின்றன.

3) இலங்கை அரசு புலம் பெயர் நாடுகளில் வாழும் மக்களைத் தனது வட்டத்திற்குள் கொண்டு வரவும், அவர்களிடமிருந்து உருவாகும் எதிர்ப்புக்களை மழுங்கடிக்கவும் தன்னார்வநிறுவனங்களைப் பயன்படுத்தி வருகின்றன. தவிரவும், புலம் பெயர் மக்கள் மத்தியில் அரசினூடாக மட்டுமே உதவிகள் வழங்க முடியும் என்ற சூழலை உருவாக்கி அரச செல்வாக்கில் இயங்கும் நிறுவனங்களை நோக்கி மக்களை உள்வாங்க முனைகின்றன.

ஆனால் இவர்களை மக்களின் உரிமையை நோக்கி போராட வைக்க முயற்சிகள் எடுக்கப் பட வேண்டும். ஆகவே இன்றைய கால கட்டத்தில் அரசு உதவியுடன் இயங்கும் அரசு சார்பில்லாத நிறுவனங்கள் பற்றி முழுமையான தேடலும் அவதானமும் எங்கள் மத்தியில் ஒரு தேவையான விடயமாகின்றது.

✓ Accountancy & Auditing
✓ Business Start up Advice
✓ Business Plans & Cash Flow Forecasts
✓ Personal tax Affairs & Self Assesment
✓ Company Tax Affairs & Company Tax Return (CT 600)
✓ Company Formation
✓ Preparing VAT, Payroll for the Sole Trader, Patrnership & Limited Companies
✓ Attending VAT & PAYE visits
✓ Tax Investigations
✓ Solicitors Accounts & Accounts Reports

TAMSONS
Accounting & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

Sivanayagam of Tamil Eelam

A wreath from a Sinhalese 'traitor'

By Brian Senewiratne

This is not an account of one of the greatest Tamils I have had the privilege of knowing – 'Aiyah' to countless Tamils, 'Siva' to me. It is not even a tribute but just 'a bunch of flowers' picked from 'my garden' and belatedly sent for Siva's funeral on 2nd November 2010, in blood-drenched Sri Lanka, where this disarmingly quiet and unassuming man chose to spend the closing years of his extraordinary life. It is belated because I was working in a remote part of Australia, away from home and my books when the news reached me by 'bush-telegraph'.

In the 79 years that I have been on this globe, I have had the good fortune to meet and work with some inspiring people – not all of them Tamils – but all of them totally dedicated to the entirely justifiable cause of the Tamil people to live with equality, dignity and safety (and now live at all), in the country of their birth.

Siva knew all of them and has described their contributions in his monumental 683 page tome, Sri Lanka: Witness to History. A Journalist's Memoirs 1930-2004. In it he also described his voluntary exit from a secure job in Colombo, to a dangerous life in Jaffna as the Editor of the Saturday Review which achieved international fame, his near- arrest by *Sri Lanka's first (but tragically not last)* dictator, J.R.Jayawardene, his midnight escape by a speed boat to India carrying just a gold bangle given to him by his wife to enable him to survive in India, his arrest and imprisonment in India chained to a bed, and then his life as an international fugitive in Europe.

As someone who has been deeply involved in the struggle of the Tamil people for the past six decades, I am more than familiar with Siva's journalistic contribution over the years. Amazingly, I had never actually met the man. This finally occurred in June 2001 when I was invited by C.J.T.Thamoderam to address his ITF (International Tamil Foundation). Rather than deal with the Tamil struggle, as I had intended to do, I was asked to speak on "The Abuse of Democracy in Sri Lanka".

This I did, and invited questions from the packed hall. In an attempt to prevent mini- speeches under the guise of a question, they had to be sent as a note to the podium. One of them read, "You do not need to answer this if you do not want to. Is it true that your cousin's daughter is about to marry a Tamil? S. Sivanayagam" (The reference was to the daughter of the then President, Chandrika Bandaranaike Kumaratunga).

> It is of interest that the Foreword for both of Siva's books have been written by Sinhalese 'traitors', " Witness to History" by the incomparable Adrian Wijemanne, the "The Pen and the Gun" by me

I read out the question aloud and said, "Yes, I will answer it if S.Sivanayagam stands up so that I can see him". With no visible response, I asked again, "If Mr Sivanayagam wants the question answered, will he stand up?" Someone in the audience spoke up, "He is standing". I asked, "Where?" "Right there, next to that pillar".

Siva, 5ft 1inch (155 cm) in his slippers, (as he informs us in his book), was, indeed, standing. Addressing him I said, "Mr Sivanayagam, I will answer that question as best I can, if after the meeting I can give you a great big hug for all that you have done for our Tamil people." Answering his question, I said that I really did not know because my family had decided to give me a miss, a lost cause.

Leaving the podium, I did what I had wanted to do for years. Having recovered from the bear-hug, in his soft, whispering voice, he asked me whether I would 'honour' him (!) by spending the day, two days later with him. Deciding to cancel all the appointments made for that day, I decided to spend the time with Siva. Would anyone have done otherwise?

Siva picked me up from Tooting station, and took me to his 'one-room-shared-toilet- shared-kitchen', one bed, one chair and a table, apologetically saying, "There is not much room, but it is OK for me". I stretched out on Siva's bed, he sat somewhere. Having discussed everything from the past to the present to the future. Then came a request from Siva, "I wondered whether I could ask a favour?" I responded, "Siva, I am so indebted to you that I will do whatever you want." It was a rash offer since I did not know the bombshell that was coming. "Would you write the Foreword to the book I have just completed 'The Pen and the Gun. Selected writings 1977-2001?" I said that I would be honoured to do so, but that I felt he should find someone more suitable.

It is of interest that the Foreword for both of Siva's books have been written by Sinhalese 'traitors', " Witness to History" by the incomparable Adrian Wijemanne, the "The Pen and the Gun" by me. It was not because he did not know enough international celebrities who would have been delighted to do so. But that was Siva.

When Siva decided to return to Colombo to spend the closing years of his life in that dangerous country (for Tamils), I telephoned him from Australia frequently, but not frequently enough, to see how he was going in that barbaric and unpredictable country. When I heard that he had a potentially fatal illness, our talks drifted from Tamil Eelam to his own survival - "Don't worry, Brian, I really am O.K." - an optimism that I, with my medical knowledge, did not share.

I told him that I would love to pay a one-day visit to Sri Lanka just to give him one last hug. With wit and humour that never left him, he said, "I am sure you will be most welcome, but I fear that your visit will only increase the number of 'disappeared' by one more. I would much rather that you continue to be alive and a pain in the neck to the Sinhalese regime, as you have been for so many years".

Siva sent me a copy of The Pen and the Gun with a note, "Brian, With the warmest regards and tons of thanks. S.Sivanayagam". This book will be left in my will to the Library of Tamil Eelam, when it is established, as it most certainly will be, the murderous Rajapaksa junta notwithstanding.

A dreadful Sinhala junta, drenched with the blood of thousands of innocent Tamils whose only crime was that they were born Tamil in the North and East, cannot be allowed to succeed. To get into bed with this murderous regime that has attempted genocide of the Tamil people, have committed extensive crimes against humanity, and violated international laws and even Sri Lanka's own Constitution, now linking hands with a similar regime in China, is not an option.

> As someone who has been deeply involved in the struggle of the Tamil people for the past six decades, I am more than familiar with Siva's journalistic contribution over the years.

To get back to Siva, what can we do to commemorate this exceptional person?

1. The expatriate Tamils should re-publish his unique and authoritative book, Sri Lanka. Witness to History, (or finance the reprinting of this book by those who are supposed to make it available). There is no book about which I have had so many inquiries as to where a copy could be obtained. This book, the finest of its kind, cannot be allowed to become a collector's item. It must be readily available in every bookstore. It must not only be published in English but must be translated into Tamil and Sinhalese, and more.

2. An annual Sivanayagam-Wijemanne-Kandasay Memorial Oration must be launched. Since this cannot be delivered in Rajapaksa's 'Democracy', or even in Jaffna, the cultural capital of the Tamils which today is a Police State, it will have to be (temporarily) delivered in London. The Oration should focus on Justice for the Tamil people and the way forward.

I am not going to conclude this with the usual "May he rest in Peace", because I know he will. His was what life is all about.

(Some sections of the original article have been left out due to lack of space.)

Who is the black sheep?

SRI LANKA GUARDIAN

United National Party parliamentarian Dr Jayalath Jayawardene has become the scapegoat for the reckless behaviour of the President Mahinda Percy Rajapakse to visit London against the advice of the Sri Lanka High Commission and the intelligence sources. Disrespecting their advice not to risk a trip to London, the foolhardy President embarked on a mission even the Emperor Napoleon would have thought inappropriate.

The President's visit coincided with the visit of Dr Jayalath Jayawardene to the EU countries. His first visit was to the UK where he was one of the keynote speakers and participated in the discussion that followed in the House of Commons.

The meeting was exclusively attended by Sri Lankans. The meeting had no interests to British parliamentarians or the media. An appropriate forum to hear the opposite views to the Sri Lanka governments praises and almost all of those attending were from the majority Sinhala community.

Who is the female writer from London giving false information about Dr JJ to the Colombo media

At the time of anti-President demonstrations were held, Dr Jayalath Jayawardene was in Italy.

The government wanted scapegoats and Dr Jayalath Jayawardene was the easy pray. His outspoken stand for justice and fair-play put him in collision course with the government and his maverick politicians were hell bent on revenge taking on him.

This is not the first time Dr Jayalath Jayawardene went through the life threatening experience. During Chandrika Banaranayake's presidency too, he went through the harrowing experience over his outspoken stand.

On this occasion, the government and its mavericks used all available resources against him. In addition to threat of physical violence in the parliament, they used a Tamil source to point that Dr Jayalath Jayawardene is anti-patriotic and was scandalised in the media.

Black Sheep

The Sri Lanka Guardian in its report 'Who is the female writer from London giving false information about Dr JJ to the Colombo media (link) exposed the scandal involving female the Tamil writer without naming her for security reasons.

But the Sunday Observer published (5/12) in Sri Lanka revealed the name of the writer in its news titled 'Anti-Lanka role exposed' and stated that Mrs.Subramaniam castigated the parliamentarian at the House of Commons meeting. Mrs Subramaniam introduced in the write up as 'a well known member of the Tamil diaspora in London....actively organizing humanitarian aid for internally displaced Tamils during the height of the conflict, particularly during the final stages of the humanitarian operation.'

The Observer also quoted her saying: 'I told him (Dr Jayalath Jayawardene) I was there during the last stages, when the people escaped from the LTTE and witnessed how Sinhalese and Muslim communities got together to help the Tamils, so don't utter nonsense.'

Who is this Mrs Subramaniam. She is the well-known (within certain circles) Mrs Rajeswary Balasubramaniam and also known as Mrs Rajes Bala, who always propagate herself as the writer and a women's rights campaigner. Since 2008 she has established a cosy relationship with the Defence Establishment of Sri Lanka.

She has access to the President and many ministers and at the taps of the telephone dialling will access the Defence Secretary Gotabaya Ralapakse, Basil Rajapakse and the Army Intelligence head Brigadier Hendawitharane.

She is a regular visitor to the Sri Lanka High Commission in London and is managed by the Deputy High Commissioner and former intelligence officer P M Hamsa. She attends most of the campaign meetings that Sri Lanka High Commission instruct her to attend.

Wikileaks Report

United States obviously irked by rivals to its global arms oligopoly has alleged (in a cable made public by Wikileak) that Sri Lanka among other states has purchased arms from North Korea- a 'rogue state' according US

http://www.nytimes.com

Already US - Ambassador, Patricia Butenis reported Sri Lanka president responsible for "alleged war crimes"

Sri Lankan President Mahinda Rajapaksa and his family are responsible for alleged war crimes against the Tamil, according to a cable sent by US ambassador to Sri Lanka Patricia Butenis.

Ambassador Butenis noted:

"There are no examples we know of a regime undertaking wholesale investigations of its own troops or senior officials for war crimes while that regime or government remained in power.

"In Sri Lanka this is further complicated by the fact that responsibility for many of the alleged crimes rests with the country's senior civilian and military leadership, including President Rajapaksa and his brothers and opposition candidate General Fonseka."

The Government of Sri Lanka (GSL) is holding thousands of mid- and lower-level ex-LTTE combatants for future rehabilitation and/or criminal prosecution. It is unclear whether any such prosecutions will meet international standards."



KIDS பேப்பர்

Theepavali

Diwali is a festival of lights. Hindus all over the world celebrate Diwali in the month of October. They celebrate the death of a wicked king called Ravana. They light candles and lamps at their houses. They go to the temple and visit their relatives with sweets.

They wear new cloths on Diwali day. On diwali night people lit fireworks of different colours. They make special foods for their families and friends.

They sing songs of Rama, Sita and Hanuman and thank for killing Ravana. In India they make some patterns called Rangoli. Diwali is celebrated for 5 days. Rangoli is made from coloured rice,

- Ayshvaan Thevarajah 8 years
London Kenton

Ant Jokes

What does a cat have that no other animal has?
Kittens.

Where do ants go for their holidays?
Frants!

What do you call an ant who skips school?
A truant!

What do you get if you cross some ants with some tics?
All sorts of antics!

What do you call a greedy ant?
An anteater!

Why did the elephant put his trunk across the path?
To trip up the ants!

What is even bigger than an elephant?
A giant!

What do you call an ant in space?
Cosmonants & Astronants!

Colouring

Why not enter our colouring competition? Simply colour me in and send it to *ORU PAPER* and you could be the lucky winner of a water colouring kit.

The winner will be published in the next issue.

Last issue winner is Kayal Thevaruban (5 years)

Help Old Blue find his way through the maze.









By: Abiramy Varathakumar
8 years old. Eastham

Word Search

X	T	S	E	E	L	A	I	U	K
S	A	R	D	A	V	A	N	I	S
A	O	P	P	A	V	A	D	A	C
L	X	S	T	V	U	K	L	M	R
V	D	A	V	E	F	T	N	G	U
A	F	D	U	T	N	B	R	A	I
I	N	D	W	T	S	O	H	I	Q
Y	Z	A	A	I	I	B	I	L	M
A	D	I	P	E	O	E	N	I	L
M	A	P	O	D	E	L	J	E	U

Hidden Words:

Subject: Tamil Dresses

VETTI, SALVAI, SADDAI, DAVANI, PAVADA, SEELAI

Submitted by:

By: Tamara Arul (Age 9) (Beckenham)

	தொலைபேசி	கைத்தொலைபேசி
இந்தியா	1p	1p
ஸ்ரீலங்கா	5p	5p

	தொலைபேசி	கைத்தொலைபேசி
அவுஸ்ரேலியா	1/2p	6.5p
கனடா	1/2p	1/2p
மலேசியா	1p	2p
சிங்கப்பூர்	1/2p	1/2p
ஐ.அமெரிக்கா	1/2p	1/2p
ஐரோப்பா	1p	10p

உத்தரவாத நிமிடங்கள் 100%

- இத்துடன் மிகக் குறைந்த கட்டணத்தில் 200க்கு மேற்பட்ட நாடுகளுக்கு தொடர்புகொள்ளலாம்
- ஐரோப்பா, கனடா மற்றும் அமெரிக்கா நகரங்களிலிருந்தும் அழைப்புக்களை மேற்கொள்ளலாம்
- ஒன்றிற்கு மேற்பட்ட பல இணைப்புக்களை ஒரே தடவையில் மேற்கொள்ள முடியும்

CONFERENCE CALL

talk Lyca

Top-up Voucher £5 talk Lyca

Top-up Voucher £10 talk Lyca

Top-up Voucher £20 talk Lyca

✓ No Connection Charge ✓ No Maintenance Charge ✓ No Hidden Charges ✓ No Expiry Date

visit www.lycatalk.com

CALL NOW ON
0800 652 7566
0207 132 9999
Or
visit www.lycatalk.com

TOP-UP ONLINE OR WHERE YOU SEE THIS SIGN (IN SELECTED STORES ONLY)

Bridewell Direct Ltd. Simply Drinks Budgens NFRN Aleef Simply Food & Drinks Costcutter Nisa Today's LONDIS BOOKER

Niru BRAND ®

Now even thicker & tastier

இன்றே வாங்குங்கள்
நிருவின்
இயற்கைச்
சுவையுடைய
தேங்காய்ப் பால்!!

இப்போது
உங்கள் அபிமான தமிழ்க்கடைகளில் கிடைக்கிறது...

BUY 1 GET 1 FREE

ஒற்றுமை பெருக்கி உயர்வினைக் காண்போம்

பாகம் 84

மற்றுமொரு மாவீரர் நாளும் வெற்றிகரமாக நடந்தேறியிருக்கிறது. பழ நெடுமாறன் ஐயா, வை கோ, கவிஞர் காசி யானந்தன், டி ராஜேந்தர் போன்ற பலரும் தலைவர் வருவார், வந்து இடைநின்று போயிருக்கும் எமது விடுதலைப்போர் தொடர வழியமைப்பார், தோன்றும் தமிழீழம். என்ற நம்பிக்கையைத் தந்திருக்கிறார்கள். அவர்கள் எத்தகைய நம்பிக்கைகளைக் கொண்டிருந்தாலும் அமைப்பு ரீதியான கட்டுக்கோப்பும் அதனை வழிநடத்துவதற்கேற்ற தலைமைத்துவமும் இல்லாமல் உலகின் மூலை முடுக்கெங்கும் இத்தகைய நிகழ்வுகள் பரவலாக நடைபெற்றிருக்க முடியாதாகையால் தமிழனின் விடுதலைப் போராட்டம் ஓய்ந்து விடவில்லை அதனை முன்னின்று நடத்துவதற்குரிய தலைமைத்துவம் மறைந்துவிடவுமில்லை என்பது கண்கூடாகத் தெளிவாகியிருக்கிறது.

முள்ளி வாய்க்காலில் கடைசி நிமிடங்களில் தங்களது உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக சரணடைந்து ஒருவாறாகத் தப்பிப் பிழைத்த சிலரை அண்மையில் சந்திக்க நேரிட்டது. அவர்களிடமும் வழமைபோலத் தேசியத் தலைமை பற்றி விசாரித்தபோது அவர்களுக்கும் தலைமையின் இருப்பில் முழு நம்பிக்கை இருப்பது தெரிய வந்தது. எது எப்படியிருந்த போதிலும் இன்றைய பிரச்சினை அதுவல்ல என்பதுதான் உண்மை நிலை.

மறைந்துவிட்ட தலைமைத்துவத்திற்கான தக்கதோர் பதிலீடு தமிழர்களின் ஒற்றுமையைக் கட்டிக்காக் ஏற்படுத்தப்பட்டு, கிளை பிரிந்து நிற்கும் பல்வேறு தரப்புகளும் ஓரணியின் கீழ் திரட்டப்பட்டு, நாம் நெடுங்காலமாகக் கட்டிக்காத்த நமது தாயகக் கோட்பாடும் தமிழ் ஈழத் தேசியவுணர்வும் நம்மை விட்டுத்தூரவிலகிப்போய்விடாமல் காப்பாற்றப்பட வேண்டும் என்பதுதான் இன்றைய தேவையாக இருக்கிறது.

போர்க்குற்றம் புரிந்ததாகக் கருதப்படும் இலங்கை ஜனாதிபதி இங்கிலாந்து வருகிறார். வழமைபோலத் தமிழர்களின் எதிர்ப்பலைகள் எழுந்து ஓய்ந்துவிடும். அவ்வளவுதான். எமது ஒற்றுமைப்பட்ட எதிர்ப்புக் குரல்களுக்கு பெரிதாக எந்தவொரு பலனையும் எதிர்பார்க்க முடியாது. இலங்கையரசு தனது ராஜதந்திர நகர்வுகளால் தமிழர்களுக்கு எதிராகத் தான் செய்த செய்து கொண்டிருக்கும் அநீதிகளை எப்படியாவது மூடி மறைத்துவிடும். அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசாங்கத்திற்கு இதற்கான போதிய ராஜரீக பலமும் சர்வதேச ஆதரவும் நிறையவுண்டு. ஆனால் முழுவளர்ச்சியடையாத சற்று வளர்ந்து கொண்டு வந்த போதே முனை கிள்ளியெறியப்பட்ட எமது தமிழ்த் தேசியத்திற்கு இந்த உலகத்தில் தனக்கெதிராக இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நியாயம் தேட உரியபலமில்லை. ஆதரவுமில்லை.

அதனால் ஒருமித்த குரலில் முன்னெடுக்கப்படும் அரசியல் ராஜதந்திர போர் உபாயங்களால்தான் எமது இருப்பைத் தக்க வைத்துக் கொள்ளவும் சர்வதேசத்தில் தமிழீழ தேசியத்தை அடையாளப்படுத்தவும் முடியும். மாவீரர் நினைவுக் காலங்கள் முள்ளி வாய்க்கால் வீழ்ச்சிக்குப் பின்னர் கிளைபிரிந்து நிற்கும் பல்வேறு தரப்பினரையும் ஒருகுடையின் கீழ் ஒன்றுபடுத்தி வலிவு மிக்க தமிழீழ தேசியத் தலைமையை ஏற்படுத்த உதவ வேண்டும்.

விடுதலைக்காகத் தம் உயிர்களைத் தியாகஞ் செய்த எமது உன்னதமிக்க மாவீரர்களின் இலட்சியம் காற்றோடு கலந்துவிடாமல் மீண்டும் தமிழர் ஒற்றுமை நிறுவன ரீதியான வலுப்பெறவேண்டும். தோல்வியே எமது வீறுபெற்ற புத்துயிர்ப்புக்கு அடித்தளமாக வேண்டும். இதுவே எம்போன்ற சாதாரண தமிழர்களின் இன்றைய வேணவாவாக இருக்கிறது. அதனால் வரப்போகும் இப்புத்தாண்டில்:

வழமை போல ஒற்றுமைப் பட்ட தமிழ்த் தேசியம் மீண்டும் எழுச்சிபெறப் பாடுபடுவதும். எமது தமிழீழத் தாயகக் கோட்பாடு இலங்கையரசினால் இலகுவில் அழிக்கப்பட விடாமல் வடக்கிலும் கிழக்கிலும் ஏற்படுத்தப்படும் சிங்களக் குடியேற்றங்களுக்கெதிராகச் சர்வதேச ரீதியில் ஒன்றுபட்டுப் போராடுவதுமே மிக அவசியமானதும் அவசரமானதுவுமாகும்.

அலசுவாரம்

அலசுபவர் : மட்டைக்கிளப்பான்

நாடு கடந்த தமிழீழ அரசும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பும், தமிழர் விடுதலைக் கூட்டணியும் மற்றும் பிற தமிழர் நல்ன் பேணும் அமைப்புகளும் தத்தமது கொள்கைகளுக்கும் நோக்கங்களுக்குமேற்ப செயற்பட்டாலும், எமது இறுதி இலட்சியமான தமிழீழத்தாயகக் கோட்பாட்டையும் எமது பிரதேசத்தை நாமே ஆளும் சுயாதிபத்திய அரசையும் முன்னிறுத்தி, சர்வதேச ஆதரவை அந்த இலட்சியத்திற்காக வென்றெடுப்பதை நோக்கமாகக் கொண்டு செயற்படுவதும், அதற்காக மேற்குறித்த யாதாயினுமோரு அமைப்பின் தலைமையின் கீழ் அனைவரும் அணிதிரள்வதும் எல்லோரையும் மகிழ்ச்சிப் படுத்தும்.

போர்மூர்க்கம் மிக்க சமுதாயமாக இதுவரை காலமும் இருந்த ஈழத்தமிழரினம் மூர்க்க வழிகளைக் கைவிட்டாலும் தமது போராட்ட முனைப்பைக் கைவிடாமலிருப்பது மிக முக்கியமானதாயிருக்கிறது.

பொருளாதாரம் தொடங்கி அரசியல் வரையான உலகமயமாக்கலில் வன்முறைகள் வெறுக்கப்படுவனவாயிருந்தாலும் நியாயமான உரிமைகளுக்காக சர்வதேச அரங்கைத் தமது களாமாக வைத்து ஜனநாயக வழிகளில் போராடுவது எந்தத் தேசிய இனத்திற்கும் மறுக்கப்பட்ட உரிமைகளல்ல.

எமது தாயகத்தில் எந்தவிதமான ஜனநாயகப் போராட்டங்களையும் நடத்தித் தமது ஆதங்கங்களைக் காட்டமுடியாத பரிதாப நிலையில் ஈழத்தமிழர்கள் இருக்கிறார்கள். ஆட்சியில் பங்குகொள்ளும் மக்களாக இல்லாமல் ஆளப்படுவோராக: இம்மென்றால் சிறைவாசம் ஏனென்றால் சித்திரவதை, படுகொலையென்ற ஆதரவற்ற சூழ்நிலையில் வாழ்கிறார்கள். அந்த அவல நிலையில் வாழும் தாயகத்து உறவுகளை வீண் வம்பில் மாட்டி வைக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியது புலம்பெயர்ந்த மக்களது கடமையாகிறது. அதேவேளை ஓர் எழுச்சிபெற்று ஒற்றுமைப்பட்ட சக்தியாக எமது தாயக மக்களுக்கு எது நேர்ந்தாலும் அதனைச் சர்வதேசத்திற்குச் சுட்டிக்காட்டவும் அவர்களுக்கிருக்கும் ஆதரவுக்குரலை வெளிப்படுத்தவும் புலம்பெயர்ந்த தமிழர்கள் எப்போதும் தயாராகவேயுள்ளார்கள். இதனை இந்தியா உட்பட இலங்கையரசும் நன்கறியும். எமது புலம்பெயர்ந்த அமைப்புக்கள் சிதறிப் போகும்போது அதனாற் பாதிக்கப்படப் போவது ஈழத்தமிழர்களேயன்றி வேறு யாருமல்ல. புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு அவர்கள் வாழும் ஜனநாயகச் சூழலில் எவ்வித சிரமங்களோ இடர்ப்பாடுகளோ இல்லாததால் இந்த ஒற்றுமையின்மை எதுவித தாக்கத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை.

எந்தவொரு அரசியல், பொருளாதார அல்லது சமூக ரீதியான அமைப்பும் உரிய பயனை விளைவிக்கப் போவது தாயகத்தில்த்தான். இதனைக் கருத்திற்கொண்டு எமது தாயக உறவுகளின் கரத்தைப் பலப்படுத்த ஏதுவான செயற்பாடுகளின் மூலம் அங்கு அல்லல்படும் மக்களுக்கு ஒரு சுபீட்சமான, பாதுகாப்பான, போலீஸ் இராணுவ நெருக்குவாரங்களில்லாத வாழ்வைப் பெற்றுக்கொடுக்க அனைவரும் முயற்சிப்பார்களாக. உருவாக்கப்படும் மாற்றீடு அல்லது தேசியத் தலைமை இதனைக் கருத்திற்கொண்டு செயற்படட்டும்.

நடைபெற்ற மாவீரர் தினத்தில் ஒன்றுகூடிய மக்களின் ஒற்றுமை மனோபாவத்தை மிகவும் சாதகமான வழிகளில் பயன்படுத்தி ஈழத்தில் வாடும் எமது மக்களின் இன்றைய ஜீவாதாரப் பிரச்சனைகளான காணி அபகரிப்பு, இராணுவ நெருக்குவாரம், பலாத்காரச் சிங்களக் குடியேற்றம் போன்றவற்றை முறியடிப்பதற்காகத் திசை திருப்புவதன் மூலம் மிக அதிகமான பலனைப் பெறமுடியும்.

உங்கள் உடனடித் தேவைக்கு கையில் பணம் இல்லை என்ற கவலையா?

நாங்கள் இருக்கும் போது நீங்கள் இப்படி தலையைப் பிய்க்க வேண்டிய அவசியமில்லை.

உங்களுக்கு கிடைக்கும்

- Benefit Cheques
- Inland Revenue
- Insurance Refund
- Wages
- Commissions
- Lottery Winning Cheques
- A/C payee

இவற்றை 4% - 6% வரையான கட்டணத்துடன் உடனே பணமாக்கிக் கொள்ள அழையுங்கள்.

020 7243 1417

முகவர்கள் தேவை

பிரித்தானியாவின் எந்த மூலையில் நீங்கள் வர்த்தக நிறுவனம் வைத்திருந்தாலும் நீங்களும் முகவர் ஆகலாம்.

உடன் தொடர்பு கொள்ளவும்

020 7243 1417

Cheque Line

31, Queens Way, London, W2 4QJ.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் - Heathrow விமான நிலையம்

எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் - Dorchester hotel

போர்க் குற்றவாளி மகிந்த ராஜபக்சேவின் இங்கிலாந்து வருகைக்கு எதிர்ப்புத் தெரிவுக்குமுகமாக அவர் வந்திறங்கிய ஹீத்ரோ விமான நிலையம், அவர் தங்கியிருந்த விடுதி மற்றும் இலங்கைத் தூதுவராலயம் ஆகிய இடங்களில் புலம் பெயர் தமிழர்களால் எதிர்ப்புப் போராட்டங்கள் நடாத்தப்பட்டன.

தேசத்தின் குரல்!

பாலா அண்ணன்
நாங்கள் அப்படித்தான்
அழைத்தோம் தனித்து ஒரு
மனிதனின் குறியீட்டுப் பெயராக
அது அமையவில்லை.

தமிழீழ தேசியத்தின்
மதியகமாக, அரசியல் அறிவின்
தேக்கமான உற்ற சமயத்தில்
நல் ஆசானாக
எல்லாமுமாகப் பார்த்தோம்.

எங்களுக்கே எங்களுக்காக
அருளப்பட்ட நீ
வழி நெடுக பயணப்படும் போது
கதைத் துணைக்கு வாய்ப்பர்
மத்தியில் செயல்துணைக்கு
வாய்த்தவர் நீ
இடையிட்டு நிறுத்திக்
கொண்டது–உன் வாழ்வியக்கம்
மூச்சும், பெச்சில்லாமற் போயிற்று
ஆழ்ந்த மௌனம் மொழி மறந்து
நீடித்திருக்கிறது.

உன்னிடத்தை உன்னால்
மாத்திரமே நிரப்ப முடியும்.
தமிழீழ தேசியத்தை
ஆழ சுவாசித்த உன்னால் அதை
ஏற்றுக்கொள்ள முடியாதெனினும்
இந்த நிசப்தத்திலும்
ஒரு சிறு ஒலியாக ஆழ்ந்த
இருளிலும் ஒளியாக
மீண்டும் வழிநெடுக
விடிவது நோக்கி செல்ல
வேண்டியுள்ளது.

ஒடுக்கப்பட்ட எங்கள் இனத்திற்காக
ஓங்கி ஒலித்த குரல்!
சண்டை போதும் சமாதானம்
என்றே உலக அரங்கில்
ஒலித்த குரல்!
தமிழ் ஈழமே தீர்வென்றாகும்
என்றே ஒலித்த குரல்..

வாழும் காலம் வரையில்
எமக்காய் ஒலித்த எங்கள்
தேசத்தின் குரல்!
காலம் காலமாய் நசுக்கப்பட்டோம்
ஈழத்தமிழர் நாங்கள்!
அடிமைகள் என்றே சொல்லி
ஒடுக்கப்பட்ட இனமே ஈழமக்கள்!

விடியல் தேடிப்புறப்பட்ட எங்கள்
வீரக் குலத்தின் கொழுந்து அவன்
விதித்த பாதையில் எழுந்து நடந்த
எங்கள்தேசத்தின் குரல்!

உடமை அழிந்து உறவுகள் அழிந்து
எங்கள் உணர்விலும்
தீ ஏற்றி விடுதலைப்பாஷ்தயே
சரியென உணர வைத்த
சிங்கள வெறியரின் நிறத்தினை
உரித்துக்காட்டிய
எங்கள் தேசத்தின் குரல்!

எங்கள் பயணத்தில் உற்ற
வழித்துணையாய் நீர் வருவீர்.
உங்கள் உணர்வது
சுமந்து செல்வோர் விடுதலைக்காக
உழைத்தவர்களுக்கு மரணம் ஒரு
முற்றுப்புள்ளியல்ல.

ஒரு தொடக்கத்தின் ஆரம்பப்புள்ளி
இதிலிருந்து வியாபித்து
நீக்கமற நிறைந்து புதியதோர்
உணர்வாய் ஆரம்பம் எடுக்கிறது.
பாலா அண்ணை ஒரு
குறியீட்டின் ஆரம்பம்.

ஆண்டுகள் எத்தனை ஆனால்
என்ன காற்றும் ஓய்ந்து போகுமா?
அலைகள் இல்லாக் கடலும்
இங்கே இருக்கக் கூடுமா?
மானக்குரலாய் ஒலித்த குரல்
எங்கள் நெஞ்சில் வாழுமே!
மறத்தமிழன் ஆளும் காலம்
விரைந்து வந்து கூடுமே!

–அ.காண்டீபன்.
(நிகழ்காலம் இணையம்)

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

seven | zero
graphic designers
020 7043 4319
45B Crusoe Road | Mitcham | Surrey CR4 3LJ

creative artwork from concept to design

அரங்கேறிய கலை நிகழ்ச்சிகள்

இலண்டனில் 30 வருடங்களுக்கு முன்பு இந்து சமயத்தை வளர்க்கத் தோன்றிய சைவ முன்னேற்றச் சங்கம் இன்று பல பணிகளில் ஈடுபட்டு செயலாற்றுகிறது. படித்த கலையில் தேர்ச்சி பெற்று அரங்கேற்றம் செய்த மாணவர்களை மீண்டும் மேடை எற்றி அவர்களின் திறமையை வெளிக்காட்டுவதற்கு ஒரு வாய்ப்பளிக்கும் நிகழ்வினை கடந்த ஆறு அண்டுகளாக வெற்றிகரமாக நடாத்தி வருவது ஒரு பாராட்டுக்குரிய செயல்.

நடனம், வாய்ப்பாட்டு, வீணை, மிருதங்கம், வயலினிசை என்று பல்வேறு கலைகளை ஒரே மேடையில் இளம் கலைஞர்கள் நடத்திக் காட்டும்போது பார்ப்பதற்கும் கேட்பதற்கும் அற்புதமாக இருக்கும். அத்துடன் லண்டனில் இக்கலைகளின் வளர்ச்சிக்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

இவ்வாண்டு நிகழ்வு நவம்பர் மாதம் 11ம் திகதி சனிக்கிழமை மாலை Barking ல் உள்ள Eastbery Comprensive பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. அனுசா சஜீவின் மாணவிகளான அனுஷியா, அஜித்தா சகோதரிகள் சிறந்த முகபாவம் அபிநயங்களுடன் கூடிய நடன நிகழ்ச்சி விழாவின் முதல் நிகழ்வாக அமைந்தது. அடுத்து ஞானவரதனின் மாணவன் தனஞ்செயன் குகபாலன் புல்லாங்குழல் இசைத்து ரசிகர்கள் அனைவரினதும் உள்ளங்களை உண்மையிலேயே ஈர்த்தார்.

சபையில் அமர்ந்திருந்த அத்தனை பேரும் வியக்கும் வண்ணம் பாடலிசைத்தான் பதின்மூன்று வயதுச் சிறுவன் ஆதரன் செவ்வேள். அனுபவம் மிக்க சங்கீத வித்துவான் போல் அவர் தாளமிட்டு பாடிய விதம், அங்க அசைவுகள், பக்கவாத்தியக் காரரைப் பார்த்து காட்டிய புன்னகை ஆகிய யாவும் அற்புதம். பின் வயலினை எடுத்தார். அவர் வாசித்த கீர்தனைகளின் பின் குறுக்குச் சிறுத்தவளே என்ற சினிமாப் ப்ாடல் சபையோரின் பலத்த கரகோசத்தைப் பெற்றது.

இவற்றைத் தொடர்ந்து மாலினி தனபாலசிங்கத்தின் மாணவி அபிராமி விணையை மீட்டினார். இசைமேதை குற்றாலம் நாகராஜனின் மாணவி சகானா சிவராசா தன் குடும்ப அங்கத்தவர்களின் பக்கவாத்திய இசையுடன் வாய்பாட்டிசைத்தார். குருவின் சிறப்பை இவரது கச்சேரி எடுத்தக் காட்டியது.

இவ்வாறு புதிய இளம் கலைஞர்கள் இலண்டனில் தோன்றி வளர்வது மிக ஆரோக்கியமான போக்கென்றே குறிப்பிடலாம்.

பாரதி கண்ட கனவான தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவுவது கண்டு எம் உள்ளம் எல்லாம் பூரிக்கின்றது.

-முத்து

இறந்து போயிருந்தேன்

நான் இறந்து போயிருந்தேன்
சுற்றி அழும் கூட்டம் ஏதுமற்று
தனியாக வழிதவறிய மலை உச்சியின் நேர்
கீழே என் உடல் ..

இன்னும் சற்று நேரத்தில்
இறந்து போகும் என் செல்பேசியும்
தொடர்ந்த அழைப்புகளுக்கு
பதிவு செய்யப்பட்ட பதில்களை கேட்டு
வெறுத்துப்போன மனைவி
சபித்துக்கொண்டே அடுப்பை அணைப்பாள்.

நாளையோ அதற்கடுத்த நாளோ
என்னை தேடும் உத்திகள்
மேற்கொள்ளப்படும் – அதுவரை
என்னை நேசித்தவர்களின்
நம்பிக்கைகளில்
நான் உயிருடன்தான் இருப்பேன்..

–காலம்

மானம் காத்த தமிழர்

ஒக்ஸ்போர்ட் பல்கலையில்
ஒருமுறை உரைத்திட
பரிவாரம் படைகளோடு
இலண்டன் வந்தார்
இலங்கை நாசி.

கிழக்கை பொசுக்கி
கிராமங்களை சுருக்கி
எண்பதாயிரம் பெண்களை
இளமையில் விதவையாக்கி
முடித்து வைத்த மகிந்தராசா.

இருநாட்டு போர்போல
இறக்கினான் இராணுவத்தை
வளமான வன்னிக்குள்
எரிவாயு குண்டுகளை
எறிகணையால் செலுத்தி
செத்துப்போ செத்துப்போவென்று
வகைதொகையாய்
கொன்றுவிட்டு.

பச்சைக் குழந்தையையும்
பாலியலில் வதைத்தெடுத்து
சேர்த்து வைத்த
சொத்துக்களையும்
புறித்தெடுத்து பதுக்கிவிட்டு
மகாராஜா செருக்கோடு
வந்திறங்க இலண்டனில்.

வெந்த புண்ணில் வேலெறிய
விடுவாரா நம் தமிழர்
கொட்டும் பனியிலும்
கூடி விட்டார் குரல் கொடுக்க.



நினைத்ததை முடிக்காமல்
நாடு கடத்தி
அவமான சின்னமாய்
அவன் நெஞ்சை குடைந்தெடுக்க
இடுப்பில் சேலை இல்லாத
நினைப்போடு
போய்ச் சேர்ந்தான்
போல்லாத கொடும்பாவி.

–வ.கணேஷ்



இலங்கையில் இருந்து கோட்டாவும் இலண்டனில் இருந்து மகிந்தனும்

கோட்டாவின் கைத்தொலைபேசியிலிருந்து பாட்டு ஒலிக்கிறது.

சுறாங்கனி சுறாங்கனி சுறாங்கனிக்கே மாலுக்கெனவா

மாலு மாலு மாலு சுறாங்கனிக்கே மாலுக்கென வா?

அரைத்தூக்கத்தோடு தொலைபேசியை எடுத்தார் கோட்டா, அதில் அவரது ஐயே.

கோட்டா: Hello ஐயே,

மகிந்தா: மல்லி, பொடி மல்லி நான்தான் ஐயே

கோட்டா: ஐயே சொகமாய் போயி இறங்கீட்டீங்களா?

மகிந்தா: வர்ர வரைக்கும் சொகம்தான்டா மல்லி, ஆனா?.

கோட்டா: என்னய்யா பயத்துல பறையுற மாதிரி இருக்கி?.

மகிந்தா: ஆமாண்டா மல்லி பறத்தமிழன் வைச்சுட்டாண்டா ஆப்பு

கோட்டா: ஐயே ஆப்புண்ணா?

மகிந்தா: அது அடியில சொருகிறது.

கோட்டா: அட அது கருணாநிதி அடிக்கடி தெமிழனுக்கு வைக்கிறது.

மகிந்தா: மல்லி ஏர்போட்டில வந்து கூடிட்டாண்டா தெமிழன்

கோட்டா: அவன் கிடக்கிறான் அடிமை

மகிந்தா: லூசு மாதிரி பறையுற, அதெல்லாம் நம்ம நாட்டில, இது லண்டண்டா மல்லி, அவன் கத்துற கத்து காது பொளக்குதடா.

கோட்டா: ஐயே, அப்ப நீ ஏர்போட்டுக்கு வெளியில போயிட்டியா?

மகிந்தா: இல்லடா மல்லி, தெமிழன் வெளியில நிக்கிறாண்டா பட்டாளமாய். நான் எப்படிடா? அவன் கத்துறது உள்ள பலமா கேக்கது.

கோட்டா: என்னா சொல்லி கத்திறான் தமிழன்?

மகிந்தா: அரைகுறையா கேக்குது. அரக்கன்னும் கேக்குது. அப்புறம் கொலை, கொள்ளை, கற்பளிப்பு, காதறுப்பு என்னு ஏதொவெல்லாம் கேக்குது.

கோட்டா: நான் முன்னாடியே பறைஞ்சனான், தெமிழன் ஏதாவது வில்லங்கம் செய்வான், அதுவும் லண்டன், பாத்து செய்யன்னு நீதான் ஐயே கேக்கலியே.

மகிந்தா: எல்லாம் இந்த ஒல்லி பீரிசாலே வந்தது. மிஞ்சி மிஞ்சி போனா ரெண்டு போட்டோ இன்டர்நெற்லே போடுவான் தெமிழன். அதெல்லாம் பொய்யின்னு அடிச்சு சொல்லலாம்.

கோட்டா: ஐயே அப்படியே திருச்சு வந்திடய்யே?.

மகிந்தா: இல்லீடா மல்லி, பொலிஸ்காரன் சொல்றான் பின்பக்கமாய் ஓடுடுன்னு?

கோட்டா: வெள்ளைப் பயலும் ஏதோ சேந்துதான் விளையார்றான்.

மகிந்தா: போன்லே புழுகினான் அந்த நரி (லியம் பொக்ஸ்) நானிருக்கேன் எல்லாத்துக்கும் நம்பி வான்னான். இப்ப அவனுக்கு போன் போட்டா அவனும் சொல்லாது பின்னாடி டோறால ஓடி வான்றான்.

கோட்டா: ஐயே தலை சுத்துது. அவன் ஓசியிலே வந்தான். ஓசியிலே துண்டான். ஓசியிலே குடிச்சான். நான் ஒரு குட்டி போதுமண்ணேன். நீ ரெண்டு குட்டி குடுண்ணே. இப்ப அவனும் வைச்சிட்டான் ஐயே ஆப்பு. ஐயே எதுக்கும் வேட்டியை மாத்து தெமிழன் உருவிடுவான், அப்புறம் அம்மணமா?..

மகிந்தா: சீ, போ, உள்ளாடை Tights போட்டிருக்கேன். வேட்டியை உருவினாலும் மானம் மல்லாக்கா உள்ளாடித்தாண்டா மல்லி இருக்கும்.

கோட்டா: ஐயே பின்னாடி கதவால பாஞ்சா மானம் போயிடும் எதுக்கும் நீ ஒண்ணு பண்ணு, ஒல்லி பீரிசையும் மத்தாக்களையும் முன்னாடி அனுப்பி நீ பின்னாடி போ ஐயே. தெமிழன் உருவினா நீ உள்ளாடி ஓடிடு.

மகிந்தா: மல்லி அப்படியும் கேட்டேண்டா. இந்த போலிஸ் விட மாட்டேன்கிறான்.

கோட்டா: ஐயே போலிஸ்கிட்டே கேட்டுப்பார் ஏர்போட்டிலே எந்த தெமிழனும் இல்லாம கலைச்சுடன்னு. ஏன்னா பின்னாடி ஓடினா தெமிழனுக்கு தெம்பு வந்திடும். அதை விட Oxfordலே பேசாம வந்தே நம்ம மேலே பயமிருக்கிறவன் கூட நம்ம முன்னாடியே சிரிப்பான். அப்புறம் நாறும்.

மகிந்தா: கேட்டேண்டா மல்லி அந்த போலிஸ்காரன் கிட்ட கெஞ்சியும் கேட்டேண்டா.

கோட்டா: என்னா சொல்றான் அந்த போலிஸ்?

மகிந்தா: தெமிழன் ஆவேசத்தோட கூட்டமாய் நிக்கிறானாம். மீறி நீ வெளியில போனா என்ன பிச்சு எடுத்துடுவானானம் தெமிழன்.

கொஞ்சம் பொறு மல்லி வெளியால நோக்குவம். மகே அம்மே பறத் தெமிழன் இங்கேயும் வந்துட்டாண்டா. மல்லி கட் பண்றா போனை

கோட்டா: 'கிழிச்சான் தெமிழன் ' 'கிழிச்சான் போலிஸ்' ஐயே நீ லங்காவோட மன்னன் ஐயே நீ மன்னன். இங்கென்னா சுட்டு பொசுக்கியிருப்பான் எண்ட போலிஸ். என்ன பண்றது வாற எரிச்சல்லே?.. அததான் ஐயே ஓடர் போட்டேன் சண்டையோட சண்டையா சந்திக்குற தெமிழனை எல்லாம் சுட்டு கொண்ணுடுன்னு.

மகிந்தா: இல்லிடா மல்லி நாம கொஞ்சம் கூடவாத்தான் தெமிழனை கொண்ணுட்டோம். அதாண்டா இன்னிக்?கு தெமிழன் கொதிக்கிறான். இல்லாட்டா அவன் மறக்கிற தெமிழன்ாச்சே.

கோட்டா: என்ன பறையுறே ஐயே புத்தர் கூட தெமிழனை தரையில வெச்சுத்தான் தள்ளிவிட்டாரு. ஆனா நாம தெமிழனை நம்ம மண்ணிலே பசளையாக்கியிருக்கோம்.

மகிந்தா: மனசுல நினைக்குறாரு மகிந்தர் ஆமா ஐம்பதாயிரம் அறுபதாயிரம்ன்னு கொண்ணுட்டே இப்ப என்னையில்லே எல்லோரும் சுத்தி பிடிக்குறாங்க.

கோட்டா: Hello ஐயே, என்ன திங் பண்றே? ஐயே என்ட குறூப்போட வரட்டா அமெரிக்கன் ஸ்ரைல்ல அப்படியே ஒன்னா பாதுகாப்பா தூக்கிட்டு வர்ரேன்.

மகிந்தா: இல்லீடா மல்லி பின்னாடி ஓடியாவது oxfordலே பேசித்தாண்டா வருவேன், இல்லாட்டி மனிசி கூட மதிக்காடா மல்லி. அதோட போலிஸ்காரனும் நம்மள கலைக்கிறான்டா பின்னாடி ஓடுன்னு.

கோட்டா: சரி ஐயே, அப்ப நீ பின்னாடி ஓடு நான் கிளிநொச்சில தெமிழனை புடிச்சு ஆர்ப்பாட்டம் பண்றேன். அதோட நம்மட சண்டியன்கிட்டையும் அந்த பிரிஞ்சு வந்த ஓடுகாலி தாடிக்கிட்டேயும் பறையுறன். அவனுகள் எதும் பண்ணும். நீ பயப்படாத. நீ Hotelக்கு போகும் வரைக்கும் என்னோட லைன்ல இரு அப்புறம் நான் திருச்சு விழிக்கிறேன்.

மகிந்தா: என்னடா மல்லி நீ நிறையவே மலையாளம் பறையுறே?

கோட்டா: எல்லாம் அந்த நாராயணன் சொல்லி தந்ததுதானே.

மகிந்தா: மல்லி தெமிழனை ஏமாத்திட்டு பின்னால வந்து காரில ஏறிட்டண்டா, ஆனா காரிலே இருந்த சிங்கக் கொடி எல்லாம் கழட்டீட்டாங்க. சும்மா மொட்டையாத்தான் போய்க்கிட்டிருக்கன்.

கோட்டா: ஐயே கொடி போனா போகுது நீ கோவணத்தோட வந்து சேர் ஐயே.

மகிந்தா: கோவணம்?ன்னா?

கோட்டா: அட அது தெரியாதா? அதுதான் நீ Tightsக்கு உள்ளாடி போடுறது.

மகிந்தா: மல்லி நீ நல்லா தெமிழும் பேசுறது.

கோட்டா: அது நம்மட KP பேசிக் கொடுக்கிறதுதானே.

மகிந்தா: மல்லி Hotelக்கு வந்துட்டேண்டா. ஒண்ணுக்கு முட்டி ஒண்ணமே முடியேல்லடா.

கோட்டா: ஐயே Tights போட்டிருக்கே, மறந்து போயி வேட்டியை மட்டும் தூக்கிட்டு நின்னுடாதே. அப்புறம்...

மகிந்தா: ஒனக்கு லொள்ளு கூடித்தாண்டா போச்சு மல்லி.

கோட்டா: இல்லே ஐயே எனக்கு இப்படித்தான் அமெரிக்காவில இருந்திச்சு. பயத்தில படபடக்க அப்படியே.... அப்படியே அடிச்சுட்டன்.

மகிந்தா: அட நீ அத பத்தி சொல்லவே இல்லீயே!

கோட்டா: இதெல்லாம் போய் எப்படி ஐயே.... ஐயே என்னா ஏதோ சத்தம் பலமா கேக்குது?

மகிந்தா: கொஞ்சம் பொறு மல்லி வெளியால நோக்குவம். மகே அம்மே பறத்தெமிழன் இங்கேயும் வந்துட்டாண்டா. மல்லி கட் பண்றா போனை.

கோட்டா: ஐயே, ஐயே, ஐயே... ஆ... போன் நின்னுடிச்சே. மகே அம்மே தெமிழன் உருவிட்டாங்களோ ஐயேவோட வேட்டியை! அப்போ மானம்? சேத்து உருவி....... சேச்சே சேச்சே அது நினைக்க முடியேல்லே செத்த கிளியாச்சே கூண்டோட சேந்து போயிடுமே. மகே அம்மே. தெமிழா நான் மறக்கமாட்டேண்டா ஒண்ணை.

- வ.கணேஷ்

மாறாத பழக்கம்.

அது ஒரு வெள்ளிக்கிழமை. அத்துடன் தீபாவளித் திருநாள். கௌரி விரதம் பிடித்தவர் முடிக்கும் நாள். கால் வைக்க இடமில்லாமல், மண்டபம் நிரம்பி வழியும் கூட்டம். கோவில் மண்டபத்தை அணுகவே முடியாமல் வாசலுக்கு வெளியே நீண்ட பக்தர்கள் கூட்டம். மணித்தியாலக் கணக்காக மண்டியிட்டுக் கிடந்தாலும், அந்தக் கடவுளுக்கு அருகே செல்ல முடியாமல் மண்டப வாசலில் இருந்து படிகள் படிகளாக நிறைந்து ஆலயத்துக்கு வெளியேயும் காத்து நின்ற அன்பர்களில் நானும் ஒருவன்.

திருப்பதி வெங்கடாஜலபதியைத் தரிசிக்க சில தடவைகள் அனுக்கிரகம் கிடைத்தது. மறக்க முடியாத நினைவுகள். முதல்முறை சென்ற போது. அது ஒரு புத்தாண்டு தினமாதலால் அளவு கடந்த கூட்டம் அலைமோதியது. அதனால் மூலப்பிரகாரத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள வெங்கடாஜலபதியைக் தரிசிக்க 12 மணித்தியாலங்கள் வரை வளைந்து வளைந்து செல்லும் வரிசையில் காத்திருக்க வேண்டியிருந்தது. வரிசையிலுள்ள எவரும் வரிசையின் ஒழுங்கை மீறவில்லை. இறுதியில் திருப்பதி வெங்கடாஜலபதியை அருகில் அண்மித்து தரிசிக்கும் வாய்ப்பு கிடைத்த போது ஒரு நிமிடமேனும் நிற்க விடாமல் அங்குள்ள ஆலய எடுபிடியாட்கள் எட்டித் தள்ளிவிட்டார்கள். இந்தச் சம்பவம் என் நினைவில் இன்றும் பசுமையாக இருப்பதால், இங்கே வரிசையில் பொறுமையாகக் காத்திருந்தேன். காத்திருந்த நேரத்தில் என் உள்மனம் அந்தக் கடவுளைத் தியானித்த வண்ணம் இருந்ததினால் நேரம் போனதே தெரியவில்லை.

ஆயிரக்கணக்கில் அல்லலுறும் ஈழத்தமிழ் மண்ணின் அற்றாத் துயரத்தையும், போரினால் மடிந்து போன போராளிகளையும், சொத்து சுகங்களை இழந்த அப்பாவி மக்களையும் அநியாயமாகத் தொலைத்துவிட்ட எமது இனம் இனி மேலாவது தலைநிமிர்ந்து வாழ வழிகாட்ட வேண்டுமென எனது பிரார்த்தனையைச் சமர்ப்பித்தேன். பேருந்துக்காக காத்து நிற்கும் போதும், கடைகளில் பொருட்கள் வாங்க வரிசைக்கிரமம் தவறாமல் கடைப்பிடிக்கும் எமது மக்கள், கடவுளைத் தரிசிக்க வரும் ஆலயங்களில் மட்டும் இந்தப் பண்பாட்டை மறந்து விடுவது எதனால்? வயதில் முதிர்ந்த பெரியவர்களே வரிசையில் ஒழுங்காக நிற்கும் பழக்கத்தை உதாசீனம் செய்யும்போது சிறுபிள்ளைகள் எம்மாத்திரம்? அதுதான் போகட்டும். ஆலயத்துக்குள் அடிவைக்க கொடுத்து வைத்த அதிஷ்டசாலிகள் மற்றவர்களுக்கும் இடங்கொடுத்து விலகிக் கொள்ளும் பக்குவம் எப்போது உண்டாகும்?

இந்த நேரத்தில் திருப்பதியில் எனக்கு கிடைத்தஅனுபவம் மீண்டும் தலைதூக்கியது. ஒரு நிமிடந்தானும் நிற்க விடாமல் துரத்திய திருப்பதி ஆலயத்தின் நிர்வாகம், மணிக்கணக்காக வரிசையில் காத்து நின்ற அடியார்களின் வசதி கருதியே அவ்வாறு செய்திருக்கலாமென்ற உண்மை எனது மரமண்டையில் அப்போதுதான் ஏறியது.

கழிவுகளை அகற்ற சிக்கன வழி.

வளர்முக நாடுகளில் வயிற்றோட்டம், வாந்திபேதி நோய்கள் பரவாமல் தடுக்க வேண்டுமாயின், மலசலக்கழிவுகளைத் தேங்க விடாமல் தினமும் அப்புறப்படுத்த வேண்டிய தேவை மிக அவசியமென்பது சுகாதாரசேவை மையங்களின் அறிவுறுத்தலாகும். நடைமுறையில், ஏராளமான நாடுகளில் இன்னமும் குழிக்கக்கூசுகளும், திறந்த வாளிகளை உபயோகிக்கும் பழக்கமும் இருப்பதை புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இதன் காரணமாக தொற்று நோய்கள் பரவுவதைத் தடுக்க முடியாமல், ஐக்கிய நாடுகளில் சுகாதார சேவை திண்டாடுகிறது. ரான்சானியாவிலுள்ள (Tanzania) நகரமான Dar es Salaam இலும், கென்யாவிலுள்ள நைரோபி நகரத்திலும் 80% விகித மக்கள் குழிகளிலாலான கழிப்பிடங்களையே உபயோகிப்பதாக தகவல்கள் கிடைக்கின்றன. இக்குழிகளில் தேங்கும் கழிவுகளை அகற்ற, மனிதவளத்தையே பாவிப்பதாக அறியப்படுகிறது. இதனால் தொற்றுநோய்கள் பரவும் அபாயம் கூடுதலாக இருப்பது கவலைக்கிடமான செய்தியாகும். இப்பிரச்சினையை ஆராய்ந்த கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த Sharp பிரிவினர், சாதாரணமாகப் பாவிக்கும் துவிச்சக்கர வண்டியின் (Bike) உதவியுடன் குழிகளில் நிரம்பியிருக்கும் கழிவுகளை உறிஞ்சியெடுக்க வெற்று இயந்திரங்களை (Vacuum Pump) இயக்கி பிறிதொரு வாளியில் சேகரிக்க வழிகண்டுள்ளனர்.

தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : உமா மகாலிங்கம்

மேற்கூறிய கழிவுகள் அகற்றும் பணிக்கு தேவைப்படுவதெல்லாம் ஒரு குழாய் (Hose) காற்றுப்புகாத வெற்று இயந்திரம். (Vacuom Pump) ஒரு வாளி (Bucket) மாத்திரமே. துவிச்சக்கர வண்டியின் மிதிபலகைகளை இயக்கி குழிகளிலுள்ள கழிவுகளை கனகச்சிதமாக வழிகளில் இறைத்து அப்புறப்படுத்த தேவைப்படும் முதலீடு அமெரிக்க டொலர்களில் $200 மட்டுமே. இரண்டு மாதங்களிலேயே இம்முதலீட்டை ஈடு செய்துவிட முடியுமென Sanergy நிறுவனத்துடன் இணைந்து செயலாற்றும் Sharp நம்பிக்கை தெரிவிக்கிறது. வாளிகளில் சேகரிக்கப் படும் கழிவுகள் பின்னர் Bio Gas ஆகவும், விவசாயத்துக்குப் பயன்படும் உரமாகவும் வேறுபடுத்த Sanergy நிறுவனம் ஆரம்பித்துள்ளது. இதன் பணி தொடர வாழ்த்துவோம்.

தோலின் உயிரணுக்களால் குணமடையும் முதுகெலும்பு.

இயற்கையின்படைப்பில், முதுகெலும்பு உள்ள உயிரினங்கள், அதைச்சரிவரப் பேணத் தவறினால், அதனால் படும் இம்சை கட்டுக்கடங்காதது. மனிதர்களைப் பொறுத்தவரை, முதுகெலும்பு முக்கியமான உடல் உறுப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதனால்தான் என்னவோ, யாராவது தப்பித் தவறி தனது நடவடிக்கைகளில் உறுதியாக இருக்கத் தவறும்போது, அவன் ஒரு முதுகெலும்பில்லாதவனாக எள்ளி நகையாடப்படுகிறான். முதுகெலும்பின் முக்கியம் கருதி, அதில் உருவாகும் கோளாறுகளை திருத்தியமைக்க Olfactory Ensheathing Cells (OECs) எனும் உயிரணுக்கள் அவசியம் தேவைப்படுகிறது. இவ்வுயிரணுக்களை அவரவர் மூக்கின் மெல்லிய தோல்பகுதியிலிருந்தோ, மூளையின் Olfactory பகுதியிலிருந்தோ பிரித்தெடுக்க முடியுமென ஆராய்ச்சிகளின் மூலம், கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த Clare Poaker தெளிவு படுத்தியுள்ளார். இதிலுள்ள சங்கடமென்னவென்றால் மூக்கின் தோல்பகுதியிலிருந்து அதிகளவு உயிரணுக்களைப் பெறுவது இலகுவல்ல என்றும், மூளைப்பகுதியிலிருந்து பெயர்க்கக் கூடிய உயிரணுக்களைப் பெறுவதில் அதிகம் ஆபத்து இருப்பதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

பாரிசவாதத்தால் முடங்கிக் கிடப்பவர்களையும், முதுகெலும்பு வியாதிகளால் பீடிக்கப்பட்டு அவதிப் படுபவர்களையும் குணப்படுத்தக் கூடிய நரம்பின் உயிரணுக்கள் (Nerve Cells) போதியளவு கிடைக்குமானால் இந் நோய்களின் கொடூரப்படியிலிருந்து. இவர்களைக் காப்பாற்றக்கூடிய நேரம் வெகு தூரத்தில் இல்லையென ஆய்வாளர்கள் நம்பிக்கை தருகிறார்கள்.

இலண்டனைத் தளமாகக் கொண்டு, நரம்பு சம்பந்தமான ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் Geoffrey Raisman, மேற்கூறிய ஆய்வுகள் பற்றி விவாதித்த போது நரம்பு சம்பந்தமான உயிரணுக்களை, பிரித்தெடுக்கும் உடல் பகுதியை விட, அதனை தேவைக்கேற்றவாறு எப்படியெடுக்கலா மென்பதே ஆராய்ச்சியாளர்களின் முன் வைக்கப்பட்டுள்ள அதிமுக்கிய சவாலாக இருப்பதை ஒப்புக் கொள்கின்றனர்.

இவர்களின் ஆய்வுகள் வெற்றி பெறுமானால் ஒரு நாள் நரம்புத்தளர்ச்சியால் அவதிப்படும் நோயாளர்களையும், பாரிசவாத நோயினால் பலமின்றிப் போனவர்களையும், அவரவர் உடலிலிருந்து பிரித்தெடுக்கப்படும் நரம்பு சம்பந்தமான உயிரணுக்களால் குணப்படுத்தக்கூடிய எதிர்காலம் நிச்சயம் வருமென அடித்துக் கூறுகிறார்கள். அவர்களுடைய ஆராய்ச்சிகள் வெற்றியடைய நாமும் வாழ்த்துவோம்.

Spicy Village

Indian & Srilankan Cuisine

We cater all indian and sri lankan food

அன்பர்கள் நண்பர்கள்
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
எமது உள்ளம் கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!

- 3 Mutton Roll or 3 Veg Rolls .... £ 1.20
- 3 Fish Cutlet........................ £ 1
- 3 Paties .... £ 1
- 3 Masala Vadai .... £ 1
- Chicken Briyani .... £ 2.99

Take away ONLY

100 இடியப்பம், சொதி, சம்பல்,
உருளைக் கிழங்கு மற்றும் பருப்பு கறி
£ 9.99 Only
Takeaway Only

அப்பம், தோசை என்பனவற்வை தரமாகவும் சுவையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

FREE DELIVERY ON MINIMUM
ORDER £10 WITHIN 3 MILES RADIUS.
OVER £40 WITHIN 5 MILES RADIUS
OVER £150 WITHIN 10 MILES RADIUS

உங்கள் திருமணம், பிறந்தநாள், அரங்கேற்றம்
மற்றும் மங்களகரமான நிகழ்வுகளுக்கான
அனைத்து வகையான இலங்கை, இந்திய உணவு
வகைகளை தரமாகவும் நிறைந்த சுவையுடனும்
பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்.
(பிற நகரங்களுக்கும் விநியோகம் செய்யப்படும்.)

86 Brighton Road, Purley CR8 4DA

TP: 020 8660 0956

வீடுகள் வாங்க விற்க வாடகைக்குவிட மற்றும்
அனைத்துவித பராமரிப்பு சேவைகளுக்கும் நாடுங்கள்!

WE ARE LOOKING FOR PROPERTIES IN

- Brockley
- Catford
- New Cross
- Nunhead
- Peckham
- Penge
- Plumstead
- Croydon
- Sydenham
- Charlton
- Deptford
- Dulwich
- Eltham
- Forest Hill
- Anerley
- Bellingham
- Blackheath
- Camberwell
- Lee
- Ladywell
- Lewisham
- Hither Green
- Downham
- Bromley
- Greenwich

and the surrounding areas

LANDLORDS

We seek to introduce our property Sales, Lettings and Management to you and we are currently managing properties in your area.

TENANTS

If you are looking for properties within the areas mentioned above, we can help you whether you are Working or receiving Housing Benefit.

FREE MARKET VALUATION

அழையுங்கள்
Sammy, Lee, Kumar or Lux
0208 7788400
(Sydenham)

Web: www.yourperfectmove.co.uk

YOUR PERFECT MOVE

Select

Estate & Lettings

Eastam, Lewisham, Hanger lane, Newbury Park இன்னும் லண்டனில் பல பகுதிகளில் *Grocery & off Licence, Chicken Shop, A3* அனுமதியுடனான கடைகள் *Leasehold, Freehold*-க்கு விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணத்தில் கண்டிக்குளி, ஆரியகுளம், பண்டத்தரிப்பு, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் வெறுங்காணி, வீட்டுடனும் விற்பனைக்குண்டு. பருத்தித்துறை வீதியில் 5 பரப்பு, ஹோட்டல், மருத்துவ விடுதி போன்றவற்றுக்கு உகந்தது.

லண்டனில் வீடுகள் வாங்க, விற்க, வாடகைக்கு விடவும் நம்பிக்கையான, நாணயமான சேவைக்கு நாடவேண்டிய நிறுவனம்.

0208 470 1500
07956 150 580
www. select.gb.com



SRIKANTH & CO SOLICITORS

We practice in the following areas of law:

- Immigration
- Wills & Probate
- Conveyancing - Residential
- Conveyancing – Commercial
- Landlord & Tenant
- Property Sale & Letting
- Liquor Licensing
- Matrimonial / Family
- Employment Matter
- Consumer Problems
- Civil Litigation
- Housing Matters
- Welfare Matters

557 High Road, Wembley, Middlesex, HA0 2DW || www.srikanthsolicitors.co.uk

Tel: 020 8795 0648 Mob: 07831 195 979
Fax: 020 8795 0649

யாழ்ப்பாணப் புகையிலை

காசுப்பயிர் என்று வர்ணிக்கப்பட்ட புகையிலை. அன்றய நாட்களில் யாழ்ப்பாணத்தின் வருவாய் ஆதாரங்களில் முக்கியமான ஒன்று. பயிரிட்டுச் செடி ஆக்குவது முதல் பதப்படுத்தி சிற்பமாக்கி சிங்களப் பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்வது வரை பூரணமாக புகையிலையின் ஆதிக்கம் யாழ் குடா நாட்டில் நீண்ட காலம் நிலைத்தது. கோட்டா போட்டு துண்டுகளாக்கி, சுருட்டுகளாக்கும் பணியிலும் அனேக சுருட்டுக் கொட்டில்கள் ஈடுபட்டிருந்டதன. வந்தாரை வரவேற்க வீடுகள் தோறும் வெற்றிலைத் தட்டங்கள் நிலைந்திருந்த அந்த நாட்களில் வெற்றிலை, பாக்கு, புகையிலையோடு சுண்ணாம்பும் அங்கே தட்டங்களில் மிகுந்திருப்பதை காண முடிந்தது. மாரி வெள்ள முடிவோடு புகையிலைச் செடிக்கான நாற்றுமேடை தயாராகிவிடும். மாரிக்கு முன்னதாகவே பாவட்டை, பன்னை என பச்சை குழைதழைகளை மண்ணுக்கு இயற்கை பசளையாக்கும் வேலை நடைபெறும். மண்வெட்டியோடு வரிசையாக தொழிலாளர்கள் சண்டிக்கட்டு சாரத்தோடு அல்லது கோவணத்தோடு வியர்வை சிந்த தோட்டங்களில் நின்று மண்ணைக் கொத்தி குழைகளை தாட்டுவிடும் காட்சியும் ரசனைக்குரிய ஒன்று. வரிசையாக பாத்தி கட்டி வாய்க்கால் அமைத்து, புகையிலைச் செடியை நட்டு, அது கணக்காக அலைகள் விடும் வரை நீரூற்றி வளர்ப்பது அடுத்த பிரயத்தனம். நீர் இறைக்கும் இயந்திரங்கள் அதிகம் அறிமுகமாகாத காலங்களில் கிணற்று நீர் மூலம் துலா வழியாக பட்டி கட்டி இறைப்பதுதான் அந்தக்கால முறை.

புகையிலைச்செடி ஒன்று இரண்டாக இலைவிட, கிருநாசினி விசுறல், தேவையான அளவிற்கு உரமிடுதல் என அன்றாடம் வேலைகள் இருக்கும். பாத்தியில் விளைந்த புற்களை மாலை வேளைகளில் உளவாரத்தால் செருக்கி அகற்றி வீட்டில் மாட்டுத் தொட்டிலில் போடுவதும் அனேகமாக சிறுவர்களின் வேலை. அனேகமாக தொழிலாளர்கள் ஒரு செடிக்கு இன்ன விலை என்று பேரம் பேசி வியாபாரிகளிடம் செடியாகவே விற்று விடுவார்கள். செடிகளை வியாபாரிகள் விவசாயிகளிடம் பெற இடைத் தரகர்கள் ஊருக்கூர் இருப்பார்கள். தென்னிலங்கை வர்த்தகத்தோடு தொடர்புடைய வடமராட்சி, தீவக வியாபாரிகளே இதில் அதிக அக்கறை காட்டுவார்கள்.

செடியாலே கெட்டுவிட்ட தனித்தனி நறுக்கப்பட்ட பச்சைப் புகையிலைகள் பதப்படுத்தல் அடுத்த கட்டம். பதபட்டுத்த மண்ணால் அரண் அமைக்கப்பட்ட சூரையிடப்பட்ட புகைக்குடில்கள் இருக்கும். தென்னம் குச்சுகளை அடுக்கி புகையாக்கி குடில் மேடைகளில் அடுக்கப்பட்ட புகையிலையயை பாட்டம் பாட்டமாக அதில் அடுக்கி புகையிலையோடு அது காய்ந்து பதமாக வசதி செய்து தரப்படும். இவ்வாறு பதமான ஐம்பது இழைந்த புகையிலைகளை ஒரு கட்டாக்கி அதை சிற்பம் என்று பெயரிட்டு ஊருக்கூர் அனுப்புவார்கள். வியாபாரிகள் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு அனுப்ப ரயில் சேவையின் ஊடாக வானாரம் என்கின்ற ஒரு தனிப்பகுதி அனுப்புவதற்கென அனுப்பப்பட்டிருந்தது.

புகையிலைச் சிற்பங்கள் என பெயர் பெறும் இவற்றுக்கு பாணி ஊற்றி பாணிப்புகையிலை ஆக்குவதும், பாணிப்புகையிலும் சுருட்டுதயாரிப்பதும் அடுத்த கட்டம். உலர்ந்த பாணியிடப்படாத புகையிலை தமக்கு ஏற்ற வகையில் சுற்றிச் சுற்றிபுகைப்போருக்கு பயன்படும். புகையிலைத்துண்டங்களை மெல்லுவதற்கும் இதே பதப்படுத்தப்பட்ட புகையிலை பயன்படுத்தப்படும். அப்பு, ஆச்சி, அம்மம்மாக்கள் கொட்டைப்பெட்டிக்குள் பாக்கு, வெற்றிலை, சுண்ணாம்புக் கரண்டகத்தோடு புகையிலைத் துண்டுகளும் அந்த நாட்களில் காணப்படும். சோர்வையகற்ற வாய்க்கு புகையிலையை போடுவது அந்த நாட்களில் ஒரு வழக்கமாக அமைந்திருந்தது.

ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: **ப.வை. ஜெயபாலன்**

சுருட்டுக் கொட்டகைகள் அந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்தை அலங்கரித்ததும், பொருளாதாரத்தை உயர்த்தியதும் ஒரு கால கட்டம். முக்கியமான ஒரு குடிசைக் கைத்தொழிலாக சுருட்டுக் கொட்டில் அமைந்தது. சுருட்டுக் கொட்டகைகள் அங்காங்கே முதலாளிமார்களால் அமைக்கப்படும். ஆயிரக் கணக்கான புகையிலைகளை பாணி போட்டு தயாராக்கி வைப்பார்கள். அவற்றை சுற்ற சப்பாணி கட்டி குழுமியிருந்து சுருட்டிச் சுற்றாக்குவதற்கு ஏராளமான தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவார்கள். பத்து சுருட்டுக்களை கொண்ட ஒரு கட்டுச் சுருட்டு சுற்ற கூலி மூன்று சதமாக இருந்தது ஒரு காலம்.

புகையிலை நரம்புகளை நீக்கி துண்டுகளாக்கி தொழிலாளர்கள் முன் நிரப்பி வைப்பதற்கும் ஒரு உதவியாளர். சுருட்டிய சுற்றுக்களை நூலால் சுற்றிக் கட்டவும் ஒருவர். இருபது முப்பது பேர் ஒருங்கே அமர்ந்திருந்து சுருட்டுச் சுற்றும் போது அவர்களுக்கு தினசரி செய்திப் பத்திரிகைகளை வாசித்துக் காட்டவும் ஒரு கூலியாளர். இவ்வாறாக அமைந்த இந்தச் சுருட்டு தொழிலாளர்கள் தமக்கென தனித் தொழில் சங்கங்களும் அமைத்திருந்தார்கள்.

ஒரு கொடும்பாக்கியம் ஒவ்வொரு சுருட்டு தொழிலாளர்கள் மத்தியிலும் நிலவியது. உதாரணமாக அந்த நாட்களில் பிரபலமான திருவிழாக்கள் நடைபெறும் கோயில்களில் அளவெட்டி கும்பளாவளை பிள்ளையார் கோயிலும் ஒன்று. அதன் பூங்காவனத் திருவிழா சுருட்டுத் தொழிலாளர்களின் உபயம். ஏழாம் திருவிழாவுக்கு போட்டியாக பல ஆயிரக் கணக்கான ரூபா செலவில் மிக நேர்த்தியாக இந்த திருவிழாவை நடத்த ஒவ்வொரு தொழிலாளியும் தம் நாளாந்தக் கூலியின் ஒரு தொகையை முதலாலீடாக சேமித்து தம் பங்கை வருடங்தோறும் திருவிழாவுகெனத் தருவார்கள்.

நாலு முழ வேட்டியும் ஒரு துவாய்த் துண்டு சகிதம் ஆயிரக்கணக்கான சுருட்டுக் கட்டுக்களை நாளாந்தம் சுற்றும் திறமை வாய்ந்த அந்த தொழிலாளர்கள் யாழ்ப்பாணத்திற்கே உரிய சிக்கனம், சேமிப்பு, சம்பாத்தியம் என்ற தாரகை மந்திரத்திற்கமைய வாழ்ந்து, கல் வீடுகளோடு வசதியாக தம் வாழ்வை அமைத்துக் கொண்டவர்கள். தென்னிலங்கையில் இனக்கலவரம் வெடித்த போதெல்லாம் தாக்கப்பட்ட தமிழர் கடைகள் சுருட்டுப் பெட்டியோடு புகையிலை விற்க வந்து பெரும் வியாபார சரங்களை தங்கள் பகுதிகளில் தமிழர்கள் அமைத்துக் கொண்டார்கள் என்ற பொறாமையுடன் நடந்த தாக்குதலாகவும் கருதப்பட்டது.

இதுவரை சுருட்டு வியாபாரத்தை ஆரம்பித்து பெரும் முதலாளிகள் ஆனவர்கள் தம்மை ஆளாக்கிய, தம் வியாபாரத்தை உயர்த்த காலாகவமைந்த சுருட்டு வியாபாரத்தை, தாய் வியாபாரமாக மதித்ததும் உண்டு. கிளிநொச்சிப் பகுதியில் V.R.T பிரபல இயந்திர பாக விற்பனை நிலையம் முன்னணியில் ஒரு பெரிய பலகைப் பெட்டி இதில் புகையிலை சிற்பங்கள் அடுக்கப்பட்டிருக்கும். புகையிலை மூலம் முதலாளியான இவர் தம்முடைய கடையிலே புகையிலை வியாபாரத்தை இறுதிவரை கைவிடவில்லை. தன்னை ஆளாக்கிய தன் வியாபாரத்துக்கு செலுத்தும் நன்றிக் கடனாக அவரும் அதே போல பல வியாபாரிகளும் சுருட்டு விற்பனையை, புகையிலை விற்பனையை தங்களுடைய வியாபார சலத்தின் ஒரு பகுதியாக இறுதிவரை இணைத்துக் கொண்டிருந்தார்கள்.

யாழ்ப்பாண புகையிலை சாம்ராஜ்ஜியத்தை நினைவில் மீட்கும் போது பொற்காலம் எங்கோ போயிற்றே என்ற கவிதை வரிகள் ஏக்கப் பெருமூச்சோடு இதயத்தில் எழுகின்றது.

R.S. Finance

Commercial Mortgages
& Business Loans

Contact: Sri
220 - HIGH STREET NORTH, EAST HAM,
LONDON, E6 2JA.
Tel: 020 8475 0755
Fax: 020 8470 4755 / Mob: 07803 600 543

Re-Mortgages
(Raising Funds to Start Own Business and Other Needs)
Secured Loans

Commercial Loans
Shops (Pharmacies)
Petrol Stations
Restaurants & Hotels
Care Homes Etc.

Loans will be arranged for lease hold and free hold businessess

Arrangements are made to meet the senior business manager from leading banks in our premises to fullfil your business loan requirements.

Whatever your needs, Regarding your Commercial Loans

GAITHIRI NATHAN & CO.
SOLICITOR & COMMISSIONER FOR OATHS

Practising Since 1983 in UK

FOR QUALITY LEGAL SERVICES
• COMMERCIA
• LIQUOR LICE
• IMMIGRATION, NATIONALITY, ENTRY CLEARANCE APPLICATIONS, WORK PERMIT & HSMP
• WILLS & PROBATE
• DIVORCE & FAMILY (NON LEGAL AID) & MORE

சகல விதமான சட்ட ஆலோசனைகளுக்கும் உடன் தொடர்பு கொள்ளுங்கள்

Gaithiri Nathan & Co Solicitors
72 Chestnut Drive, Pinner, Middlesex HA5 1LY
Tel: 0208 903 7217 | Fax:0208 903 0052
Mail : gaithirisolicitor@btinternet.com

513a & 515a High Road
Wembley, Middlesex
HA0 2DH
(by appointment only)

சாதிகளில்லையடி பாப்பா

நவம்பர் முதல் வாரத்தில் (5 - 19) இதழில் குமாரசாமி என்பவரின் உள்ளத்தில் விஸ்வருபமாய் எழுந்துள்ள கேள்விக்கான பதிலைத் தமிழர்கள் ஒவ்வொருவரும் அவரவர் உள்ளத்தில் தேடுவது அவசியம். அவரால் முன்வைக்கப் பட்டிருக்கும் யாவுமே உண்மை. புலம் பெயர்ந்து வாழ்பவர்களிற் பெரும்பாலோர் எல்லாவற்றையும் மாற்றவும் மாறவும் தயாராக உள்ளனர். ஆனால் சாதியை மட்டும் இறுக்கிப் பிடித்துக் கொள்ளுகிறார்கள். குறிப்பாகத் திருமணப் பேச்சு என்று வரும்போது நதிமூலம் ரிஷிமூலம் என்பதுபோலச் சாதியின் மூலவேரைத் தேடிப் பிடித்து விடுவார்கள்.

சாதிகளில்லையடி பாப்பா - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்

குழந்தைகள் எப்படி வளர வேண்டும் என்று கூறும் பாப்பா பாட்டில் பாரதியார் இப்படிச் சொல்லி உள்ளார். இந்தப் பாடலை அறியாத தமிழர் அரிது.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமையான்

எல்லா மனிதர்களும் பிறப்பால் ஒரே மாதிரியானவர் என்று திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூறியுள்ளார். அவரவர் காரியம் செய்யும் திறமை வேறுபடுவதால் சிறப்புக்கள் ஒரே மாதிரியாக அமைய முடியாதென்பது இக்குறளின் பொருள் ஆகும்.

இதனையே தனது முக்கிய கோட்பாடுகளில் ஒன்றாகக் கருதி தீண்டாமை ஒழிப்பிற்காக பாடுபட்டு வாழ்ந்து காட்டியவர் காந்தி அடிகள். தனது கொள்கையில் என்றும் தளராது வாழ்ந்ததால் மகாத்மா என்று உலகம் போற்றுகிறது.

ஔவைப் பாட்டியைப் பாருங்கள்:

சாதியிரண்டு ஒழிய வேறில்லை
நீதி வழுவா நெறிமுறையில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்

தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு கோயிலினுள் புக அனுமதி மறுக்கப்பட்டதைக் கண்ட மனித நேயத்தின் மாமகுடம் இராமனுஜர், அவர்களை வைஷ்ணவர்களாக்கி ஆலயத்தினுள் அழைத்துச் சென்று வழிபட வைத்தார்.

இப்படி எத்தனையோ சான்றோர்கள் காலத்திற்கு காலம் சாதி ஏற்றத் தாழ்வு ஒழியவேண்டும் என்று பலவிதமாக எடுத்துச் சொல்லியும் தாமும் வாழ்ந்து காட்டியும் இருக்கிறார்கள். அண்மைக் காலத்தில் வாழ்ந்து புரட்சி பல செய்து ஈ வே ரா பெரியார். நம் வாழ்வுக்கு எது நல்லது என்று தேடி உணர்ந்து வாழ்வில் கடைப் பிடிப்பவர்கள் தொகை குறைந்து கொண்டே போகிறது. பெரியோர்களின் வாக்குகள் வாழ்க்கை வரலாறுகள் மேடைப் பேச்சுக்கு எடுகோள்களாகப் பயன்படுகின்றனவே தவிர பின்பற்றப் படுவதாக இல்லை.

பகுத்தறிவும் பண்பட்ட உள்ளமும் கொண்டோர் சாதிப் பரிவினையை பாராட்டமாட்டார்கள். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று நாம் உணரத் தொடங்கினால் உலகமே ஒரு சமதாயமாக மாறத் தொடங்கிவிடும். சாதிப் பிரிவினை அகலும் சமரசம் நிலவும்.

- தவம்

பி. கு. - திரு குமாரசாமி அவர்களே! நீங்கள் உயர்ந்த சாதி என்று எண்ணித் தலை நிமிர்ந்து நடவுங்கள். இங்கே மாற்றுவதற்கு எதுவுமில்லை. உங்கள் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் உங்கள் சாதி எழுதப்படவில்லை. உங்கள் முகத்தில் சாதி என்னும் முத்திரை குத்தப்படவில்லை.

இயல், இசை, நாடகம் [சங்கீதம்]

சங்கீதம் என்பது அறுபத்து நான்கு கலைகளில் ஒன்றாகும். எல்லா கலைகளிலும் பார்க்க சங்கீதக் கலையே மிகச் சிறந்தது என்றும் என்னதமானது என்றும் கருதப்படுகிறது. இக்கலையானது செவிக்கும் மனத்திற்கும் இன்பத்தை ஊட்டுகின்றது. ஏனைய கலைகளை நாம் கண்களால் பார்த்து ரசிக்கலாம், ஆனால் சங்கீதக்கலையை செவியால் கேட்டு ரசிக்கக் கூடிய கலையாகும். இது ஒரு தெய்வீக சக்தி வாய்ந்த கலை. சரஸ்வதி கையில் வீணையும், சிவனின் கையில் டமருகமும் கண்ணபிரான் கையில்? குழலும் இருப்பதை நாம் காண்கின்றோம்.

இக்கலையானது முற்காலத்தில் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. கீதம், வாத்தியம், நிருத்திகம் என்பனவாகும். இவைகளில் கீதம், வாத்தியம் இரண்டும் சேர்ந்து சங்கீதமாகவும், நிருத்திகம் கலையாகவும் பிரிக்கப்பட்டுள்ளது.

பாட்டின் கருத்தை அறிந்து கொள்ளாத ஒருவன் கூட இசையைக் கேட்டு மகிழ்வான். நாம் செவிகளால் கேட்டு இன்புறக்கூடிய செவிச் செல்வம் சங்கீதம் ஆகும். சங்கீதத்தை செவிச்செல்வம் என்றும் அழைப்பர். இதனை திருவள்ளுவர் பின்வருமாறு கூறியுள்ளார்.

'செல்வத்துச் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை'

உன்னதமான சங்கீதத்தை அடிக்கடி கேட்க வேண்டும். கேட்கும் பொழுதுதான் உட்காதில் உள்ள நரம்புக் கட்டு மூலம் தெய்வீக உணர்ச்சி உண்டாகின்றது. சங்கீதத்திற்கு மது போன்ற அமுதுண்டு. இது தன் கவர்ச்சியினால் மானிடரை மயக்கி தன்பால் ஆட்கொள்கின்றது. இதனால்தான் நாம் இன்னிசையை கேட்கும் போது எம்மையே மறந்த நிலையில் இருக்கின்றோம்.

கேள்வி பதில்.

இசை என்ற சொல்லின் பொருள் என்ன?

இசை என்ற சொல்லுக்கு இசைய வைப்பது இல்லது இணங்க செய்கின்ற ஓர் சாதனம். அதாவது உயிரினங்களையும் மனிதனையும் ஏன் இறைவனை கூட இசைய இணங்கச் செய்வது இசையாகும்.

Music என்ற சொல் எந்த மொழியில் இருந்து வந்தது?

கிரேக்க மொழியில் இருந்து வந்தது. Mousa என்ற கிரேக்க சொல்லில் இருந்து வந்தது. Muses என்ற கிரேக்க தேவதைகள் விரும்பிய, ஊக்குவித்த ஒரு கலை பின்பு Music என்று அழைக்கப்பட்டது.

இசை ஒலியை வடமொழியில் எவ்வாறு அழைப்பர்?

நாதம்

இசையை தெய்வீகக் கலை என்று அழைப்பதற்கு உரிய காரணங்கள் யாவை?

இறைவன் இசைவடிவமாய் இருக்கின்றார் என்பது ஒரு 'முதுமொழி' ஆகும். சுந்தரமூர்த்தி நாயனார் 'ஏழிசையாய் இசைப்பயனாய்', அப்பர் பெருமான் 'ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே', திருஞான சம்பந்தர் 'பண்ணமர் வீணையினான்' என்று பாடியுள்ளார்கள். அதை விட 'சங்கரா', 'நாத சரீரா' என்ற திரைப்பட பாடல்களும் உண்டு.

முத்துசுவாமி தீட்சதர் என்ன இராகத்தை பாடி மழையை வருவித்தார்?

அமிர்தவர்ஷணி இராகம்.

மனிதன் பிறந்தவுடன் தாயார் இசைக்கும் இசையின் பெயர் என்ன?

தாலாட்டுப் பாடல்

முத்துக்கள் என்று கூறுவது எதனை?

சுரங்களை முத்துக்கள் என்று அழைப்பர்.

குரல், வாத்தியம், நாட்டியம் இம்மூன்றையும் சேர்த்து கூறும் இசையை எவ்வாறு அழைப்பர்?

ஆகத நாதம் என்று அழைப்பர்.

- கௌரி செல்வரட்ணம் (பிரான்ஸ்)

மண்ணில் விழுந்த விதைகள்

இஸ்ரவேல் என்றொரு தேசம் இல்லாமலே ஆனது.
பலமுறை இல்லாத இஸ்ரவேலை
உலகுக்கு சாட்சி ஆக்கியதே
மண்ணில் விழுந்த விதைகள் தானே.
இஸ்ரவேலின் வரலாறு விதைகள்
ஆகிப்போன நமக்கும் சாட்சியாகட்டும்.

மாண்டவன் கல்லறை செல்வான்
மரித்தவன் புதைக்கப்படுவான்
நித்திரை அடைந்தவன் விதைக்கப்படுவான்
மாண்டவனும் மரித்தவனுமல்ல
விதைக்கப்பட்டவனை நம்பித்தானே
விதைத்தவன் காத்திருப்பான்
நீயும் காத்திரு என் சொந்தமே.

மண்ணில் விழுந்த விதைகள்
வீழ்வதில்லை அது மாழ்வதுமில்லை
மண்ணில் விழாத கோதுமை மணி
பலன் தராது தனித்திருக்கும்.
மண்ணில் விழுந்த கோதுமை மணி
பலன் தருமே நூறு மடங்கு – இது
இயேசு தந்த அருள்மொழி.

நீர் நிலைகளெங்கும் சூரியனை கண்டதாலே
சூரியன் வீழ்ந்துவிட்டான் மண்ணில் என்று
ஆர்ப்பரிக்கும் கூட்டமெல்லாம்
சூரியன் மண்ணில் விழவில்லை எனும்
பேருண்மை காணாமலே கனவாகிப் போவார்
வீழ்ந்த சூரிய பிம்பங்களே
சூரியனாகவே விண்ணில் நிலைகொள்வர்

விதைகளாகிப் போன தமிழ் சொந்தங்கள்
அடங்குவதில்லை கல்லறைக்குள்.
முளைத்தெழுவர் ஓர்நாள்
நூறுமடங்கு பலத்தோடு நீ அன்று
கல்லறைகள் உடைந்தோடும்
தேசமே சொந்தமாகும்.
கண்ணீர் வழிய, கலங்காமல் காத்திரு
விதைகளை மண்ணுக்குத் தந்த
மாவீரர் குடும்பங்களுக்கு
இயேசுவின் நாமத்திலே
ஆறுதலும், சமாதானமும் பெருகட்டும்
எனது வாழ்த்துக்கள்.

– சங்கை Rev. பீட்டர் இஸ்ரவேல் நெல்சன்

தமிழ் இணையப் பரப்பில் புதிய வரவு

செய்திகள் | அரசியல் | ஆய்வு

விவாதம் | இலக்கியம் | சமூகம் | சினிமா

காலத்தின் பதிவாய்

இனத்தின் குரலாய்...

ponguthamil.com

கேட்டிருப்பாய் காற்றே

சென்ற சனிக்கிழமை (27-11-10) மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்த லண்டன் எக்சல் மண்டபத்துக்குச் சென்றேன். அது எனக்குத் தந்த அனுபவம் வேறு. கணக்கற்ற எங்கள் துக்கங்களுக்குக் கண்ணீர் விட்டு கதறியழ ஓர் இடம் அது. ஈழத்தமிழர் நாம் பல்லாயிரக்கணக்கில் படுகொலை செய்யப்படுகிறோம். தாயை தந்தையை மகளை மகனை சகோதரர்களை உறவுகளை நட்புகளை என்று எல்லோரையும் எல்லாரும் இழக்கிறோம்.

ஊனமாக்கப்பட்ட உடல்கள் எத்தனையாயிரம், அம்மணமாக்கி பின்னால் கையைக் கட்டி வைத்து, முகத்தை துணியால் மூடி வைத்து, தமிழனின் பிடரியில் சுடுகிறான் சிங்களவன். பக்கத்தில் அவ்வாறு சுடப்பட்டு வீழ்ந்த உடலங்கள். மரமொன்றில் கட்டி வைத்து சித்திரவதை செய்து கொல்லப்படுகின்றான் ஒரு தமிழன்.

இவற்றையெல்லாம் ஏன் என்று கேட்க யார் இருந்தார்கள். நினைக்குந்தோறும் நெஞ்சை வெடிக்கிற அழுகை விம்மும். மாவீரர் நாளில் யாவற்றையும் நினைந்து நல்லா அழுதேன். நாங்கள் அழக் கூடாது பயமின்றி வாழ வேண்டும் சுதந்திரமாகத் திரிய வேண்டும் என்பதற்காகத் தான் சுமார் நாற்பதினாயிரம் மாவீரர்கள் தம் இன்னுயிரை ஈகம் செய்தார்கள்.

' எங்கே உமது விழிகளை

இங்கே திறவுங்கள்

ஒரு முறையுங்கள் திருமுகம் காட்டியே

மறுபடி உறங்குங்கள்'

இந்த மாவீரர் நாளில் மிகத் துக்கத்தில் தோய்ந்திருந்தேன். மாவீரர்களுக்கான என் வணக்கத்தை இதுவரை காலமும் நிகழ்ச்சிகளுடாகச் செலுத்தினேன். இம்முறை மௌனமாக கண்மூடி கண்ணீர் உகுப்பதனூடாகச் செலுத்தியிருந்தேன். அதுவும் மகத்தானவோர் அனுபவமே.

இந்த அனுபவங்களை வேண்டாம் என்று மறுத்தான் என் நண்பன் ஒருவன். அதாவது அவனது கேள்வி இப்படியாக இருந்தது. ' இவ்வளவு செலவழித்து இம் மாவீரர் நாளை செய்யத்தான் வேண்டுமோ?'இதற்கு என்ன பதில் சொல்ல 'இப்படிச் செலவழிக்கிற காசை ஈழத்தில் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு அனுப்பலாமே என்பதும் அவனது கருத்து. இதற்கும் என்ன சொல்ல? அவனது கடைசி வாக்கியம் உளுத்துப் போன வாக்கியம். அது ஏன் 'உளுத்துப் போன வாக்கியம்' என்று சொல்லப் புகின் இப்பத்தி போதாது.

உலகில் எந்த சமூகமும் லட்சக்கணக்கில் விடுதலைப் போராளிகளை உருவாக்கும். அவர்களும் ஒப்பற்ற தியாகம் புரிவர் ஆனால் உலகில் எந்த சமூகம் நமது மாவீரர் போன்றோரை உருவாக்கும்? கரும்புலிகள் வேவுப் புலிகள் போன்றோரை எச்சமூகம் உருவாக்கும்? காற்றுப் புக முடியாத இடத்திலும் கரும்புலி நுழைவார் என்று சொல்வர்.

அவர்கள் செய்த சாதனைகளை தியாகங்களை உழைப்புகளை எழுத இப்பேனாவால் இயலுமா? தமிழ் மாத்திரமல்ல உலகில் எந்த மொழியிலும் ஏதாவது ஒரு சொல் இதைக் குறிக்க இருக்கிறதா? மாவீரர் பெயர்ப் பட்டியலில் கூட வர முடியாமல் அனாமதேயமாக கல்லறைகளில் கண்ணுறங்கும் கரும்புலிகள் எத்தனை பேர்.

அவ்வாறு தான் வெற்றியைத் தேடிக் கொடுக்கும் வேவுப் புலிகளில் சாகசம். அவர்கள் வெற்றியைக் காண்பார்களோ தெரியாது. களமாடியும் மரணமடையார். எதிரியின் குகைகளுக்குள் ஒற்றனாய் நுழைந்து அசுமாத்தமெதுவும் தெரிய வையாது பலநாட் பட்டினி கிடந்து... எழுதுவது கடினம்.

வேவுப் புலியாய் விழும் மாவீரர் பெயர் எதில் சேர்த்துக் கொள்ளப்படும்.

உலகில் எந்த விடுதலை அமைப்பிடமிருந்து வான் படை என்ற படையணி வந்திருக்கிறது? அத்தனையையும் தீரத்துடன் செய்து சாதித்தவர் யார்? இதனைப் பாருங்கள் ஆயுதம் தூக்கிய ஒருவன் அவன் திலீபன் அச்சூழலில் ஆயுதம் தூக்க முடியாது என்ற போது ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களுக்காக அகிம்சையைத் தூக்கினான். பன்னிரண்டு நாட்களும் 'ஒரு துளி நீர்' அருந்தாது வீரச்சாவடைந்தான். எவரினால் இது இயலும்? மகாத்மா காந்தி கூட இத்தனை தீரம் காட்டியிருப்பாரா 'பொபி சான்ட்ஸ்' என்ற விடுதலைப் போராளி சிறையில் அடைக்கப்பட்டிருந்த வேளையில் பட்டினிப் போராட்டம் நடத்தி உயிர் நீத்தார் அத்தியாகத்துக்கு என் வணக்கம்.

திலீபனுக்கு சிறை இல்லை வெளியில் செய்வதற்கு எத்தனையோ அரசியல் வேலைகள் இருந்தன. ஆயுதப் போராட்டம் செய்ய முடியாதெனில் அரசியலில் இருந்து ஒதுங்கிப் போயிருக்கலாம் ஆனால் திலீபன் அகிம்சையைக் கையில் எடுத்தான். அதில் உச்சம் வரை ஒரு துளி சிந்தாது அதனைப் பயன்படுத்தினான். எங்ஙனம் இதுசாத்தியமாயிற்று. எச்சமூகம் இத்தகையோரைத் தந்திருக்கிறது.

இரவி அருணாசலம்

எழுதுவது என்னவெனில்

அடுத்த நாள் தன்னைக் கொடையாக் கொடுக்க தளம் விட்டுப் புறப்படப் போகிறான் ஒருவன். எனவே தன் வீடு போய் தாய் தங்கைகளை பார்த்துவிட்டு வரவேண்டும். தன் பொறுப்பாளருடன் போனான். தன் மகனைக் கண்ட மகிழ்வு தாய்க்கு ஆனால் கவலையும். மைந்தனுக்குச் சமைத்துத் தர வீட்டில் ஏதுமில்லை. பொறுப்பாளருக்கு புரிகிறது. சில தாள் பணத்தைக் கொடுக்கிறார். தங்கை சாமான் வாங்கி வர சமையல் முடிகிறது.

தங்கைமாருடன் விளையாடி தாயின் உணவு உண்டு விட்டு பொறுப்பாளருடன் மைந்தன் புறப்படுகிறான். தாய் மைந்தனைத் தனியே அழைத்து குசுகுசுக்கிறார் 'நாலைஞ்சு நாளாய் நாங்கள் சாப்பிடேல்ல நான் பட்டினி கிடப்பன் தங்கச்சிமார் பாவம் பொறுப்பாளரிட்ட கொஞ்சக் காசு வாங்கித் தந்துட்டுப் போவன்'

'இல்லையம்மா அது சனத்தின்ர காசு நாங்கள் தொட ஏலாது' என்றான் நாளை கரும்புலியாகப் போகப் போகும் அந்த மாவீரன்.

இப்படி என்னிடமே ஒரு நூறு கதைகள் உள்ளன எனில் இப்படி எத்தனையாயிரம் அவலச் சுவை (tragedy) தரும் கதைகளை மாவீரர் கொண்டுள்ளனர்

என்ன சொன்னான் என் நண்பன் 'இவ்வளவு செலவழித்து இந்த மாவீரர் நாளைக் செய்யத் தான் வேணுமோ' என் கேள்வி இது தான் நாம் செய்யும் இது கூடப் போதுமா அவர்கள் செய்த தியாகத்திற்கும் அர்ப்பணிப்புக்கும் எதனை ஈடாகப் பெற முடியும். சுமார் மூன்று லட்சம் ஈழத் தமிழர்கள் வாழும் இங்கிலாந்தில் சுமார் ஐம்பதினாயிரம் மக்கள் தான் வருகிறார்கள் அதுவே போதாதென்பேன் நான்.

இன்னும் நாம் மாவீரகளுக்கு செய்ய ஒன்றுண்டு 'தமிழீழப் போரில் இனிமேலும் ஓயோம்.' என்ற உறுதி மொழியை மனதில் இருத்தி செயலில் காட்ட வேண்டும் அதுவே மாவீரர்களுக்கான எமது கைமாறு.டி

அறிவியல் தகவல்கள்

சி.மாசிலாமணி
(ஒரு பேப்பருக்காக)

தேனீரும் காப்பியும்

காப்பி, தேயிலை, கோலா, கொக்கோ ஆகிய நான்கையும் இயல்பாக வளரவிட்டால் மரங்களாக வளரக் கூடியவை. இவற்றுள் தேயிலை மரத்தை மட்டும் அதன் குருந்தை எளிதாகக் கொய்வதற்காகவும் குருந்து உற்பத்திக்கு தேவையான கிளைகளை அதிகரிக்க வேண்டிய தேவை உள்ளதாலும் 3 அடிக்குமேல் நாம் வளர விடுவதில்லை. எம் கண்ணுக்கு அது எப்பவும் செடிதான். காப்பி மரத்தின் வளர்ச்சியையும் அதன் இருவிதைப் பழங்களை சௌகரியமாக பறிக்க வசதியாக ஒரு அளவுக்குமேல் வளர விடுவதில்லை. இவை நான்கும்தான் ஓர் ஆண்டில் உலகுக்குத் தேவைப்படும் ஒரு இலட்சத்து இருபதினாயிரம் தொன் காபெயின் (caffeine) என்னும் உடல் உசார்ப் படுத்தியின் உற்பத்திக்கு முக்கிய பங்கு வகிக்கின்றன. காபெயினின் மூலக்கூறு $C_8H_{10}N_4O_2$. இது 70க்கு அதிகமான தாவரங்களில் ஒட்டுண்ணி எதிர்ப்பியாகக் காணப்படுகிறது. ஆனாலும் மேற்கூறப்பட்ட நான்கு மரங்களுமே எமக்கு முக்கியமானவை. 100 மில்லி காப்பியில் 40 முதல் 70 மி கிராமும், பதனிடப்பட்ட கறுப்பு தேயிலையில் 20 மி கிராமும், பச்சை தேயிலையில் 10 மி கிராமும், பெப்சியிலும் கொக்கா கோலாவிலும் 10க்கு சற்று கூடுதலாகவும் உள்ளது. ஆதே அளவு சொக்கிலற் பாலில் ஆக 3 மி கிராமே உள்ளது. ஆனாலும் 100 கிராம் கறுப்புச் சொக்கிலேற்றில் 35 மி கிராம் காபெயின் உண்டு.

சோம்பல் ஏற்படும் சமயங்களிலும் கடும் வேலைக்குப் பின் உடல் சற்று சோர்வாக இருக்கும் வேளைகளிலும் காப்பியையும் தேநீரையும் நாம் நாடுகின்றோம். அளவான காபெயின் உபயோகம், கர்ப்பவதிகள் உட்பட எவருக்கும் எவ்விதக் கேட்டையும் விளைவிக்காது என்று மருத்துவ அறிக்கைகள் கூறுகின்றன. அளவோடு காப்பி தேநீரைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகளைப் பாக்கும்போது காப்பி தேநீர் குடிப்பதை த்விர்ப்பது புத்திசாலித்தனம் அற்ற செயல் என்றுதான் சொல்ல வேண்டும். ஒப்பிடும்போது காப்பியைவிட தேயிலை சிறந்தது. இரண்டிலுமே உயிர்வளி ஏற்ற எதிர்ப்பிகள் (antioxidants) உள்ளன. செரிப்பை ஊக்குவிக்கும் தன்மை உள்ளது. வயிற்றோட்டத்தைக் கட்டுப்படுத்தும் தன்மையும் உண்டு. இஞ்சித் தேநீர் உடற் சளி அகற்றவும், தேன் தேநீர் உடற்பருமன் குறைக்கவும் உதவும். அதைவிடத் தேநீருக்கு குருதியில் உருவாகும் கொழுப்பினி (cholostol), குருதி அழுத்தம் குருதிச்சர்க்கரை ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் தன்மையும் உண்டு. அதனுடன் உடலுக்குச் சில துகள் மூலகங்கள் (trace elements) தேவை. மங்கனிஸ், துத்தநாகம், குறொமியம், செலேனியம் ஆகிய துகள் மூலகங்கள் தேயிலையில் உண்டு.

எமது உடலுக்கு நாளாந்தம் தேவைப்படும் நீரின் ஒரு பகுதி காப்பியாகவும் தேநீராகவும் எம் உடலைச் சென்றடைகிறது. அவை இரண்டுமே சிறுநீரக ஊக்கிகள். அதனால் அவற்றுடன் செல்லும் நீர் தாமதிக்காது வெளியேறிவிடும். அதனால் காப்பி தேநீர் குடிப்பவர்கள் உடற் தேவைக்கு ஒன்றரை லீற்றர் தேவை என்றால் அதற்கு சற்று அதிகமாக நீர் குடிக்க வேண்டும். அப்படிக் குடிக்காது விட்டால் உடலுள் நீர் பற்றாக்குறை ஏற்பட்டு மலச் சிக்கல் ஏற்படலாம். நீர் கூடக் குடித்து உடலின் சம்பந்தப்பட்ட உறுப்புக்கள் ஊடாக மேலதிக நீர் வெளியேறுவதால் நன்மை உண்டு. கழிவுப் பொருட்கள் தேங்கி பித்தநீர்ப்பை கற்கள் போன்றவை உருவாகுவதைத் தவிர்க்கலாம்.

காலையில் வெறு வயிற்றில் காப்பி குடிப்பதால் அது உடல் முழுவதும் சென்று உடலுள் அமிலத்தை ஏற்படுத்துமென்று அதைத் தவிர்க்கச் சொல்லுகிறார்கள். தேவைக்கதிகமாக தேநீர் காப்பி அருந்துவது தீங்கு. நாளாந்தம் 2 கோப்பை காப்பி, 4 கோப்பை கறுப்பு தேயிலை தேநீர் 8 கோப்பை பச்சை தேயிலை தேநீர் என்று காபெயின் 300 மி கிராமுக்கு கூடாமல் ஒரு வரையறை இடுகிறார்கள் இந்த வரையறை ஆளுக்காள் கூடிக் குறையலாம். ஆனால் நிச்சயம் அந்த அளவை மீறினால் உடலுக்குப் பாதிப்புதான். காபெயினில் தங்குநிலை, தூக்கம் இன்மை, தலைவலி, வயிற்றுக்கோளாறு, நரம்புத் தளர்ச்சி, எலும்பு பலம் குன்றல் என்று விளைவுகள் கூடிக்கொண்டே போகும். உடலுக்கு நன்மை தரும் ஒரு பொருளை நாமாகவே தேவைக்கு அதிகமாக எடுத்து எமது உடலுக்கு பாதிப்பை ஏன் ஏற்படுத்த வேண்டும்.

வாழ்க்கைத் துணை

இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-438-7855

email: info@orumanam.com

மணமகள் தேவை

1. 26 years, 5'10", Finansial Sector, British Citizen, looking for a educated bride. Ref: 1825

2. 30 வயது 5'9", Self Employed, Norwayஇல் வசிக்கும் மணமகன் ஐரோப்பிய நாட்டு குடியுரிமை பெற்ற மணமகளைத் தேடுகின்றார். Ref: 2249

3. 31 years, 5'8", Engineer, Student visa in UK, looking for a educated bride with citizenship. Ref: 2440.

4. 31 வயது, 5'7", Self Employed, செவ்வாய் குற்றம் பிரித்தானிய பிரஜா வுரிமை பெற்ற மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 2395

5. 25 years, 6", fast food chain assistant manager, UK PR, looking for a suitable bride. Ref: 2327

6. 27 years, 5'7", Engineer, PSW visa in UK, seeking a suitable bride. Ref: 1013

7. 33 வயது 5'2" கடந்த 13 வருடங்களாக பிரித்தானியாவில் வசிக்கும் ஒரு Private Companyஇல் வேலை செய்யும் மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 2303

8. Age 29, tall 5.4 British citizen accountant looking for a suitable bride Ref: 1130

9. Age 36, tall 5.4 British citizen, Engineer at present doing a Business looking for a suitable Bride Ref: 2149

10. Age 30, 5'7", Doctor, Danish Citizen, looking for a well educated bride. Ref: 1729.

11. வயது 26, 5'11", Personal Banker, பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகன் நன்கு படித்த தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1807

12. Age 36, 6", MSc finished, British Citizen, well employed, looking for a matching bride. Ref:1191.

13. வயது 37, 5'9", A/L finished, PR in France, தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 972.

14. Age 27, 5'9", BSc in Computer Engineer, Student visa in UK, looking for a matching bride. Ref: 1856.

15. வயது 31, 5'6", A/L finished, பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1837.

16. வயது 31, 5'6", A/L finished, பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1784.

17. வயது 30, 6", BSc Graduate, UK PR, இலங்கையில் வசிக்கும் தகுந்த மணப்பெண்ணைத் தேடுகின்றார். Ref: 2012

18. Age 29, 5'9", MSc in IT, Student Visa in UK, looking for a matching bride with UK PR or citizenship. Ref: 1919

19. 37 years, 5'10", working in a retail profession, British Citizen, looking for a matching bride. Horoscopes should be matched. Ref: 1728

20. 31 years, 5'7", Doctor, British Citizen, looking for a well educated bride. Ref: 1680

21. வயது 32, 5'2", Student visa இல் பிரித்தானியாவில் வசிக்கும், செவ்வாய் குற்றம் உடைய மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 636.

22. வயது 25, 6'0", துபாயில் வசிக்கும் மணமகனுக்கு ஐரோப்பிய பிரஜா வுரிமை பெற்ற தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 1528

23. Age 25, 5'6", HMD Business student, student visa in UK, looking for a matching bride with UK PR or Citizenship. Ref: 1703

24. வயது 31, 5'5", இலங்கையில் கல்விக் கோட்டத்தில் வேலை செய்யும் வாய் பேச முடியாத மணமகனுக்கு தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 1656

25. வயது 31, 5'7", பிரித்தானியாவில் நிரந்தர வதிவுடமை பெற்ற மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 686

26. 24 years, 5'9", IT Student, student visa in UK, looking for a suitable bride. Ref: 1672

27. 35 years, 5'11", Uk PR, Self-Employed, seeking a matching bride. Ref: 1693

28. 37 years, 5'6", Computer Science Graduate, British Citizen, Divorced, looking for a suitable bride with UK citizenship. Ref: 1684

29. வயது 48, 5'7", Self-Employed, UK PR, மணமகன் தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 1694.

30. வயது 52, 5'7", widowed, இலங்கையில் வசிக்கும் மணமகன் சிறந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1699

31. Age 31, 5'7', working as Project Manager in a leading company in UK, British Citizen, seeking a suitable bride. Ref: 575.

32. வயது 28, 5'4", Medical sector, இந்திய பிரஜாவுரிமை பெற்ற மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1565.

33. வயது 35 5'5", BA Graduate, பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1480.

34. Age 35 5'7", self employed, French Citizen, seeking a suitable bride. Ref: 1444.

35. வயது 40, 5'7", Accountant, பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1457.

36. துபாயில் வசிக்கும் வயது 28, 5'5", மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1602

37. வயது 32, 5' 7", UK PR, looking for a suitable bride. Ref: 1526.

38. வயது 30, 5'6", Accountant, அவுஸ்திரேலியன் PR பெற்ற மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார் Ref: 1413.

39. Age 30, height 5.5" in Sri Lanka, a farmer looking for a suitable bride Ref: 1323

40. Age 28, height 6.0" Engineer working in UK in a company with the work permit visa looking for a suitable bride Ref: 1316

41. Age 35, height 5.11" British Citizen, Engineer woking in a company looking for a suitable bride Ref: 1332

42. Age 30, height 5.5" Engineer working in UK with Work permit visa looking for a suitable bride Ref: 1355

43. Age 38, height 6.0" living in Canada, looking for a suitable bride Ref: 1407

44. Age 28, height 5.9" Canadian Citizen, Graduate is looking for a suitable bride Ref: 1339

45. Age 32, height 5.11" Marine Engineer currently studying in Cyprus looking for a matching bride Ref: 1356

மணமகன் தேவை

1. 25 வயது, 5'6", BA finished, British Citizen, நன்கு படித்த தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 2495

2. 31 years, 5'4", Architect & self *employed, German Citizen, living* in UK, looking for a well educated groom. Ref: 589

3. 29 years, 5'2", Accountant Student, French Citizen, looking for a educated groom. Ref: 881

4. 25 வயது, 5'6", கொழும்பில் பல்கலைக் கழகத்தில் பணிபுரியும் மணமகள் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 2273

5. 28 வயது, 5'2", இலங்கையில் ஆசிரியராக பணிபுரியும் பெண்ணுக்கு பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகனைத் தேடுகின்றனர். Ref: 2392

6. 30 வயது, 5'6", A/L finished, கணவனை இழந்து ஒரு குழந்தையுடன் இலங்கையில் வசிக்கும் பெண்ணுக்கு தகுந்த துணையை எதிர்பார்க்கின்றனர். Ref: 2496

7. 50 வயது, 5'6", Finished Hotel Management in Colombo, இலங்கையில் வசிக்கும் பெண்ணுக்கு தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 804

8. 49 வயது, 5'6", Finished Hotel Management, Canadian Citizen, பெண்ணுக்கு தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 805

9. 41 years, 5'4", Doctor, Living in Sri Lanka, looking for a educated groom anywhere. Ref: 1514

10. 43 years, 5'1', A/L finished, Living in UK, looking for a suitable groom with UK PR or Citizenship. Ref 2119

11. Age 29, 5'5", working as a Financial Analyst, British Citizen, looking for a well educated groom. Ref: 2175.

12. Age 27, 5'6", Investment Banker, British Citizen, looking for a educated and professional groom. Ref: 1722.

13. Age 28, 5'5", Doctor, British Citizen, seeking a well educated groom. Ref: 1780.

14. வயது 24, 5'3", BSc Degree holder in Mathematics & statistic, இலங்கையில் வசிக்கும் செவ்வாய் குற்றம் உடைய பெண் பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகனைத் தேடுகின்றார். Ref: 1243.

15. வயது 37, 5'3", MSc in IT, பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற மணமகள் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 895.

16. வயது 28, 5'5", Financial Officer ஆக இலங்கையில் வேலை செய்யும் மணப்பெண்ணுக்கு ஐரோப்பாவில் தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 2027

17. வயது 29, 5'7", MSc in Financial Mathematics, இலங்கையில் Bank Of ceylonஇல் வேலை செய்யும் மணமகளுக்கு தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 1871

18. வயது 33, 5'3", A/L finished, இலங்கையில் வசிக்கும் விவாகரத்து பெற்ற மணமகளுக்குத் தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 1782

19. வயது 36, 5", A/L finished, இலங்கையில் தினக்குரல் பத்திரிகையில் வேலை செய்யும் பெண்ணுக்கு பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற துணையைத் தேடுகின்றனர். Ref: 1942

20. வயது 46, 5'6", பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற, குழந்தையுடன் வசிக்கும் விவாகரத்து பெற்ற பெண்ணுக்கு தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 1845

21. Age 32, 5'6", Teacher, French Citizen, looking for a matching groom. Ref: 1954.

22. 21 years, 5'3", Information technology in IT, living in India, seeking a matching groom in UK with citizenship. Ref: 1686

23. வயது 30, 5'4", A/L finished, இலங்கையில் வசிக்கும் பெண்ணுக்கு, பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1551

24. வயது 23, 5'3", A/L finished, இலங்கையில் வசிக்கும் பெண்ணுக்கு UK Citizen பெற்ற மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1697

25. 25 years, 5'1", BA Graduate, PR in UK, seeking a suitable grrom. Ref: 1580

26. வயது 25, 5'6", இலங்கையில் வசிக்கும் பெண் தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1696

27. வயது 29, 5'4", Doctor, இலங்கையில் வசிக்கும் மணமகள் பிரித்தானிய பிரஜாவுரிமை பெற்ற தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1695

28. 41 years, 5'5", MSc in computing, British Citizen, looking for a matching groom. Ref: 1678

29. Age 38, 5'7", working in financial sector, Canadian Citizen, looking for a matching groom. Ref: 1595.

30. வயது 23, 5'2", Medical Student, British Citizen, தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1408.

31. Age 25, 5'2", Pharmasist, British Citizen, looking for a educated groom. Ref: 1531.

32. வயது 28, 5'4", BSc Degree Holder, இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகள் நன்கு படித்த தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1596

33. Age 25, 5'2", Computer Engineer, Danish Citizen, looking for a educated groom. Ref: 1527.

34. வயது 25, 5'0", தற்பொழுது France இல் வசிக்கும் பெண்ணுக்கு, ஐரோப்பிய பிரஜாவுரிமை பெற்ற தகுந்த துணையைத் தேடுகின்றனர். Ref: 1475.

35. வயது 27, 5'2", இலங்கையில் Administrative Assistant ஆக வேலை செய்து கொண்டிருக்கும் மணமகள் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1459.

36. வயது 25, 5'0", இலங்கையில் வசிக்கும் பெண் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1525.

37. Age 43, 5'2", working in a University in Sri Lanka, looking for a suitable grrom. Ref: 1246.

38. வயது 27, 5'1", graduate degree holder, இலங்கையில் வசிக்கும் பெண் தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1433.

39. Age 24, 5'9", BA finished in Jaffna univercity, looking for a suitable groom. Ref: 1599

40. இலங்கையில் வசிக்கும் வயது 30, 5'5", Nurse, மணமகள் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1598.

41. Age 37, height 5.5" Doctor working in a Jaffna Hospital looking for a suitable Groom Ref: 1063

42. Age 38, height 5.6" Canadian Citizen, Engineer working in a company looking for a suitable Groom Ref: 1322

43. Age 35, height 5.6" French Citizen, in UK Divorcy working as a sales assistant looking for a suitable Groom Ref: 610

44. Age 28, height 5.0" in India looking for a suitable Groom Ref:1347

45. Age 27, height 5.2" British Citizen Accountant working in a company looking for a suitable Groom Ref:1348

46. Age 32 height 5.3" Sri Lanka, finished diploma in Psychology looking for a suitable Groom Ref:1391

47. Age 28, height 5.7" in UK worked as a English teacher in Sri Lanka looking for a suitable Groom Ref:1406

48. Age 30, height 5.7" British citizen, Graduate and working as a Biochemist looking for a suitable Groom Ref:627

49. Age 22, height 5.2" British citizen, Graduate looking for a suitable groom Ref: 1408

50. 24 வயது, 5'3", BSc Degree holder in Mathematics, படித்த, இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற செவ்வாய் குற்றமுள்ள மணமகனைத் தேடுகின்றார். Ref: 1243.

51. 28 வயது, 5'0", மணமகள் தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1222

52. 41 years, 5'5", finished MBA in UK, seeks an educated groom. Ref: 1230.

53. 38 வயது, 5'4", Doctor in UK, நன்கு படித்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1232

54. 43 years, 5'2", working at univercity in sri Lanka, is looking for a grrom with Europe Citizenship. Ref: 1246.

55. 46 வயது, 5'2", British Citizen, divorcee, தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1216

56. இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற 28 வயது, 5'2" உயரம், BSC Degree in Computer Science & Business Management படித்த பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1160.

57. இலண்டனில் படித்துக் கொண்டிருக்கும் 22 வயது, 5" உயரம் உள்ள பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1040.

58. Accountant, British Citizen, 28 age, 5'5" tall, is looking for a well educated groom. Ref: 1102.

இணையத்தில்
மேலதிக விபரங்கள்
www.orumanam.com

முகத்தார் எஸ்.யேசுரட்ணம் நினைவுகூரல் குறிப்பு

அ.இரவி
(ஒரு பேப்பருக்காக)

எப்போதும் பெரிய இடர்பாடு வருகிறபோதும் ஒரு வாக்கியம் என் காதில் சடாரென ஒலிக்கும். 'எக்கணம் பெரிய வில்லங்கம் வரப் போகுது' தமிழில் நல்ல திரைப்படங்களில் ஒன்றான வாடைக்காற்று திரைப்படத்திலேயே இவ்வாக்கியம் ஒலித்தது. ஒலித்தவர் முகத்தார் எஸ். யேசுரட்ணம். கள்ளுக் கொட்டிலில் பிளாவில் கள்ளு நிறைத்தபடி குறைச் சுருட்டு வாயிலிருக்க யேசுரட்ணம் இந்த வாக்கியம் சொன்னார். இனி இந்த வாக்கியம் மட்டுமல்ல வேறெந்த வாக்கியமும் உரைக்க முடியாதபடி அவரது வாய் ஒய்ந்து விட்டது.

1978ஆம் ஆண்டு வெளியான திரைப்படம் வாடைக்காற்று. அதற்கு மூன்று வருடங்கள் முன்னரே அடக்க முடியாத சிரிப்புடன் அவரை நான் அறிந்து கொண்டேன். அப்போது செவ்வாய் வியாழன் நாட்கள் எனக்குப் பிடிப்பதில்லை ஒரு நாளைப் பிடிக்காமல் போவதற்கு என்ன காரணம் இருக்க முடியும்? ஒரு காரணமல்ல பல காரணங்கள் முக்கிய காரணம். அந்த இரண்டு நாட்களும் ஆங்கிலப் பாடம் இரண்டு பாட வேளையாக (Double Period) படிப்பிக்கப்பட்டது. அன்பும் கருணையும் கொண்ட பெனடிக் வாத்தியார் தான் அதைப் படிப்பித்தார். அன்பும் கருணையும் வேறு விடயங்களில் தான். அவை ஒளிந்து போய் விட அவர் வகுப்புக்கு வரமுன்னம் கோபம் முன்வந்து ஆசிரியர் கதிரையில் அமர்கிறது.

பிரம்பு சிதைந்து, மாந்தடி சிதம்பி, கைகளாலும் அவரிடம் நான் அடி வாங்கின வியாழன் நாள், மேலில் தெறித்த தளும்பு அப்பா அம்மாவுக்கு தெரியக் கூடாதென்று சேட் போட்டு வேர்வையுடன் உலாவினேன். அன்று என் அழுகையையும் நோவையும் ஆற்றுப்படுத்தினார் ஒருவர். அவர் யேசுரட்ணம். ஆனால் அது அவருக்குத் தெரியாது. வியாழன் பின்னேரம் ஏழு மணிக்கு என் எல்லா நோவையும் மறந்து வாய் விட்டு சிரித்தேன். அந்நன்றி சொல்ல நான் ஒருபோதும் அவரைச் சந்தித்ததில்லை ஆனால் இப்போது யேசுரட்ணத்தின் சாவையொட்டி மனதால் துக்கிக்கிறேன்.

அம்மா அப்பா அக்காமார் என என் குடும்பத்தில் நால்வர் இந் நால்வரையும் செவ்வாய் வியாழன் பின்னேரம் ஏழு மணியளவில் ஒருவர் தம்மருகே அழைத்துக் கதை சொல்லி குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைத்தார். அவர் முகம் கண்டதில்லை, உடல் பார்த்ததில்லை, குரலொன்று மாத்திரமே எங்களை அவரருகில் இழுத்து வந்தது. அந்த வசியம் செய்ய எத்தனை திறமை வேண்டும்.

அப்போதைய இலங்கை வானொலி தமிழுக்குப் பெரும் பலம். தமிழுக்கு ஈழம் செய்த வளம் என்றால் சில பெயர்கள் வரிசைப்படும். நவாலியூர் சோமசுந்தரப் புலவர், ஆனந்தக் குமாரசாமி, சுவாமி விபுலானந்தர், ஆறுமுக நாவலர், சி.வை. தாமோதரம்பிள்ளை, மகாகவி, வண. பிதா. தனிநாயகம் அடிகளார், பேராசிரியர்கள் கைலாசபதி, சிவத்தம்பி, அ.தாசீசியஸ் பி. எச். அப்துல் ஹமீட்.... என்று இன்னமும் பெயர்கள் இருக்கின்றன

அவ்வாறே தான் தமிழுக்கு வளம் சேர்த்தது இலங்கை வானொலியின் தமிழ்ச் சேவை. அதனுள்ளே இருந்து சேவையாற்றிய கலைஞர்கள் பலர். மயில்வாகனம் தொட்டு அப்துல் ஹமீட் வரை அப்பெயர் வரிசை மிக நீளம். ஆனால் வெளியிலிருந்த இருவர் இலங்கை வானொலியில் தமிழ்ச் சேவை சிறக்கப் பணி செய்தனர். ஒருவர் கே.எஸ் பாலச்சந்திரன் மற்றயவர் முகத்தார் எஸ் யேசுரட்ணம்.

செவ்வாய் வியாழன் பின்னேரம் ஏழு மணிக்கு 'முகத்தார் வீடு' வின் முற்றத்துப் படலை திறக்கப்படும் அந்தக் கரகரத்த கிழட்டுக் குரல் கேட்கிற போது அம்மா சிரிக்க ஆயத்தமாகி விடுவார். அச் சிரிப்பு மெள்ள மெள்ள என்னிலும் அக்காவிலும் பரவும். கெக்கட்டமிட்ட சிரிப்பு அல்ல அப்பாவினுடையது. எந்தப் பெரிய பகிடிக்கும் அப்பாவிடம் வருவது புன்சிரிப்பு ஒன்றே. அப்புன் சிரிப்பையும் உடைத்து கொஞ்சம் பெரிய சிரிப்பை அப்பா தவழவிட்டார் என்றால் அதன் காரணம் எஸ். யேசுரட்ணம் அவர்களே.

அளவெட்டியில் எங்கள் வீட்டில் இருந்து ஒரு மைலுக்குள் இருந்தது இளவாலையில் அவரது வீடு ஆனால் அயலில் அவரை நான் ஒருபோதும் கண்டதில்லை. வாடைக்காற்றுத் திரைப்படத்திலேயே தான் அவரை முதலில் கண்டேன். ஆனால் அவரது முகத்தார் வீடு நாம் கண்ட கேட்ட அறிந்த மனிதர் பலரைச் சொன்னது. 'முகத்தார் வீடு' வில் அவர் அடிக்கடி அளவெட்டிக்கு வருவார். அதுவே எனக்குப் பெரும் புழுகம்.

எல்லாச் சூழலும் அவரை எப்படியோ பலவற்றிலிருந்தும் அப்புறப்படுத்தியது அல்லது புறந்தள்ளியது. இலங்கையில் நிகழ்ந்த இனவன்முறைக் காற்று சருகாக்கி அவரை அலைக்கழித்தது. ஈற்றில் பிரான்சை அவர் தங்கும் நிலமாக்கினார்.

பிரான்சும் இத்தகைய கலைஞர்களை பேணுவதிலும் உருவாக்குவதிலும் பின்னிற்பதில்லை யேசுரட்ணம் அவர்களுக்கு ஓர் உகந்த இடம் தான் அது.

யேசுரட்ணம் அவர்களை இறுதியாக நான் ரசித்தது எப்போது? அது அச்சொட்டாக ஞாபகமிருக்கிறது 'ஊஞ்சல் ஆட' என்ற யேசுரட்ணத்தின் குரல் கேட்டால் நான் எங்கிருந்தாலும் ரீ.ரீ. என். தொலைக் காட்சியின் முன் வந்து விடுவேன். யேசுரட்ணம் அவர்களில் பரம ரசிகன் நான்.

பாரிஸ் லாசப்பலில் ஓர் இறைச்சிக் கடைக்கான விளம்பரம். இறைச்சிக்கான ஆட்டைப் பிடிப்பதற்காக கயிற்றுடன் யேசுரட்ணம் ஓடுவர் இடை மறித்த தயாநிதி கேட்பார் 'ஏன் கயிறு' என்கிற மாதிரி. யேசுரட்ணம் எரிச்சலுடன் சொல்வர் 'ஊஞ்சல் ஆட' எப்போதும் இதைப் பார்த்தாலும் என் சிரிப்பு புதிதாகவே இருக்கும்

மகத்துவமான ஈழத்துத் தமிழ்க் கலைஞர்களில் முகத்தார் எஸ் யேசுரட்ணம் முக்கியமான ஒருவர் இவரது சாவு நெஞ்சை அறுக்கிறது. அவருக்குரிய மரியாதை சரி வர கொடுபடவில்லையோ என்றும் வேதனை உருகிறேன். ஐயா நாங்கள் பல பேர் உங்கள் கலையாளுமையை நினைவில் கொள்வோம் என்பதை நம்பி போய் வாருங்கள்.

தம்மைத் தொடர்கின்ற போர்...

போர்க்களங்களில் தீர்வுகள்
இலகுவாகிவிட்டன

நீயும் நானும் பெற்றெடுக்கும்
குழந்தை உயிர் துறக்கப்
போகும் இந்தப்போர்க்களம்
நம்மோடு முடிந்துபோகட்டும்

விமானங்கள் மனங்களை
தீர்மானித்து விட்டன

மிகக்கொடூரமான
அனுபவத்திலிருந்து ,நமது
விமானங்கள் எழும்புகின்றன

எனது காயத்திலிருந்து
வெளியேறுகிற குருதி
காவலரணை கழுவுகிறது...

YOUR CHILD
BANA TUTORS
YOUR CHOICE

Location: Croydon
- English & Maths Classes
- Special Summer Class For Eng & Maths
- Special Sunday Classes For 11+ Exams

Franchise Opportunities
Location: Eastham, Illford, Wembley, Leyton, Barking, Lewisham and many more.

- Do you like Teaching ?
- We can train you to teach Eng/Maths!
- Min Qualification: A level or equivalent!
- Be Your own Boss and work 25 hours a week!

Earn upto £1000 pw!

Zermatt Road,
Thornton Heath,
Croydon - CR7 7BL

For Details please call
020 8683 0153
079 4987 3691
info@banatutors.co.uk



எப்பொழுதும் நியாயமான விலை புத்தம் புது டிசைன்கள்
எங்களிடம் நகை வாங்கும் அனைவருக்கும்
ஆச்சரியப் பரிசுகள் உண்டு
உங்கள் அபிமானம் பெற்ற
ரதி ஜுவல்லரி
இப்பொழுது டூட்டிங்
கிளையிலும் தொடங்கப்பட்டுள்ளது.

The leading Jewellery store in London with the largest selections including Diamond Jewellery, Thalli kodi and all student jwellers.

Wembley Branch: 28, Ealing Road, Wembley, Middlesex HA0 4TL. Tel : 0208 903 3063
Tooting Branch: 209 Upper Tooting Road, Tooting SW17 7TG Tel : 0208 682 2233

பாரதிராஜா முதல் மிஷ்கின் வரை

பாரதிராஜாவுக்கும் நடிக்க வேண்டும் என்கிற ஆசை இருந்திருக்கிறது. தான் இயக்கிய ஆறாவது படத்தில், அந்த ஆசையை நிறைவேற்றிக் கொண்டார். படம் : கல்லுக்குள்ஈரம். ஆனால்படம் மிகப்பெரியதோல்வி. அவர் நடிப்பதையும் ரசிகர்கள் விரும்பவில்லை. அவருக்கும் தனது பலம், பலவீனம் புரிந்திருகக்கூடும். கௌரவமாக தனது தோல்வியை ஏற்று கொண்டு, நடிப்பதை விடுத்து இயக்கத்திலேயே தன் கவனத்தை செலுத்தினார். நாமும் பல சிறந்த காவியங்களை பெற்றோம். ஒரு வேளை அவர் பிடிவாதமாக நடிக்கத் துவங்கி இருந்தால், நாம் ஒரு சிறந்த இயக்குனரை இழந்திருப்போம்.

இந்த வரிசையில் அடுத்து கே.பாக்யராஜ் பாரதிராஜா மூலம் கதாசிரியராகவும், கதாநாயகராகவும் அறிமுகப்படுத்தப்பட்டார். முதல் படம் இயக்க வாய்ப்பு கிடைத்ததும், வேறு ஒருவரை கதாநாயகனாக போட்டு, பாக்யராஜ் இணை நாயகனாக நடித்தார். ரசிகர்கள் தன்னை ஏற்பார்களா என்கிற அச்சத்தில். பிறகு ஒரு கை ஓசை என்ற படம் துவங்கி, எங்க சின்ன ராசா வரை கிட்டத்தட்ட பனிரெண்டு படங்கள், அவர் இயக்குனராக மற்றும் நடிகராக வெற்றி பெற்றார். இயக்குனராக, நடிகராக மக்கள் அவரை ஏற்றுக் கொண்டிருந்தார்கள்.

பின்னாளில், அவரை மக்கள் நிராகரித்த போதும் விடாப்பிடியாக நடித்தார். விளைவு, எந்த படங்களும் பெரிய வெற்றி பெறவில்லை. ஒரு வேளை பாக்யராஜும், நடிப்பதை விடுத்து இயக்கத்தில் மட்டும் கவனம் செலுத்தி இருந்தால், நாம் சில நல்ல படங்களை பெற்றிருப்போம்.

அடுத்து டி.ராஜேந்தர். பல இயக்குனர்கள்- நடிகராவது, பிரபலங்கள் நடிக்க மறுக்கும்போது, அந்த பாத்திரத்தை சவாலாய் எடுத்து இயக்குனர்களே நடிப்பது. அந்த வகையில் டி.ராஜேந்தரின் உயிருள்ளவரை உஷா என்கிற படத்தில், செயின் ஜெயபால் என்கிற கேரக்டருக்கு சூப்பர் ஸ்டாரை அழைத்தார். ரஜினி மறுத்து விட்டார். பிறகு டி.ஆரே நடித்தார். அவரது தோற்றத்திற்கு, அந்த கேரக்டர் பொருந்தியதால் படம் மிகப்பெரிய வெற்றி பெற்றது. அந்த படத்தோடு அவர் நடிப்பதை விட்டிருக்கலாம். தமிழர்களின் கஷ்டகாலம் தொடர்ந்தது. நடித்தார். இதனால் டி.ராஜேந்தர் படங்கள் என்றாலே பேயை கண்டது போல் மக்கள் பயந்து ஓடினார்கள். இசையமைப்பாளராக, பாடலாசிரியராக இருந்த டி.ராஜேந்தரை எப்போதும் நினைவு கொள்வோம்.

அடுத்து விசு... மணல்கயிறு தொடங்கி கடைசியாக வந்த ரங்கமணி, சிகாமணி என்ற படம் வரை ஒரே மாதிரியே தான் தோன்றினார். தன்னை மையப்படுத்தாமல், குடும்ப பிரச்சனை கதைகளை மையப்படுத்தினார். குடும்ப கதை என்று வரும் போது, நடுத்தர வயதுள்ள ஒரு பாத்திரம் இருக்கும். அப்பா, மாமா, சித்தப்பா என்று அந்த பாத்திரத்தில் விசு இருப்பார். ஒரே மாதிரியான காட்சியமைப்புகளுடன் தான் எல்லா படங்களும் இருந்தாலும், அந்நாளில் அவர் படங்கள் மக்களால் நல்ல வரவேற்பு பெற்றது. அன்று திரைப்படங்களில் அலசியதை தான் இன்று அரட்டை அரங்கத்தில் அலசுகிறார். அதனாலேயே அரட்டை அரங்கம் ஆண்டுகள் பலவாகியும் இன்னும் தொடர்கிறது.

அடுத்து பாண்டியராஜன். பாக்யராஜின் உதவியாளர். இவருக்கும் நடிக்க ஆசை இருந்து இருக்க வேண்டும். ரசிகர்கள் ஏற்று கொள்வார்களா என்கிற தயக்கத்தினால், தனது இயக்கத்தின் இரண்டாவது படத்தில் பாண்டியனை கதாநாயகனாக்கி, இவர் இரண்டாவது கதாநாயகனாக நடித்த படம் ஆண்பாவம். படம் மிகப் பெரிய வெற்றி பெற்றது. ஆனால் இதற்கு பிறகு இவர் இயக்கி நடித்த எந்த படமும் மிகப்பெரிய வெற்றி பெறவில்லை. இயக்குகிற ஆசையை விட்டு விட்டு, நடிக்க துவங்கினார். அவரது உயரம், முழிக்கிற முழி, இயல்பான நகைச்சுவை, கிட்டத்தட்ட ஐம்பது படங்களில் கதாநாயகனாக நடித்தார்.

அடுத்து பார்த்திபன். இவரும் பாக்யராஜின் உதவியாளர். தனது புதியபாதை படத்திற்கு, எந்த பிரபலமும் கால்ஷிட் தராததால் தானே கதாநாயகனாக நடித்ததாக சொன்னார். பெரிய வெற்றி பெற்றார். புதியபாதை திரைப்படக்கதைக்கு அவர் பொருத்தமானவராக இருந்தார். நடித்தார். இரண்டாவது படமெடுக்கும் போது, சிறந்த கதை என்கிற நோக்கத்தை விட்டு, தன் உருவத்திற்கான கதை என்று தேடிய போதே சறுக்கி விழுந்தார்.

அடுத்து ராஜ்கிரண். என் ராசாவின் மனசிலே படத்தின் தயாரிப்பாளர். கஸ்தூரிராஜா இயக்கிய அந்த படத்தில் நடித்தார். இளையராஜா புண்ணியத்தில் படம் மிகப் பெரிய வெற்றி பெற்றது. பிறகு ராஜ்கிரணுக்கு இயக்கும் ஆசையும் வந்து இரண்டு படங்களை இயக்கினார். அரண்மனைக்கிளி, எல்லாமே என் ராசா தான் இந்த படங்களும் இளையராஜாவின் புண்ணியத்தில் ஓடியது. ஐம்பது வயதை நெருங்கியவரை எத்தனை நாளைக்கு ரசிப்பார்கள்.

ராமராஜனை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். இயக்குனராக அறிமுகமானார். பிறகு வாய்ப்பு குறைந்ததும் ஹீரோவானார். சில வருஷங்கள், வெற்றிகரமான நடிகராக உலா வந்தார். வாய்ப்பு குறைந்ததும், அவரே படங்கள் தயாரித்து, இயக்கி நடித்தார். பார்க்கத்தான் ஆளில்லாமல் போனார்கள்.

இந்த வரிசையில் எஸ்.ஜே. சூரியா வாலி, குஷி படங்களை இயக்கியவர். நியூ திரைப்படத்தை அஜித் நடிக்க ஆரம்பித்தார். இயக்குனராகவும் பிரகாசிக்க முடியாமல், நடிகராகவும் பிரகாசிக்க முடியாமல்... இப்படியும் சிலரின் நிலை ஆகி உள்ளது.

அடுத்து சேரன். இயக்குனராக வெற்றி பெற்றவரை, தங்கர் பச்சான் நடிகராக்கினார். சொல்ல மறந்த கதை மூலம். பிறகு தான் இயக்கிய ஆட்டோகிராப் படத்தில் நாயகன் ஆனார். பிரபலங்கள் கால்ஷிட் தர யோசித்ததால் தானே நடித்ததாக சொன்னார். வெற்றி பெற்றார். பிறகு தவமாய் தவமிருந்திலும் வெற்றி பெற்றார். பிறர் செய்த தவறையே சேரனும் செய்தார். தன் தோற்றத்திற்குரிய கதை தேடினார். மாயக் கண்ணாடி எடுத்தார். தோற்றார். விக் வைத்து நடித்தார். சிவாஜி காலத்திலா நாம் இருக்கிறோம். விக் வைத்த நாயகர்களை ரசிக்க. பொக்கிஷமும் நிறைவாக இல்லாமல் போனது.

பிரிவோம் சந்திப்போம். ராமன் தேடிய சீதை என்று பிற இயக்குனர்களின் படத்தில் கூட நன்றாக பயன் படுத்தப்பட்டார். இனி நடிப்பா... இயக்கமா... சேரன் என்ன முடிவில் இருக்கிறார். தமிழ் திரையுலகில் பாரதிராஜாவை தவிர வேறு எந்த இயக்குனரிலிருந்து நடிகரும் அந்த புத்திசாலித்தனமான முடிவை எடுக்கவில்லை. சேரனாவது எடுப்பாரா. தங்கர்பச்சான், சசிகுமார் என்று நடிக்கும் இயக்குனர்களின் பட்டியல் நீளுகிறது. இப்போது இயக்குனர்கள் கரு.பழனியப்பன் மற்றும் மிஷ்கின் நடித்திருக்கிறார்கள். இவர்களின் நடிப்பாசை தற்காலிகமானதா... நிரந்தரமானதா... பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

- தமிழ் உதயம்

The American

திரை விமர்சனம்



சுவீடனில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த ஒப்பந்தக் கொலைஞனான (George Clooney), அவனைக் கொலை செய்ய எடுக்கப்படும் ஒரு முயற்சியிலிருந்து அதிஷ்டவசமாக உயிர்பிழைத்துக் கொள்கிறான். இந்தக் கொலைச்சதியின் பின்னால் உள்ளவர்கள் யார் என்பதைக் கண்டறியும் பொறுப்பை தனக்கு ஒப்பந்தங்களை வழங்கும் பவேல் என்பவனிடம் ஒப்படைக்கும் ஜாக், சிறிது காலம் தலைமறைவாக இருப்பதற்காக இத்தாலியின் மலைக்கிராமம் ஒன்றிற்கு வந்து சேர்கிறான்.

Martin Booth எனும் நாவலாசிரியர் எழுதிய A Very Private Gentelman எனும் நாவலினைத் தழுவி, இயக்குனர் Anton Corbijn இயக்கியிருக்கும் The American திரைப்படமானது ஒரு பரபரப்பான அதிரடி த்ரில்லர் அல்ல. ஒப்பந்தக் கொலைகாரன் ஜாக், தலைமறைவாக வாழ்ந்திட வந்து சேரும் மலைக் கிராமத்தில் வாழ்ந்திருக்கும் அமைதியை திரைப்படமும் தன்னுள் இழுத்துக் கொண்டிருக்கிறது.

மலைக்கிராமத்திற்கு புதியவனாக வந்து சேரும் ஜாக், அக்கிராம மக்களால் அமெரிக்கன் என அழைக்கப்படுகிறான். காலையில் அவன் செய்யும் உடற்பயிற்சி முதல், மாலையில் சந்தேகப் பார்வையுடன் ஒடுங்கிய தெருக்கள் வழியாக நடந்து அவன் தன் வீடு திரும்புவதுவரை, ஜாக்கின் சந்தேகம் பீடித்த தினசரி வாழ்வின் உயிரற்ற தன்மையை படத்தின் மெதுவான ஓட்டம் கனமாக மாற்றியடிக்கிறது.

வழக்கமாக தனது காந்தக் கவர்ச்சியாலும், அதிசயிக்க வைக்கும் உடல் மொழியாலும் ரசிகர்களை தன் பக்கம் இழுத்துவிடும் க்ளூனி, பிறரை அதிகம் நெருங்காமல், உணர்ச்சிகளை வெளியே காட்டிக் கொள்ளாத கொலைஞன் வேடத்தில் இதைவிட சிறப்பாக செய்துவிட முடியாது. இருப்பினும் அவரது தீவிர ரசிகர்கள்கூட அவரின் இந்தப் பாத்திரப்படைப்பை முழுமையாக ஏற்றுக் கொள்வார்களா என்பது ஐயத்திற்குரிய ஒன்று. அந்தளவிற்கு உணர்வுகள் விறைத்த நடிப்பை திரைப்படத்தில் வழங்கியிருக்கிறார் க்ளூனி. ஒரு கொலைஞனின் நுட்பத்தைக் காட்டும் காட்சிகளாக, ஜாக் புதிதாக தயாரிக்கும் ஒரு துப்பாக்கி குறித்த கணங்களும், அத்துப்பாக்கியை ஒரு ஆற்றங்கரை அருகில் பிறிதொரு கொலைகாரியுடன் சோதித்துப் பார்க்கும் சந்தர்ப்பத்தையும் குறிப்பிட்டு சொல்லலாம். அதிலும் ஆற்றங்கரை அருகில் துப்பாக்கியை சோதித்துப் பார்க்கும் தருணங்களில் மனது திக்திக் என்கிறது.

மலைக்கிராமத்தின் மதகுருவானவர்க்கும், ஜாக்கிற்குமிடையில் ஆத்ம பரிசோதனைக்கான வாயில் ஒன்று திறக்கிறது. ஆனால் ஆன்மீக வழியில் பிராயச்சித்தம் தேடுவதற்குப் பதிலாக ஜாக் காதல் வழியாக தன் வாழ்வை காப்பாற்றிக் கொள்ள விருப்பம் கொள்கிறான். கிராமத்தின் விலைமாது ஒருத்தியுடன் ஆரம்பமாகும் நட்பு காதலாக உருக்கொள்ள ஆரம்பிக்கிறது. இந்தக் காதலிற்காக ஜாக் தன் கடந்த காலத்தை இழப்பானா என்பதும், ஜாக்கை கொலை செய்ய முயன்றவர்கள், முயல்பவர்கள் யார் என்பதும் திரைக்கதையை முன்னே நகர்த்திச் செல்கின்றன.

படத்தைப் பார்த்து முடிப்பதற்கு அசாத்திய பொறுமையும் தேவை. ஓரிரு தருணங்களை தவிர்த்து படத்தில் பரபரப்பிற்கு இடமில்லை. இப்படியாகவே கதை நகரும், இப்படியாகவே கதை முடியும் என்பதை இலகுவாக ஊகித்து விட முடிகிறது. கொலைஞனின் வாழ்வில் எல்லாக் கணங்களும் பரபரப்பாக இருப்பதில்லை ஆனால் அக்கொலைஞன் தீராத சந்தேகத்துடன் தன் நாட்களை பாரமாக சுமந்து செல்ல வேண்டியிருக்கிறது என்பதை படம் இயல்பாக உணர்த்த முயல்கிறது.

- கனவுக் காதலன்

NAG & Co.
SOLICITORS

Tel: 020 7737 1211 | Fax: 020 7731 1431
Email : nagandco@yahoo.co.uk
Unit 3 Holles House, Myattsfield south, London SW9 7JN
Nearest Underground - Brixton Station on Victoria Line and Oval Station on Northern Line

- ✓ CRIME
- ✓ CONVEYANCING
- ✓ MATRIMONIAL
- ✓ IMMIGRATION
- ✓ TRAFFIC MATTERS
- ✓ LANDLORD & TENANTS
- ✓ POLICE STATION MATTERS
- ✓ EMPLOYMENT MATTERS
- ✓ WORK PERMITS

தா

திரை விமர்சனம்

இந்த படம் பல தியேட்டர்களின் தூக்கப்பட்டாலும் இப்படியான திரைப்படங்களை நீங்கள் திருட்டு டிவிடியலாவது பார்க்கவேண்டும். மீண்டும் ஒரு சிறிய பட்ஜெட் படம். மூச்சு முட்டக்கூடிய அளவுக்கு திரைப்படங்கள் வெளியாகிக் கொண்டிருக்கும் நேரத்தில் இடுக்குகளில் கிடைக்கும் புதிய வெளிச்சமும், காற்றைப் போல இறுக்கத்தை குறைக்க சில படங்கள் வரத்தான் செய்கிறது.

'எனக்கு இன்னைக்கு கல்யாணம். இதோ பக்கத்துல உட்கார்ந்திருக்காளே என் பெண்டாட்டி. இவளை கட்டிக்க நான் எத்தனை பேரை உதைச்சிருக்கேன். என்னென்ன நடந்திருக்கு தெரியுமா' என்று கதை சொல்ல ஆரம்பிக்கிறார் சிறீஹரி. பின் நம் கையை பிடித்துக் கொண்டு ஓட்டமாய் ஓடுகிறது திரைக்கதையும் கலகலப்பான காட்சிகளும்.

தன் உருவத்தை பற்றியோ, அழகை பற்றியோ கவலையில்லாமல், ஒரு இரும்பு கம்பெனியில் வேலை செய்து விட்டு, நற்பணிமன்றம், நண்பர்கள், தண்ணி, பீடி என்றலையும் சாதாரணன். பெண்கள் விஷயத்தில் துளியும் ஆர்வமில்லாதவன். நிமிர்ந்தே பார்க்காதவன். முரடன். நண்பனின் தங்கை காதலிக்கும் ஆளை நண்பன் சொன்னதால் அடித்துவிட, வெகுண்டெழுந்த தங்கை, முரடனான உனக்கு பெண்களின் மனசை பற்றி என்ன தெரியும் என்று சொல்லி திட்ட, அது முதல் பெண்களை பற்றிய பார்வை மாறி, தானும் காதலிக்க ஆரம்பிக்க முயற்சி செய்யும் வேலையை ஆரம்பிக்கிறான். இவனின் ஆர்வம் தெரிந்து அவனுக்கு வீட்டில் ஒரு காலேஜ் படிக்கும் பெண்ணை பார்த்து முடிவு செய்ய, அவளின் அழகை பார்த்து பிரம்மித்து போகிறான் சூர்யா.. பார்த்த மாத்திரத்தில் அவள் மேல் காதல் கொள்கிறான். ஆனால் அவளுக்கோ.. இவனை பிடிக்கவில்லை. திருமணம் நடந்த்தா? இல்லையா? என்பதை உருக்கமாய் சொல்லியிருக்கிறார்கள்.

முதலில் மதுரைத் தமிழில் படமெடுத்து வந்திட்டாய்ங்க.. போய்ட்டாய்ங்க என்று காதறுக்கு மதுரை பாஷை இல்லாமல் கோவை பாஷை காதுக்கு குளிர்ச்சியாய் இருக்கிறது. முக்கியமாய் நாயகனின் தாய், ஆரம்ப காட்சிகளில் கொஞ்சம் குழப்பமாக இருந்தாலும் பின்னால் வரும் காட்சிகளில் நடந்து கொண்டே பேசி க்ளாப்ஸ் வாங்குகிறார். சின்ன கண்ணனின் நண்பர்களாய் வரும், வட்டிக்கு விடுபவன், படிக்காமல் சரக்கடிப்பதற்காகவே அலைபவன், வீடியோ, போட்டோ ஸ்டுடியோ நடத்திக் கொண்டே வரும் பிகர்களை கரெக்ட் செய்யும் அன்பு, அவனின் மச்சான், சிகப்பு ரோஜாக்கள் காலத்தில் இளைஞனாக இருந்து இப்போதும் பதினாறு வயது பெண்ணைத்தான் லவ் பண்ணித்தான் கல்யாணம் செய்வேன் என்றலையும் ஒருவன் என்று இயல்பான கிராமமும் நகரமுமில்லாத ஊர்களில் காணப்படும் கேரக்டர்கள். ஓரிரண்டு காட்சிகளில் கொஞ்சம் நாடகத்தனம் இருந்தாலும் நம்மை ஈர்க்கிறது. படத்தில் நடித்திருக்கும் எலலா நடிகர்களும் புதுமுகங்களாய் இருந்தாலும் கொஞ்சம் கூட தெரியாத அளவுக்கு பளிச், பளிச். முக்கியமாய் தண்டல் கொடுக்கும் நண்பன், அந்த காமெடி நண்பன், பஸ் நிறுத்தத்தில் நிற்கும் பெண், என்று எல்லா கேரக்டர்களும் மின்னுகிறார்கள்.

'உயிர் ஊருக்கு உடல் பாருக்கு' என்ற மன்றப் பலகை வாசகத்தில் ஆரம்பித்து, அம்சவேணியின் அதிரடி வசனங்கள் வரைக்கும் நம்மை பதம் பார்க்கிறது காமெடி! அதிலும் அப்போதுதான் வயிறு முட்ட சாப்பிட்டிருக்கும் சண்முகம், நண்பர்கள் குடிக்க அழைத்தவுடன் வயிறை காலி செய்வதற்காக எடுத்துக் கொள்ளும் முயற்சியும், அம்சவேணியின் காதலுக்கு பின் அவருக்கு நேரும் பரிணாம வளர்ச்சியும் தியேட்டரையே அதிர வைக்கிறது. நகைச்சுவை நாயகர்களில் நம்பிக்கைக்குரிய புதிய வரவு இந்த சண்முகம்!

கதாநாயகன் ஸ்ரீஹரிக்கு அறிமுகம் என்று தெரியாத அளவிற்கு நடிப்பு வருகிறது. ஆரம்பக்காட்சியிலும், இறுதிக் காட்சியிலும் நிறைவாய் செய்திருக்கிறார். கதாநாயகி நிஷாவின் முகம் கொஞ்சம் முத்தலாய் கோவைப் பெண் போலில்லாம அந்நியப்பட்டு இருந்தாலும் சிறீஹரிக்கும் அவருக்குமான காதல் காட்சிகளில் மிக இயல்பாய் பழக்கமாகிவிடுகிறார்

எழுதி இயக்கியவர் புதியவர் சூரியபிரபாகர். முதலில் படத்தின் களத்தை மதுரையிலிருந்து கோவைக்கு மாற்றியதற்கு வந்தனம். வந்திட்டாய்ங்க.. போய்ட்டாய்ங்க.. என்றுகேட்டுக்கேட்டு அலுத்துபோய்விட்டிருந்த நேரத்தில் கோவை.. இனிமை. ஆரம்ப காட்சியில் கொஞ்சம் கிராமம், அராத்து ரவுடிப்பையன், தண்ணி, குத்து பாட்டு, பைட் என்று சென்றாலும், இடைவேளை வரும் போது கதாநாயகியை அறிமுகப்படுத்தி நிமிர்ந்து உட்கார வைத்து விடுகிறார். நிச்சயக்கப்பட்ட பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் காதல் வருவது என்பது ஒரு புதிய முயற்சிதான் அதில் வெற்றியும் பெற்றிருக்கிறார்.

சிறீவிஜய்யின் இசையில் பின்னனியிசையை விட பாடல்கள் அருமை. அதிலும் சின்ன கண்ணனுக்கு காதல் பற்றி ஒரு உணர்வு வரும் போது வரும் பாடலும், தன் வருங்கால மனைவியை கொச்சியிலிருந்து அழைத்து *வரும் போது வரும் பாடலும் அசத்துகிறது . பின்னணியி*சையில் கொஞ்சம் கவனம் செலுத்தியிருக்கலாம்.

படத்தின் முடிவு சமீபத்திய யதார்த்தப்படங்களையே பிரதிபலிக்கிறது என்று சொல்லிவிட முடியாது, காரணம் சூரியா கதாபாத்திரத்தின் உணர்ச்சி நிலையை மிகத் தெளிவாக வரையறுத்து செல்லும் இயக்குனர் அதன் முடிவை அதன் போக்கிலேயே விட்டிருப்பதன் முடிவே இது

படத்துக்கும், படத்தலைப்புக்கும் சம்பந்தம் இல்லை. காதலியிடம் உள்ளத்தை அள்ளித்தா என கேட்பதாக வைத்து அதை சுருக்கி தா என வைத்திருக்கலாம். ஆனால் படத்துக்கு ராஜேஷ்குமாரின் நாவல் தலைப்பான இறந்தவன் பேசுகிறேன் என்ற டைட்டில் மிகப்பொருத்தமாக இருக்கும் ,ஆனால் கோடம்பாக்க செண்ட்டிமெண்ட் செம்மல்கள் அதற்கு ஒத்துக்கொள்வார்களா என்ன?

குடும்ப சினிமாவின் ஆதிக்கத்தினால் ஒரு நல்ல படம் மக்களுக்கு சேராமல் போய் விட்டது .

- அகிலன்

சினித்துளி

கமலின் அடுத்த கனவுப்படம்!

தசாவதாரம் படம் முடிந்தவுடன் எடுப்பதாக இருந்த தலைவன் இருக்கின்றான் பட்ஜெட்டின் காரணமாக தள்ளிப்போடப்பட்டது தொடர்ந்து மன் மதன் அன்பு என அடுத்தடுத்து பிஸியாகிவிட்ட கமல் மீண்டும் இப்போது 'தலைவன் இருக்கின்றான்' படத்தை எடுக்கும் முடிவுக்கு வந்துள்ளாராம். படத்தை ஹாலிவுட் நிறுவனத்துடன் இணைந்து கமலின் ராஜ் கமல் நிறுவனம் பெரிய பட்ஜெட்டில் தயாரிக்கவுள்ளதாம். இந்தப் படத்தை கமலே இயக்கலாம் என்றும் செய்திகள் கூறுகின்றன.

அல்லது கமலுக்கு பிடித்தமான இயக்குனர் யாரேனும் இயக்கலாம் என்றும் கமல் வட்டாரத் தகவல்கள் கசிகின்றன.

டாக்டர் விஜயகாந்த்!

முன்னாள் நடிகர் சங்கத் தலைவரும், தே.மு.தி.க தலைவருமான விஜயகாந்திற்கு International Institute of Church Management (IICM) டாக்டர் பட்டம் வழங்கி சிறப்பிக்கவுள்ளது. வரும் டிசம்பர் 3ல் சென்னையில் நடைபெறவுள்ள விழாவில் விஜயகாந்திற்கு இப்பட்டம் வழங்கப்படவுள்ளது. டாக்டர் பட்டத்தினை பெறுவதற்கு விஜயகாந்த் தகுந்த நபர் என்றும், அவருக்கு டாக்டர் பட்டத்தினை வழங்குவதை எண்ணி தாங்கள் மகிழ்ச்சி அடைவதாகவும் IICM தெரிவித்துள்ளது.

செல்போன் லைட்டை வைத்து சபரி படத்தில் சத்திர சிகிச்சை செய்த் விஜயகாந்த், தற்பொழுது உண்மையாகவே 'டாக்டர்' ஆகபோகிறார்.

பொன்னியின் செல்வன் தயார்!

அமரர் கல்கியின் 'பொன்னியின் செல்வன்' திரைப் படமாக உருவாவது கிட்டதட்ட உறுதியாகிவிட்டது. 125 கோடி என்ற பெரிய பட்ஜெட்டில் இப்படத்தை சன் தயாரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்படத்தின் திரைக்கதையை ஏற்கனவே உருவாக்கிவிட்ட மணிரத்னம், இப்படத்தை இயக்கவுள்ளார். இப்படத்தில் விக்ரமும், சூர்யாவும் நடிப்பார்கள் எனக் முன்பு கூறப்பட்டது. ஆனால் தற்பொழுது இப்படத்தில் நடிக்க சூர்யா விருப்பமில்லாமல் இருப்பதாக தெரிகிறது.

மணிரத்னம் படங்களில் இரண்டாம் நாயகர்களுக்கு பெரிய முக்கியத்துவம் இருக்காது என்பதால் சூர்யா நடிக்க விரும்பவில்லையாம்.

பொலீஸ் விசாரணையில் எந்திரன்!

எந்திரன் கதை விவகாரம் தொடர்பாக விசாரணைக்கு வருமாறு கூறி இயக்குநர் ஷங்கருக்கு போலீஸ் தரப்பிலிருந்து அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. இக்கதை எங்களுடைய படைப்பிலிருந்து திருடப்பட்டது என்று கூறி இரண்டு எழுத்தாளர்கள் புகார்களைத் தெரிவித்தனர். வாரப் பத்திரிக்கை ஒன்றில் பணியாற்றி வரும் ஆரூர் தமிழ்நாடன் என்கிற அமுதா தமிழ்நாடன், பிரபல சிறுகதை, தொடர்கதை எழுத்தாளரான ஆர்னிகா நாசர் ஆகியோர் இந்தப் புகார்களைத் தெரிவித்தனர்.

இந்த விவகாரம் குறித்து மத்திய குற்றப்பிரிவின், திருட்டு வீடியோ பிரிவு விசாரணைக்கு ஆணையர் ராஜேந்திரன் உத்தரவிட்டுள்ளார்.

அனைத்து வகையான இலங்கை இந்திய உணவுப் பொருட்கள், கடலுணவு வகைகள், பசுமையான மரக்கறி வகைகள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், மளிகைப்பொருட்கள் பாத்திர வகைகள், தமிழ், இந்தி சினிமா DVD, CD, VHS போன்றவற்றை தரமாகவும் நியாயமான விலையிலும் பெற்றுக்கொள்ள நீங்கள் நம்பிக்கையுடன் நாட வேண்டிய இடம்



கடல் கடந்து வாழ்கின்ற உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவதற்கும் அழையுங்கள்....
020 8905 7765

MARUTHI CASH & CARRY

15 - 17 Queensbury Station Parade Queensbury HA8 5NR

Tel: 020 8952 66 55 | 020 8381 3442 | Fax: 020 8905 7546

ஹாசியம் வாழ் மக்களே...
உங்கள் ஆதரவுக்கு..... எமது

நன்றிகள்

உங்கள் நம்பிக்கைக்கும் நன்மதிப்புக்கும்
உரிய நிறுவனமாக திகழ்வோம்

AVAILABLE NOW
1,2,3 BEDROOM
HOUSES
AVAILABLE NOW

Lee High Road,
London SE12 8RU
tel: 020 8852 5234

email: lee@bairstoweves.co.uk
www.bairstoweves.co.uk
www.rightmove.co.uk

வீடுகள் வாங்க... விற்க... வாடகைக்கு பெற...
அழையுங்கள்.....Raj: 020 8852 5234

OPEN 7 DAYS A WEEK

Bairstow eves
Countrywide

பாமஸ்கிறீன்
தமிழ் தேவ சபையின்
கிறிஸ்மஸ் நிகழ்ச்சிகளுக்கு உங்களை
அன்போடு அழைக்கிறோம்.

மேசியா

"எல்லா மனிதருக்கும் ஒரு நற்செய்தியாக
அபிஷேகம் பண்ணப்பட்டவர்."
18/12/2010 சனி மாலை 6.30 மணிக்கு

கிறிஸ்மஸ் ஆராதனை
24/12/2010 வெள்ளி
இரவு 11.00 மணி

புதுவருட ஆராதனை
31/12/2010 வெள்ளி
இரவு 11.00 மணி

ஞாயிறு ஆராதனை பகல் 2.00 மணி
உங்கள் தேவைகளுக்காய் ஜெபிக்க எங்களோடு
தொடர்புகொள்ளுங்கள்!

The Tamil Church of God
Palmers Green Baptist Church
211 Green Lanes, Palmers Green, London N13 4UH
020 8366 0583 / 07956 478093
www.thetamilchurch.com

MASS GLOBAL SHIPPING

Sea - Air - Road & Ticketing, Serving all the Sri Lankan Communities
MOST PROFESSIONAL SRI LANKAN SHIPPING COMPANY IN UK
Best Rate Guaranteed for Car Shipments 20ft & 40ft Containers

• Packers • Movers • Shippers

We Offer the Best Services than all the Other in the trade!

Special rates for Containers and Machinery

4 Collection Points:
Harrow, Warford,
Knightsbridege, Croydon

FREIGHT ONLY £15.00
FREIGHT AND BOX £15.00
(Volume 4.5Cu.ft)

Wooden boxes from £9.00
Call 0208 3862314
Hot Line 24/7- 079 4010 8177

Local Collection Charge £5.00 upto Hounslow. Within M1 collection charge £15.00 upto Conventry All other area's we will offer the best rates

MASS GLOBAL SHIPPING
Warehouse,652,VictoriaRoad Ruslip,HA40LN
E-Mail: info@massshipping.com, Web : www.massshipping.com

*Condition Apply
Warning No hidden charges
No brogous promotions

Meera Arnold & Co

for all your accounting needs...

Accountancy
Auditing
pay roll
book keeping
company formation

45 Chandos Ave, N14 7ES, Tel: 020 8882 2333

நீங்கள் இரத்தம் சிந்தி உழைக்கிறீர்கள் என்பது எமக்குத் தெரியும்

உழைத்தவற்றை ஊருக்கும் உறவுக்கும் கொடுத்து களைத்தீர்கள் என்பதும், எமக்குத் தெரியும்

ஒரு நாளில் உங்களுக்கு ஓய்வாகக் கிடைப்பது ஒண்டு ரெண்டு மணித்தியாலங்களே!

இதற்கு அதிகம் செலவழித்து தமிழ்த் தொலைக்காட்சிகளை பார்க்க முடியாது என்பதும் தெரியும்.

ஒரே ஒரு வழிதான் உங்களுக்கு உண்டு

சீவியம் முழுக்க உங்களால் பார்க்க முடிந்த தொலைக்காட்சிகளை பார்த்து மகிழ்ந்திட

அழையுங்கள்

020 7183 0367

புதிய சட்டிலைட்
இணைப்புகளுக்கும் அழையுங்கள்

இந்தப் பொட்டியின் தார்ப்பரியத்தை ஐரோப்பிய நாடுகளில் இருக்கும் உங்கள் உறவினர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளுங்கள்.

http://www.nallatv.com

இது ஒரு தமிழ் பெடியங்களின் தயாரிப்பு